www.padippakam.com

# தாமரை





1991
ஜனவரி.
விலை:
ரூ.2/-

## தஞ்சை மாவட்ட மலர்

படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# தாமரை



மலர் : 32 இதழ் : 7

ஜனவரி 91

நிருவக ஆசிரியர் :
ப. ஜீவானந்தம்

ஆசிரியர் :
ப. மாணிக்கம்

பொறுப்பு ஆசிரியர் ;
கே. சி. எஸ். அருணாசலம்

## தஞ்சை மாவட்ட மலர்



படிப்பகம்

www.padippakam.com

# வாங்க வந்தவன்

—டாக்டர். எழில் முதல்வன்

எடுத்துப் படிக்க ஏற்றது
'கிரௌன் சைஸ்' மட்டுமே.
ராயல் வடிவம்
கையாளக் கடினம்.
இது என்ன,
சுவரொட்டியா?
ஒவ்வோர் எழுத்தும்
கபால ஓடுபோல் கண் விழிக்கின்றன!
ஸ்பேஸ் மார்ஜின்
சகிக்க வில்லையே!
படித்தால்
விழிப்படலத்திற்கே
வியர்த்துக் கொட்டும்.
எடுத்துப் புரட்ட ஏற்ற மாதிரி
தாங்க வேண்டாமா?
'பேப்பர் பேக்'கா?
தாலே தடவையில்
தாராய்க் கிழியும்.
காலிகோ பைண்டிங்
காலத்தை வெல்லும்.
அட்டையில் கவர்ச்சி
மருந்துக்கும் இல்லை.
மேசையில் வைத்தால்
நாலுபேர்
மெச்ச வேண்டாமா?
டைட்டில் பக்கமும்
எடுப்பாக இல்லை.
"........?"
"வேறு பதிப்புத்தான் வேண்டும்!"
"நீங்கள் விரும்புவது போலவே
வேறு பதிப்பைக் காட்டுகிறேன்..."
"சார்...?"
"என்ன?..."
"கடைசியாக ஒரு கண்டிஷன்
நூலின் காப்பிரைட் முழுதும்
எனக்கு மட்டுமே
இருத்தல் வேண்டும்".

படிப்பகம்

www.padippakam.com

# சந்தன மாலையும் தஞ்சாவூர்த் தட்டும் தாம்பூலமும் ஏந்தி...

தாமரை வாசகர்களைத் தஞ்சைத் தயாரிப்பான சந்தன மாலை சூட்டி, வேலைப்பாடு மிகுந்த தஞ்சாவூர்த் தட்டை வழங்கி வரவேற்கிறது தஞ்சைத் தரணி.

காவேரி ஓரத்திலே கால்பதியும் ஈரத்திலே நெல்லை விளைப்பதுடன் நெஞ்சம் கொள்ளை கொள்ளும் கலைகளையும் செழிக்கச் செய்தது தஞ்சைப் பூமி.

இராசராசன் உருவாக்கிய தஞ்சைப் பெரிய கோயில் கல்லெல்லாம் கலை வடித்த மரபுக்குரிய சிறப்புச் சின்னம். இந்த மண் தான் தேவாரத்தைத் திரட்டிக் கொடுத்தது. இங்குத் தோன்றிய கம்பன் காவியக் கொடு முடியில் மானிடக் கொடியைக் கம்பீரமாகப் பறக்கவிட்ட அற்புதக் கவிஞன். வயல்வெளியில் இழைந்த நாட்டுப்புற நளினம் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்ற தென் பாங்குக் கவிஞனை ஈன்று கொடுத்த விந்தையும் இங்கே இந்த நிலத்தில்தான் நிகழ்ந்தது.

புதுகை திருச்சி மாவட்டங்கள் மேற்கெல்லை, தெற்கிலும் கிழக்கிலும் வங்கக் கடல். கொள்ளிடத்திற்குத் தெற்கில் பரந்து விரிந்து கிடப்பது எங்கள் மாவட்டம்.

பிற்காலச் சோழர்களின் தலைநகரான தஞ்சாவூரில் வீணைத் தொழில் பிரசித்தம். பாபநாசம், கும்பகோணம், திருபுவனம், மயிலாடுதுறை, கூறை நாடு - முதலான ஊர்களில் சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்திறி கைவண்ணம் காட்டும். திருபுவனம் பட்டுக்கு நாடு முழுதும் சந்தனத் தாம்பூலத்துடன் மங்கல வரவேற்பு. முற்காலச் சோழர்களின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம் பட்டினம் பூம்புகார் என்று பொலிவான பெயர் பெற்றது; என்றாலும் கடற்கோளில் அழிவின் வாய் வீழ்ந்தது.

சங்கீத மும்மூர்த்திகள் பிறந்த பெருமை பெற்றது திருவாரூர்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் வளர்த்த கல்லூரிகள் கரந்தையிலும் திருவையாற்றிலும் திருப்பனந்தாளிலும் தருமையிலும் பெரும்புலவர் பலரை உருவாக்கின.

கணித மேதை இராமானுசம் பிறந்த கும்பகோணம் கொழுந்து வெற்றிலைக்குப் பெரும் பெயர் பெற்றது. கோரைப்பாயை விதம் விதமாக நெய்து தருகிறது தொள்ளிடம். நாச்சியார் கோயில் வெங்கல, பித்தளைப் பாத்திரத் தொழிலுக்குப் புகழ் ஈட்டிய ஊர்.

இம்மாவட்டத்தின் ஒரே துறைமுகமான நாகப்பட்டினத்தில் இரும்பு உருட்டாலை உள்ளது. பக்கத்தேயுள்ள நாகூரில் முஸ்லீம்களின் புனித தர்காவும், வேளாங்கண்ணியில் புனித தேவாலயமும் மத எல்லை கடந்து எண்ணற்ற பக்தர்களை ஈர்ப்பவை.

நெப்போலியனை ஆங்கிலேயர் வென்றதற்கு அடையாளமாகச் சரபோசி மன்னன் நிறுவிய மனோரா அதிராம்பட்டினம் அலை பாடும் கடலோரம் அமைந்துள்ளது.

வாய்ப்புகையிலை விளையும் பகுதி வேதாரணியம். இப்பொழுது பரவலாக மல்லிப்பூ உற்பத்தியாகும் இப்பகுதியில் உப்பளத் தொழில் விரிவாக நடைபெறுகிறது. தஞ்சை மண்ணில் காடுகள் உள்ள பகுதியும் இது தான். கோடியக்கரை வரை அடர்ந்து படர்ந்துள்ள இக்காடுகளில் மான்கள், குதிரைகள் முதலிய விலங்குகள் ஏராளமாக வாழ்கின்றன.

அண்மைக்கால வரவாகிய தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச்சியைச் செழுமைப்படுத்தியுள்ளது. தஞ்சையில்தான் முதலாவது நடமாடும் நூலகம் இருந்ததாம். இதற்காகப் பயன்படுத்திய வண்டிகூட இன்னும் பல்கலைக் கழகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திருவையாற்றில் தியாக பிரம்ம உத்சவம் ஆண்டுதோறும் பக்தி


தஞ்சை மாவட்ட தாமரை மலருக்கு
நல் வாழ்த்துக்கள்!

போன் : 340

**ஜெமினி அச்சகம்**

மேலராஜ வீதி,
மன்னார்குடி




படிப்பகம்

www.padippakam.com

ததும்பக் கொண்டாடப்படுகிறது. இங்குதான் தென்னிந்தியப் பண் பாட்டு மையம் அமைந்துள்ளது.

நிலப்பிரபுக்களின் ஆதிக்கம் தஞ்சை மாவட்டத்தை இறுக்கிப் பிழிந்தது ஒரு காலம். கோயில்களும் நிலக்கிழார்களாக மாறிச் சுரண்டிய கொடுமை இங்கே அதிகம். சவுக்கடி, சாணிப் பாலுக்கு எதிராக முதல் கை உயர்த்திய வரலாறும் இங்குதான் உதயமாயிற்று. தோழர் பி. சீனிவாசராவ் தலைமையில் விவசாயத் தொழிலாளிகள் விழிப் படைந்து நாணலூரில் முதற் செங்கொடி சினந்து பறந்தது,

அரசியலில் தேசிய இயக்கத் தலைவர்களான க. சந்தானம், சர்தார் வேதரத்தினம், பொது வுடைமை இயக்க முன்னோடி களான பி. இராமமூர்த்தி, எம். காத்தமுத்து, மணலி கந்தசாமி, ஏ. எம். கோபு, களப்பால் குப்பு, சிவராமன், இரணியன், மலேயா கணபதி, திராவிட இயக்கத் தளபதிகளான இன்றைய முதல் வர் மு. கருணாநிதி, அமைச்சர் அன்பழகன், இரா. நெடுஞ் செழியன், எஸ். டி. சோம சுந்தரம் போன்ற பலர் தஞ்சை மண்ணுக்குக்குரிய பெரியோர்கள் ஆவர்.

கலைகளைப் பொறுத்தவரை றையவே நினைக்கலாம். சோழர் கள் அரவணைத்து வளர்த்த நாட்டியம், இசை, நாடகம், பொம்மலாட்டம். பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம். நந்தனார் கீர்த்தனை படைத்த கோபாலகிருஷ்ண பாரதியும் இராம நாடகக் கீர்த்தனைகள் பாடிய சீர்காழி அருணாசலக் கவிராயரும் சர்வசமயக்கீர்த்தனை இயற்றிய மாயூரம் வேதநாயகம் பிள்ளையும் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரிது.

சங்கீத மும்மூர்த்திகளும் திருவாவடுதுறை இராஜரத்தின மும் செம்மங்குடி பரம்பரையும் குடந்தை பண்ணிசை வித்தகர் சுந்தரேசனாரும் பாபநாசம் சிவ னும் தஞ்சைக் கலைக்களஞ்சியத் தின் தனித்தன்மை பெற்ற ஞான வித்துகள். தஞ்சைத் தட்டு வெள்ளியிலும் செம்பிலும் நளினக் கலை நவிலும். தஞ்சை தலை யாட்டி பொம்மையை அறியா தார் உண்டோ? நெட்டி வேலை கைவண்ணத்தால் தந்த வேலை யையும் விஞ்சியிருப்பதை வெளி நாட்டார் கண்டு வியக்கின்றனர்

காடு மேடெல்லாம் கால்கடுக்க நடந்து ஆங்காங்கே சிதறிக் கிடந்த ஓலைச் சுவடிகளை அச்சு வாகனம் ஏற்றிய டாக்டர் உ. வே. சாவும் சங்க இலக்கியங் களுக்கும் காப்பியங்களுக்கும் சால்புரை கண்ட பெருமழைப் புலவர் சோமசுந்தரனாரும் நற்றிணைக்கு நல்லோர் வியக்க நல்லுரை கண்ட பின்னத்துக்



படிப்பகம்

www.padippakam.com

நாராயணசாமியாரும் தமிழ்ப் புலவர் வரிசை எனும் தலைப்பில் அரிதின் முயன்று பல நூல்களைச் செய்த கருப்புகிளார் சு. அ. இராமசாமிப் புலவரும் தஞ்சை மண்ணின் புகழைத் தரணிக்கெல்லாம் பரப்பிய சான்றோர்கள் அல்லவோ?

புதிய வடிவில் தமிழ் ஆறு துங்கும் துரையுமாகப் பொங்கி வரும் புது வெள்ளத்தில் படகு செலுத்திய - பாய் உயர்த்திய எங்கள் ஊர் பேனாக்கள்: தி. ஜானகிராமன், கல்கி, தஞ்சை இராமையதாஸ், வடுவூர் துரைசாமி அய்யர், கூத்தா நல்லூர், சாரண பாஸ்கரன். எம், வெங்கட் ராம், கரிச்சான் குஞ்சு, எஸ். எஸ். வாசன், மணியன். பட்டுக்கோட்டை, சுரதா, பாரதிப் பித்தன், எழில்முதல்வன்......

---

# பொம்மலாட்டம்

நாட்டுப்புறக் கலைகளில் காலத்தால் முற்பட்டது இப்பொம்மலாட்டம். நாடக வடிவம் தோன்றும் முன்பே இக்கலைவடிவம் நன்கு வளர்ச்சி பெற்று இருந்தது. 'பாவைக் கூத்து' என்பதுதான் பழைய தமிழ்ப் பெயர். பொம்மலாட்டம் என்பது தெலுங்கு மொழி.

இக்கலை மூலம் இதிகாசக் கதைகள், பவளக்கொடி, வள்ளித் திருமணம், மனுநீதிச் சோழன், அருணகிரிநாதர் போன்ற கதைகள் நடத்தப்படுகின்றன. முயன்றால் இக்காலப் புரட்சிகரமான சிந்தனைகளையும் கதைகளாக்கி நடத்த முற்படலாம்,

இந்தப் பொம்மலாட்டம் நடத்த கதைக்குரிய பாத்திரங்கள் பொம்மைகளாகத் தயாரிக்கப்பட்டு நடத்தப்படுகிறது.குறைந்த பட்சம் எட்டுப்பேர் நாடகம் நடத்த தேவை. மூன்று பேர் சூத்திரதாரிகள். இவர்கள் வசனம், பாடல், அறிவிப்பு ஆகியவற்றைச் செய்வர். இருவர் பொம்மைகளைத் திரைமுன் ஆட்டும் வேலைகளைச் செய்வர். எஞ்சிய மூவர் ஆர்மோனியம், தபேலா, ஆல்ரவுண்ட் வேலைகளைச் செய்வர்.

அரசு இக்கலையை வளர்க்க தனது விளம்பரத்துறை மூலம் உதவிகளும் செய்து வருகிறது.

செய்தி உதவி:
'ஸ்ரீகணநாதர் பொம்மை நாடக சபா'
மயிலாடுதுறை.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் ஜீவாவால் தொடங்கப் பெற்ற காலத்தை அடுத்து தஞ்சை மாவட்டக் குழுவும் கிளைகளும் உருவாயின. சிறப்பாகவும் செயல்பட்டன. ஆரம்ப காலத்தையடுத்து அமரர் பாரதி பித்தன் மாவட்டச் செயலராகச் செய்த சேவை பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்கது. பெரியவர் அன்பு வேதாசலமும் தஞ்சை இராம மூர்த்தியும்பொறுப் பேற்று ஆற்றிய பணிகளை நன்றியுடன் பெருமன்றம் போற்றுகிறது. அமரர் தங்கபாலன் மாவட்டச் செயலராயிருந்து செய்த சீரிய தொண்டுகள் பெருமன்ற வளர்ச்சிக்கு எருவாயின. திருவாளர்கள் கவிஞர் வாய்மைநாதன் தலைவராகவும் மூ. முத்துவேல், அரு. கந்தசாமி, எழில்வேந்தன் ஆகியோர் செயலர்களாகவும் இருந்து ஆற்றிய நற்பணிகள் நலன்கள் பற்பல.

இன்று தலைவராகப் புலவர் அ. ப. பாலையனும், செயலராக மன்னை இரா. காமராசுவும் இருந்து மாவட்டப் பெருமன்றம் பழைய புகழை மீண்டும் பெற்று நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையுடன் வீறு நடை போட அயராப் பணியாற்றுகின்றனர்,

இம்மாவட்டக் குழுவின் கிளைகள் தேனீக்கள் போல் சுறுசுறுப்பாக இயங்குகின்றன.

திருவாரூர்க் கிளை கவிஞர் ஞானச் செல்வனைத் தலைவராகவும் புலவர் சந்திரசேகரனைச் செயலராகவும் கொண்டு ஆற்றும் ஆக்கப்பூர்வமான பணிகள் ஒப்பற்றன. 1990 ஜனவரியில் மாவட்ட மாநாட்டையும் வெண்மணித் தியாகிகள் நினைவு நாளையும் கொட்டும் மழையில் கொண்டாடியதுடன் நேரு நூற்றாண்டு நினைவாக 'மானிட விளக்கு' என்ற மகுடமிட்ட கவி மலரை வெளியிட்டதும் டாக்டர் கே. ஏ. ஜியின் கலை நிகழ்ச்சியை நடத்தியதும் இக்கிளையின் சாதனைப் பட்டியலின் கொடுமுடி ஆகும்.

மனிதநேய மணம் பரப்பும் தாமரைக்கு
வாழ்த்துக்கள்!

**பானு ரைஸ் & பிளவர்மில்**
**எட—கீழையூர்.**

**ஹாரூன் ரைஸ் & பிளவர்மில்**
**மன்னார்குடி.**



படிப்பகம்

www.padippakam.com

மன்னைக் கிளையின் தலைவர் மு. கலியபெருமாள், செயலர் சு. கணேசன். இதன் ஓயாத பணிகளை ஓராயிரம் முறை சொல்லலாம், மாதக் கூட்டங்கள், பாரதிவிழா, இலக்கிய வகுப்புகள் என்று வளரும் செயற்பாடுகளில் 1990 சூலை 7, 8 இல் நடந்த இலக்கியப் பயிற்சி முகாம் மகுட மணியாக மிளிர்கிறது.

நாகரெத்தினத்தைச் செயலராகப் பெற்ற முத்துப் பேட்டைக்கிளை 90 பிப்ரவரியில் நடத்திய பாரதி தர்சன் நூற்றாண்டு விழாவில் டாக்டர் கே. ஏ. ஜியின் கலை நிகழ்ச்சி விரிவான செல்வாக்கைத் தேடித் தந்தது. இதில் முன்னாள் செயலர் திரு. சிவ சிதம்திற்குப் பெரும் பங்குண்டு.

கவிஞர் மீனவன் தலைவராகவும், என். எம். ராஜா செயலராகவும் செயற்படும் நாகைக் கிளை பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை நடத்தியது. தொடர்ந்து விழாக்களை நடத்தி நாகை மக்களுக்கு முற்போக்கு இலக்கிய வேட்கையை உண்டு பண்ணி வருகிறது.

அண்மையில் தொடங்கப்பட்ட கூத்தாநல்லூர்க் கிளையின் தலைவர் உதயகுமார், செயலர் செழியரசு, இக்கிளை நடத்திய சாரண பாஸ்கரன் விழா பெற்ற வரவேற்பு மன்ற வளர்ச்சிக்குக் கட்டியம் கூறியது. மாணவ மாணவியர்க்குப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கியது சிறப்பான நிகழ்ச்சி.

வேதாரண்யம் வட்டாரக் கிளைக்குத் தலைவர் புலவர் வை. பழநிச்சாமி; செயலர் சதாசிவம் இக்கிளை 69 முதல் 76 வரை இருமாதக் கூட்டங்களை நடத்தியது; பெரிய அளவில் இலக்கிய விழாக்களைக் கொண்டாடியது.

வாய் மணக்க ரோஜா பாக்கு!
N.V.K.M. சன்ஸ், திண்டுக்கல்.
தாம்பூலம் சிறக்க கனி சீவல்!
கனிவிலாஸ், கும்பகோணம்.
மன்னை பகுதி விற்பனையாளர்:
A. நடராஜன்
36, கீழ் விளம்காரத்தெரு, மன்னார்குடி



படிப்பகம்

www.padippakam.com

எழுத்தாளர் சார்லஸ் செயல ராகவிருக்கும் குடவாசல் கிளை யும் எஸ். மனோகர், செயலர் பொறுப்பில் அமைந்த பட்டுக் கோட்டைக் கிளையும், அரு. கந்தசாமி தலைவராகக் கொண்ட மதுக்கூர் கிளையும், காவிரிச் செல்வனைச் செயலராகக் கொண்ட பாபநாசம் கிளையும் சிறப்பாக இயங்குகின்றன; சீரிய எதிர்காலத் திட்டங்களை வரை கின்றன.

இந்த மலருக்கு விளம்பரம் சேகரிப்பதில் தோளோடு தோள் சேர்ந்து உதவிய வை. முத்து, பெ. காந்திநாதன், சதாசிவம், மு. சந்திர சேகரன், எஸ். மனோகர், மா. சி. பூபாலன், முகிலன், செழி யரசு, மு. கலியபெருமாள் ஆகி யோருக்கு எங்கள் இதயமார்ந்த நன்றி!

இவ்விதழ்க்குப் படைப்புகளை வழங்கிய படைப்பாளிகளுக்கு இதய மலர்களைத் தூவி நன்றி சொல்கிறோம்.

ஆழமான இலக்கியச் சந்திப் பிற்கு வாய்ப்பளித்த முதுபெரும் எழுத்தாளர் கரிச்சான்குஞ்சு அவர்களுக்கும், முகப்பு ஓவி யத்தை எழில் ஒழுக வரைந்து கொடுத்த ஓவியர் ஆழி. வே. இராமசாமிக்கும் எங்கள் நெஞ்சம் பூத்த நன்றி மலர்களைச் சூட்டி மகிழ்கின்றோம்.

இந்த இலக்கியம் மணக்கும் இனிய மலரைத் தயாரிப்பதில் கவிஞர் வாய்மை நாதன், புலவர் அ. ப. பாலையன் கவிஞர் இரா. காமராசு, புலவர் மு. சந்திர சேகரன் ஆகியோர் மலர்க்குழு உறுப்பினராயிருந்து ஆற்றியுள்ள பணியை நேயர்களின் மகிழ்ச் சிக்கு நீராய்ப் பாய்ச்சுவதில் அகம் மிக மகிழ்கிறோம்.

இம்மலருக்கென வந்து குவிந்த படைப்புகளிலிருந்து தொகுத்த இந்தக் குறிஞ்சி மலர்க் கூடையை மலையே இல்லாத மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் உங்கள் கைகளில் தோழமை பூத்த பூரிப்புடன் வழங்குகிறோம்.

அன்புடன்,

***மலர்த் தயாரிப்புக் குழு***


பாடப்புத்தகங்கள், குறிப்புச்சுவடிகள் மற்றும் எழுது பொருள்கள் குறைந்த விலையில் தரமானதாக வாங்கிட...

**குறிஞ்சி தாளகம்**

***1. சந்தைப்பேட்டை.***
***புதிய பேருந்து நிலையம்***
***மன்னார்குடி.***

★




படிப்பகம்

www.padippakam.com

# வெண்மணியில் நடந்ததுதான் என்ன?

அ. ப. பாலையன்

***கீழத் தஞ்சை விவசாயத் தொழிலாளர்கள் :***

கீழத்தஞ்சையில் பெரும்பாலோர் விவசாயத் தொழிலாளர்களாகவும் சிறுபான்மையோர் நிலக்கிழார்களாகவும் பிளவுபட்டு வாழ்ந்து வருகின்றனர்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஆதி திராவிடர்கள்; கால காலமாக நிலப்பிரபுக்களுக்கு அடிமைகள். அவர்களுக்கு 'மனிதரில் நீயுமோர் மனிதன்' என உணர்த்தி வர்க்க உணர்வு ஊட்டி அடிமைத் தளையை அறுத்தெறிய வழி காட்டியது பொதுவுடைமை இயக்கம். 1945 முதலே தோழர் பி. சீனிவாசராவ் இவ்வியக்கம் கட்ட கீழத்தஞ்சையில் அரும்பாடு பட்டார்.

தலைமுறை தலைமுறையாக அடங்கி ஒடுங்கித் துண்டுத் துணியைக் கம்கட்டியில் வைத்துக் கொண்டு கோவணத்தோடு ஏழு முறை எசமான் காலில் விழுந்து எழுந்தவன் - வேலை செய்து வந்தபின் பந்தல் காலில் பல மணி நேரம் ஒற்றைக் காலில் நின்று கொடுத்த கூலியை வாய் பேசாமல் வாங்கிச் சென்றவன் - இன்று கட்சியில் சேர்ந்து தோளில் சிவப்புத்துண்டைப் போட்டுக் கொண்டு ஒன்றுபட்டு ஊர்வலம் போவதும் - வேலை நிறுத்தம் செய்வதும் - கூலி உயர்வுக்கு ஆண் பெண் ஒன்று சேர்ந்து போராடுவதும் .. சேச்சே... தஞ்சை நிலக்கிழார்கள் கனவில் கூட நினைக்காதவை.

விவசாயத் தொழிலாளர்கள் எல்லா இடங்களிலும் ஒன்றுபட்டுப் போராடியதன் விளைவாக அரசே முத்தரப்பு மாநாடு கூட்டிக் கூலி உயர்வு கொடுக்க சம்மதித்தது. ஆனால் நிலக்கிழார்கள் கூலி உயர்வு கொடுக்க மறுத்தனர்; கொடுத்தவர்களை மிரட்டினர். விவசாயத் தொழிலாளர்களோ குறைந்த கூலிக்கு வேலை செய்ய மறுத்தனர். நிலப்பிரபுக்கள் வெளியூர் ஆள்களைத் திரட்டி வேலை செய்ய முனைந்தனர். உள்ளூர்த் தொழிலாளர்கள் வெளியூர்க்காரர்களை வயலில்



படிப்பகம்

www.padippakam.com

இறங்காமல் தடுத்தனர். (ஏ.எஸ். கே - டாக்டர் அம்பேத்கார் பக் - 185)

சும்மா இருப்பார்களா ஆதிக்கம் செலுத்தியவர்கள்? 'விவசாயத் தொழிலாளர்களை ஒடுக்க வேண்டும்; அவர்கள் ஒற்றுமையைக் குலைக்க வேண்டும்; பண்ணையாள் முறையைத் தொடர்ந்து இருக்கச் செய்ய வேண்டும்; செங்கொடி இயக்க வளர்ச்சியைத் தகர்க்க வேண்டும்' என நினைத்தது நிலப் பிரபுத்துவம்.

## நெல் உற்பத்தியாளர் சங்கம்

விவசாயத் தொழிலாளர்களுக்கும் பொதுவுடைமை இயக்கத்திற்கும் எதிராகத் தாம் நினைத்தபடி மீண்டும் ஆதிக்கம் செலுத்த நிலக்கிழார்கள் உருவாக்கிய அமைப்பே நெல் உற்பத்தியாளர் சங்கம். இதன் தலைவர் இரிஞ்சியூர் கோபாலகிருஷ்ண நாயுடு. "இச்சங்கத்தில் காங்கிரஸ், தி க., தி.மு.க, முஸ்லீம் லீக் ஆகிய இயக்கங்களைச் சார்ந்தவர்கள் தத்தம் வேறுபாடுகளை மறந்து ஒரே அணியில் திரண்டனர். (வரதராசன் 'வெண்மணி' - பக் '15)

நெல் உற்பத்தியாளர் சங்கம் இரிஞ்சியூருக்குப் பக்கத்து ஊர்களில் எல்லாம் அடியாட்களோடு இரவில் சென்று பொதுவுடைமை இயக்கத் தோழர்களை அடித்து மிரட்டிப் பயமுறுத்தி நெ. உ. சங்க உறுப்பினர் ஆக்குவர், செங்கொடி இறக்கப்பட்டு அவர்கள் கொடியாகிய மஞ்சள் கொடி ஏற்றப்படும்.

முதலில் இரிஞ்சியூரில்தான் இவ்வேலைக்குப் பிள்ளையார்சுழி போடப்பட்டது. அப்பாவிகளான

தஞ்சை மாவட்டத் தாமரை மலருக்கு
மங்கல வாழ்த்துகள்!

என்றென்றும் அன்புடன்

மைதீன் A. கோவிந்தராஜன்

திருவாரூர்.

உரிமையாளர் :

நீலா ஏஜன்ஸீஸ், ராஜன் டிரேடிங்ஸ், கணேசா ரைஸ்மில். மைதீன் ரோடுவேஸ், மைதீன் ஜெனரேட்டர் சர்வீஸ், மைதீன் அரிசி மண்டி, செந்தில் கார்ப்பரேஷன்.



படிப்பகம்

www.padippakam.com

சிலர் நெ. உ. சங்கத்தில் சேர்ந்து நிலக்கிழாருக்கு விசுவாசிகள் ஆயினர். சேர விரும்பாதவர்கள் ஊரை விட்டு அடித்து விரட்டப் பட்டார்கள். அவர்கள் கதவு, நிலை, ஆடு, கோழி ஆகிய அனைத்தும் களவாடப்பட்டன. அன்று (1966) ஓடியவர்களில் சிலர் இன்றுவரை ஊர்ப்பக்கமே திரும்பி வரவில்லை. வழக்கம் போல் நிலப்பிரபுக்களின் இம் மாதிரி செயல்களுக்கு ஊறு நேராமல் பக்க பலமாக இருந்து பாதுகாப்புத் தருவது காவல் துறைதான்.

பெருந்தலைக்குடி, இருக்கை, கோட்டூர், எரைத்தான்குடி, வடுகச்சேரி, ஆலங்குடி ஆகிய கிராமங்களில்வலுக்கட்டாயமாகச் செங்கொடி இயக்கத்தைப்பிளந்து நெல் உற்பத்தியாளர் சங்கம் வளர்க்கப் பட்டது. (இவ்வூர்கள் அனைத்தும் தலைவர் கிராமத்தைச் சுற்றியுள்ள ஊர்கள்)

## எதிர்ப்புணர்வு

நெல் உற்பத்தியாளர் சங்க மிரட்டலுக்குப் பயப்படாமலும் துணை போகாமலும் எதிர்ப்புக் காட்டியோர் தேவூர், வெண்மணித் தோழர்கள். காரணம் இவ்வூர்களின் விவசாயச் சங்கக் கிளைகள் வலுவானவை. அஞ்சா நெஞ்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டவை.

இதனால் நெ. உ. சங்கத் தலைவருக்கு இவ்வூர்களின் தொழிலாளர்கள் மீது ஒரு கண் விழுந்தது. இவர்களை அடக்கத் தனிக் கவனம் செலுத்தினார். போலீஸ் துணையோடும் கைக்கூலிகளின் பலத்தோடும் தம் ஊர்த் தொழிலாளர்களை ஒடுக்கி விட பல்வேறு முயற்சிகளில் இறங்கினார். அடிக்கடி முரண்பாடுகள் மோதல்களாக மாறி சிறுசிறு வழக்குகளாகத் தொடர்ந்தன.

## சங்கிலித் தொடர் சம்பவங்கள்

1. நெ. உ. சங்கத் தலைவர் மருமகன் கோவிந்தராசன் 1965 இல் ஊராட்சி மன்றத் தலைவராக விரும்பினார். அவரை எதிர்த்துக் கோவிந்தராசு பொதுவுடைமை இயக்கத் துணையோடு வென்றார். இது தலைவருக்குக் கோபமூட்டியது. சில நாள்களில் கோவிந்தராசு வைக்கோல் போர் கொளுத்தப்பட்டது.

2 கோவிந்தராசன் தோற்கக் காரணமாக இருந்த தோழர் இ. ராமையன் மீது உளுந்து திருடியதாகப் பொய் வழக்குப் போட்டுச் சிறையிலிட்டனர். (இத்தோழர் வெண்மணி வழக்கில் ஏழாண்டுகள் தண்டனை பெற்றவர். எனக்குப் பேட்டியளித்தபோது மயிர்க்கால்கள் குத்திட உணர்ச்சியோடு நடந்த சம்பவங்களை அடுக்கடுக்காக விவரித்தார்)



படிப்பகம்

www.padippakam.com

3 இரிஞ்சியூர் சின்னபிள்ளை எனும் தோழர் 75 அணக்குடி ஊராட்சிமன்ற உறுப்பினர். தலைவர் கோபால கிருஷ்ண நாயுடு. தலைவர் அனுமதி இல்லாமல் பொது இடத்தில் தோட்டம் போட்டார் என்பதற்காக சின்ன பிள்ளை காணாமல் போனார். இன்றுவரை அவருடைய எலும் பைக்கூட யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை.

4 நெ. உ. சங்கத் தலைவருக்குத் தலையாரியாகவும் கையாளாகவும் இருந்து கொண்டு இருக்கை பக்கிரி என்பவர் விவசாயத் தொழிலாளர்களுக்கு அடுக்கடுக்கான தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருந்தார். இதனால் பல வகைகளில் பாதிக்கப்பட்டவர்கள் அவர் மீது கோபமும் வெறுப்பும் கொண்டிருந்தனர். நெ. உ. ச. தலைவர் அரவணைப்பில் பக்கிரியின் திருவிளையாடல்கள் அதிகரித்துக் கொண்டே போயின. ஒரு நாள் தொழிலாளர்களுக்கும் பக்கிரிக்கும் ஏற்பட்ட மோதலில் பக்கிரியின் தலைதரையில் உருண்டது. இதனால் மிகவும் கொதித்தெழுந்த நிலபிரபுத்துவம் சிக்கலில் பக்கிரிசாமி எனும் தோழரையும் கேக்கரையில் ராமச்சந்திரன் எனும் தோழரையும் பலி வாங்கிக் கொண்டது.

## அன்று நடந்தது

1968 டிசம்பர் 25

இத்தகைய தொடர் சம்பவங்களால் இரண்டு பக்கத்திலுமே கோபம்-குமுறல்- பாய்ச்சல்... எந்நேரத்திலும் ஒரு பெரிய கலவரத்திற்கான சூழ்நிலை. நெ. உ. ச. தலைவர் எப்போதும் அடியாட்களைத் திரட்டி வைத்திருந்தார். விவசாயத் தொழிலாளர்களும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்

தரமான மளிகைப் பொருள்கள்!
மலிவான விலையில்
வாங்க சிறந்த இடம்
TKNM மளிகை
மார்க்கெட் ரோடு: திருவாரூர்
தொலைபேசி:
கடை : 2241
வீடு : 2827



படிப்பகம்

www.padippakam.com

துப் பொறுக்க முடியாத போது பொங்கியெழுவதுமாக இருந்தனர்.

நெ. உ. ச. தலைவருக்கு மசியாமல் இயக்க ஈடுபாடு மிகுதியாகக் கொண்ட தோழர் முத்து சாமி நெடுஞ்சாலை ஓரத்தில் டீக் கடை வைத்திருந்தார். அவரைச் சம்பவத்தன்று மாலையில் நிலப் பிரபுவின் கைக்கூலிகள் கடத்திச் சென்று இராமானுசம் நாயுடு என்பவரின் வீட்டில் ஓர் இருட்டறையில் அடைத்து வைத்தனர்.

இதனைக் கேள்வியுற்ற கீழ வெண்மணித் தோழர்கள் ஒன்று திரண்டு வந்து இராமானுசம் வீட்டைத் தாக்கி முத்துசாமியை விடுவித்தார்கள். எதிர்க்க வந்த நிலக்கிழார் கையாள் இராமசாமி மோதலில் தலை சாய்ந்தார்.

இச்சமயத்தில் மோதல் நடந்த இடத்திற்கு வந்த போலீஸ் வேன் கொலையுண்டவரைத் தூக்கிக் கொண்டு உடன் திரும்பி விட்டது.

இதற்குள் இரிஞ்சியூரிலிருந்து நெ. உ. சங்கத்தினர் ஒன்று திரண்டு ஈட்டி, துப்பாக்கி, வேல் கம்பு, அரிவாள் ஆயுதங்களோடு எதிர்ப்பட்ட ஆண், பெண், குழந்தைகள் ஆகிய விவசாயத் தொழிலாளர்களைச் சகட்டு மேனிக்குத் தாக்கத் தொடங்கினர்.

விவசாயத் தொழிலாளர்களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள கையில் கிடைத்த கம்பு கழிக ளோடு போராடினார்கள். கற்களை வீசினார்கள். இன்று தூபி உள்ள இடம் ஒரு போர்க்களமாக காட்சியளித்தது. கைக்கூலிகள் துப்பாக்கியால் சுட- ஆயுதங் களால் வெட்ட—அலறிப் புடைத்த சேரிமக்கள் நிலை குலைந்து ஆடைகள் குலைந்து—குண்டுக்காயங்களோடு— தலை விரிகோலமாகக் கீழ வெண்மணியிலிருந்து மேலவெண்மணிக்கு ஓடினார்கள். ஓட முடியாத பெண்களும் குழந்தைகளும் சில ஆண்களும் ஒதுங்கியிருந்த பண்டரி என்பாரின் ஒற்றைக் கதவையுடைய குடிசைக்குள் பதுங்கிக் கொண்டார்கள்.

தொழிலாளர்கள் காலி செய்த குடிசைகளைக் குண்டர்களும் வெறியர்களும் எண்ணெய் ஊற்றித் தீ வைத்துக் கொண்டே முன்னேறினார்கள். பண்டரி குடிசைக்குள் உயிருக்குப் பயந்து ஒதுங்கியிருக்கும் அபலைகளைக் கண்டதும் கொக்கரித்துக் கூத்தாடிக் குடிசையின் நான்கு புறமும் முற்றுகையிட்டுத் தீ வைத்தார்கள். தப்பியோட நினைத்தவர்களையும் மீண்டும் தீக்குள் தூக்கியெறிந்தார்கள்.

மாடாய் உழைத்து மண் வெட்டியாய் தேய்ந்த உழைப்



படிப்பகம்

www.padippakam.com

பரணி—மக்கள் ஓவென அலறி— இரைச்சலிட்டு வெந்து தணிந்தார்கள் அக்குடிசையோடு.

## எப்போது மறையும்?

சுரண்டப்படும் வர்க்கம் சுரண்டும் வர்க்கத்திற்கு அடிமையாக இருக்க மறுக்கும்போதும் அரசே ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேற சலுகைகள் வழங்க நினைக்கும் போதும்(தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகை கோரி அம்பேத்கர் போராடியபோது நடந்த சம்பவங்களையும் மண்டல்!குழு அறிக்கை அமலாக்கத்தை அரசு அறிவித்த போது வடமாநிலங்களில் ஆதிக்கக்காரார்கள் நடத்திய போராட்டங்களையும் இங்கு நினைவு கூர்தல் நலம்) வரலாற்றில் இது போன்ற (வெண்மணி) சம்பவங்கள் ஆதிக்கச் சக்திகளால் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. இச்சம்பவங்கள் நடப்பதை மதங்களோ சாதி அமைப்புகளோ மேல்பூச்சான அரசு அளிக்கும் சில சலுகைகளோ (இலவசங்கள்) தடுத்து நிறுத்தி விட முடியாது. சுரண்டப்படும் மக்கள் அனை வரும் மதம், சாதி, இனம், மொழி ஆகிய பாகுபாட்டைக் கடந்து ஒன்று பட்டுப்போராடி இச்சுரண்டல் சமுதாயத்தைச் சுரண்டலற்ற சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும். அச்சமுதாயத்தில் மட்டும்தான் எல்லாருக்கும் சமூக நீதி கிடைக்கும். அப்போதுதான் வெண்மணிச் சம்வங்கள் நடப்பது மறையும்'

(நன்றி: இக்கட்டுரை எழுத பல தகவல்களைத் தந்த நண்பர்கள் திருவாளர்கள் காத்தமுத்து, இராமையன் (வெண்மணி) பி' காத்தையன் (சாட்டியக்குடி) பெயர் குறிப்பிட விரும்பாத இருவர் ஆகியோர்க்கும் வெண்மணி படுகொலை, வெண்மணி ஆகிய சிறு வெளியீடுகளைத் தந்துதவிய தோழர் சேகருக்கும் நெஞ்சார்ந்த நன்றி)

---

# யாருக்காக?

சனாதனங்களுக்கு
மகுடாபிஷேகம்
செய்வதற்காக...
சந்நிதானங்களுக்கு
ரத்தாபிஷேகம்
செய்யத் துடிக்கிறாயே!
ஏ, மனிதனே,
வழிபடுவதற்காக
யாரை விட்டு வைக்கப் போகிறாய்?

—மு. கரி. முத்து
இராமச்சந்திரபுரம்

படிப்பகம்

www.padippakam.com

# எழுதுவோம் புதுகணக்கு!

—கவிக்கோ ஞானச்செல்வன் எம்.ஏ., எம்.எட்.

எல்லாமும் எந்தமிழில் இருக்கின்ற தென்னுமொரு
இறுமாப்பில் இருந்தோமே நாம்!
சொல்லழகும் பொருளழகும் சுவையழகும் தினமகிழ்ந்து
சோம்பல் மிகக் கொண்டோமே நாம்!
வல்வழக்கு வம்புகளில் வசமிழந்து நலமிழந்து
வாழும்வகை மறந்தோமே நாம்!
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே மூத்தபழம்
கணக்கிலே திளைத்தோமே நாம்!
செந்தமிழை மேம்படுத்தத் திக்கெல்லாம் செல்கவெனத்
தெளிந்தமொழி மறந்தோமே நாம்!
சிந்தைக்கும் செயலுக்கும் தினையளவும் ஒவ்வாத
செயற்கைவழி வகுத்தோமே நாம்!
உந்துகின்ற உணர்வுக்கும் உயிர்ப்புக்கும் தமிழென்று
உதட்டாலே மொழிந்தோமே நாம்!
தந்திரமே தந்திரமாம் சதுரர்களாய் மாறிவிட்ட
தமிழ்ப்பாதை கண்டோமே நாம்!
உலகெலாம் நந்தமிழர் உயர்வுக்குத் திட்டமிடும்
உயர்வழியைக் கண்டோமா நாம்?
அலகிலாப் புதுமைகள் அன்றாடம் மலர்ந்திட
அறிவியல் வளர்த்தோமா நாம்?
விலகிலாத் துன்பமாம் ஈழத்துத் தமிழனின்
விழிநீரைத் துடைத்தோமா நாம்?
நிலவிடும் தமிழ்க்கலை இலக்கியப் படைப்பினில்
நீள்வெற்றி கண்டோமா நாம்?
வித்தகர் ஞானியர் விளங்குபே ஏறிவினர்
வேதங்கள் சாத்திரங்கள்
சித்தர்கள் முத்தர்கள் தீரர்கள் சூரர்கள்
தேடிய புகழின்கூட்டில்
எத்தனை காலம்நாம் குளிர்காய எண்ணுவோம்
என்னுயர் தமிழ்மாந்தரே!
இத்தனை காலமும் இருந்ததை மறந்துநாம்
எழுதுவோம் புதுக்கணக்கு!



படிப்பகம்

www.padippakam.com

# கருணையின் நிறம் காக்கி

—வாய்மைநாதன்

"உருண்டை மணியடிக்க
உருட்டி விடும் மோட்டாரு
உருட்டி விட்ட டிரைவர்களா
உண்மை சொன்ன மன்னர்களா
குத்தம் நடந்ததென்ன கொலைக்
கேசு ஆனதென்ன?
கோர்ட்டாரே எங்களப்பா
கூட்டம் வெலக்கிடுங்க
குடலு தரிச்சதொரு கொற்ற
வனைப் பாத்திடுறேன்!"

அம்மாளு ஓங்கிப் புலம்பினாள். ஆத்திரம், சோகம் தொண்டை கட்டிக்கொண்டது. அந்தக் கொடியில் அரும்பிய ஒரே மொட்டு இதோ பூட்சுக் காலில் அகப்பட்டதுபோல் நசுங்கிக் கிடக்கிறது.

கொடுமை.

பனி நேரத்துக் காலைச் சூரியனின் கொட்டாவி. சுள் ஏறாத வெயிலை இலட்சியம் செய்யாத ஈரம் சர்வோதயப் கதர் நிலையத்தின் முகப்புச் சுவருக்கு இப்பால் நீண்டிருந்த குறட்டுத் திண்ணையில் கசிவுப் பாய் விரித்திருந்தது. 'ஈரம் என் தோழன்' என்ற உரிமைப் பிரகடனத்தோடு அந்தக் குறட்டின் வடக்கு விளிம்பில் ஓடி வந்து அமர்கிறான் சுக்குரு.

திரும்பிப் பார்த்தான். நேர் பின்னால் காந்தி முகம் சுவரில் சிரிக்கிறது. 'குளிரவில்லையா உமக்கு?'

அவன் கை ஓர் அவித்த பனங்கிழங்கை அம்மணமாக்கிக் கொண்டிருக்க, கக்கத்தில் இன்னொரு கிழங்கு.

சுக்குரு. சுப்பிரமணியனின் வாமனாவதாரம்; கையிலிருக்கிற பனங்கிழங்கைப் பிளக்கத் தொடங்கினான்.

உங்களுக்குத் தெரியுமா? பனங்கிழங்கு தின்பது ஒரு தவயோகச் சாதனை. மேற்போர்வையை நீக்கித் தூக்கி எறிவது. கிழங்கின்



படிப்பகம்

www.padippakam.com

புட்டத்தில் நறுக்கென்று ஒரு கடி. தூ. உச்சியிலிருந்து கீழாக ஒரு கிழி. சர். இரண்டு பிளப்பிற்கும் நடுவே குருத்து உதயமாகும். அதை இழுத்து வாய்க்குள் வைத்தால், அதன் மெல்லிய முனையைப் பற்கள் சிரச் சேதம் செய்து நாக்கு சிம்மாசனத்தின் மீது பொசுக்கென்று கிடத்தும். இரு பிளப்பையும் சமமாய் வகிர வேண்டும். கிழிப்பில் ஓரம் கட்டினால் 'சமர்த்து போதாது.' ஒரு பிளப்பின் அடியிலிருந்து முதல் துண்டைக் கணிசமாக ஒடித்தால், அது பந்த பாசங்களோடு விடுதலை பெறும். அதன் குடுமியைப் பிய்த்தெறிந்து, உடனே எச்சில் மொட்டையும் அடித்தால், கடுந் தவத்தின் முடிவில் அடைகிற ஞானானுபவம்போல் பிசிறில்லாத விழிப்பான துண்டு தீனிக்குத் தயார்.

பனங்கிழங்கு ஆயி இரவு அவித்து வைத்தது. சுக்குரு விழித்ததே அதன் முகத்தில்.

சங்கே ஊதாமல் ஆலையைப் பூட்டியாயிற்று. கிழங்கின் சுற்றளவில் கஞ்சத்தனம் இல்லை. முதல் துண்டைக் கடைவாய்ப் பற்களுக்கு நடுவே படையலிட்டான். தொண்டையிலிருந்து 'ஙய்ங்' என்ற ஓசை ஒத்தூதத் தொடங்கியது.

கிழங்கா? கரும்பு.

ஒரு துண்டை அரைத்து முடித்து, துப்பி விட்டு, மறு துண்டை வாய்க்குள் திணித்து— சீ, யாருக்கு வேண்டும் இந்த ரேஷன் கடை வரிசை? எரிபொருள் சிக்கனம் அவனுடைய ஆலைக்குப் பொருந்தி வராத சட்டம்.

முதல் துண்டு உள்ளே போனதும் பற்களால் இரண்டே வெட்டு. உடனே அடுத்த துண்டு இப்படி அடுத்தடுத்து வாய் பிதுங்கும் அளவு செலுத்தினான் சுக்குரு. கன்னப் பக்கம் கிழிந்து விடும்போல் பிதிர்ந்தது.

சுவை சுவை...அத்வைத சாதனை.

பனங்கிழங்கும் அதன் ருசியும் தனி உலகம். சுக்குரு அந்த உலகத்தின் சக்கரவர்த்தி. அங்கிருந்து அவன் இந்த பூலோகத்தின் முகம் மீது துப்பு துப்பு என்று துப்புகிறான்.

அவன் கொலு மண்டபத்தில் வீணையின் பூபாள இசை 'ஙய்ங்'

மகாராசா முன்னிலையில் சாமரம் வீசுவதுபோல், நான்கு ஐந்து ஈக்கள் இந்தக் கடைவாய்க்கும் அந்தக் கடைவாய்க்கு மாய்ப் போய்ப் போய்த் திரும்புகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

அதிகாலை முரசுக்கும் அங்கு பஞ்சமில்லை. அதுவும் முழங்கு கிறது—!

வடக்கே திடீரென்று ஓடத் துவங்கிய டிராக்டரின் உறுமல்.

இந்த டிராக்டர் பக்கத்து ஊர்ப் பண்ணையின் உழவு மாடு. 'அக்ரிகல்சர் பர்பஸ் ஒன்லி' அது பொழுது போக்காக நகரத்திற்கு வரும். என்ன காரணமோ நேற்று மாலை மரியாதை எல்லாம் தடபுடலாகிறது.

லாரிக்கும் பஸ்ஸுக்கும் பெயர் வைப்பதுபோல் பண்ணை தன் டிராக்டருக்கும் நூதனமாய்ப் பெயர் சூட்டியிருக்கிறார்: 'துணிவே துணை'

அது இப்பொழுது ''தட தட' என்று தெற்கு நோக்கி ஓடி வருகிறது. அதன் ஓட்டத்தில் வெறி, கட்டுப்பாட்டுப் பஞ்சம், விரியன் பாம்புபோல் சாலை முழுதும் உழுதுகொண்டு விரைகிறது.

சுக்குருவின் சாம்ராஜ்யத்தில் பின்னணி இசையோடு விருந்து நடந்து கொண்டிருக்கிறது.

டிராக்டரில் டிரைவர் ஆசனத்தை ஒரு பொடியன் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான். பென்சில் மை தயவில் பிறந்த மீசை. டிரைவருக்கு இவன் 'கோ-பைலட்'டோ?

நடப்பு இது: டிரைவர் காலைச் சிற்றுண்டிக்காக முனியாண்டியைப் பேட்டி காணப் போயிருக்கிறான். அந்தச் சமயத்தில் இவன் டிராக்டரை நகர்த்திவிட்டான். இரண்டொருவாரமாக இவன் டிராக்டர் ஓட்டக் கற்றுக்கொள்கிறான். பண்ணை வீட்டுப் பிள்ளைக்குத் துரோணாச்சாரியார் ஆவதில் டிரைவருக்குக் கட்டில்லாத ஆனந்தம்.

பண்ணை வாரிசுகளுக்கு எந்தப் படிப்புமே 'டெட்-ஸ்லோ' என்ற சூத்திரத்தால் அளக்கப்படும். இவனும் அந்த ரகந்தான். வீட்டிலே காசுத் திமிர்க்கு இறக்கைகள் அதிகம். அது இப்பொழுது படிப்பில்லாமலே பாஸ் கேட்கிறது.

அனாயாசமாக விரல்கள் ஸ்டியரிங்கைக் கொண்டு வட்டம் போடுகின்றன.

எடுத்த எடுப்பில் 'கீர்' நடுநிலை பிறகு முதல் 'கீர்' இவை டிரைவர் கற்பித்த அரிச்சுவடி. கீதோபதேசம் இந்த விஜயனுக்கு மறந்து போயிற்று. மௌனத்திலிருந்து நேரே 'கீர்' இரண்டுக்குத்தாவி மூன்றை நோக்கிப் பாய்ந்தது. ஆக்ஸிலேட்டரையும் 'ஓவரா'க் கொடுத்தான். வண்டி தடுமாறி ஓடியது.

சுக்குரு தன் அப்பா இருளனை நினைத்துக்கொண்டான். 'அவரும் குடித்துவிட்டு இப்படித்தான் ஒருநாள் சாலையையே அளவை செய்தார்.'



படிப்பகம்

www.padippakam.com

கோணல் மாணல் வேகம். பென்சில் மீசைக்கு உள்பதற்றம் கருக்கொண்டது. 'கிளட்'சிலே இருந்த காலை அவசரமாக அகற்றினான். டிராக்டருக்கு மலேரியாக் காய்ச்சலா? அலுங்கிக் குலுங்கியது. 'பிரேக்'கை மிதிக்கிற புத்தியைக் கண்ணுக்கு எட்டிய தூரத்திற்கும் காணோம். டிரைவரிடம் படித்துக்கொண்டவை மறதிப் பால் குடிக்கின்றன.

சர்வோதயம் கதர் விற்பனை நிலயத்திற்குச் சில அடி தூரத்தில் டிராக்டர் கங்காருக் குதிப்பில் வருகிறது.

சுவரில் சிரிக்கிற காந்தியை எரிச்சலோடு பார்த்தான் பண்ணை வீட்டுப்பிள்ளை.

ஓர் உறுமலோடு தேவைக்கு மேலாக ஸ்டியரிங்கை ஒடித்தான் ப.வி.பி. ஸ்டியரிங் 'ரிடர்ன்' ஆக மறுத்தது. டிராக்டர்தான் செங்கோணமாய் 'டர்ன்' ஆகிப் பொலிகாளைபோல் காந்தி சித்திரத்தைப் பார்க்கப் பாய்ந்தது.

'சிரிப்பா?'

இமை கொட்டும் நேரத்திற்கும் குறைந்த வினாடி. டிராக்டர் குறட்டு முனையில் 'டமார்'.

பனங்கிழங்கின் சுவையில் சாம்ராஜ்யம் பண்ணிக் கொண்டிருக்கிற சுக்குருவை,

பனங்கிழங்குபோல்,

இடுப்புக்குக் கீழே 'கொஸ்து' மாதிரி குழப்பிவைத்திருந்த டிராக்டர்.

மோதிய வேகத்தில் மூச்சை நிறுத்திக் கொண்டது.

டிராக்டரும் சிமென்டுக் குறடும் பிடித்த பிடி நடுவில் சிக்கிய அந்தக் கருங்குயில் தலைகீழாகச் சரிந்து தொங்கிக் கொண்டிருந்தது.

சுக்குருவின் சாம்ராஜ்யத்திற்குத் துக்க விடுமுறை.

★

"முத்தப் பயறொட்டைச்சி
முத்தமெல்லாம் பந்தலிட்டேன்
முத்தமெல்லாம் பந்தலிலே
முகம் தெரிஞ்சாப்
போதும்பேன்."

இரண்டு பூவசரங் கம்புகள் நடுவில் பச்சைத் தென்னங்கீற்று நீளமாய்ப் படுத்திருந்தது.

சுக்குருவுக்கு மஞ்சம் தயார்.

சவப் பரிசோதனை என்ற தவிர்க்க முடியாத சடங்கிற்குப் பிறகு, பெண்கள் நடுவில் ஒப்பாரி ஓலங்கள், ஓங்கிய குரலில். ஆத்திர வெடிப்பாய், வெறும் சம்பிரதாயமாகவும் 'ராசாவே' பல்லவிகள். 'ஆஅஅ' ஆலாபனம். மூர்ச்சை தெளிந்தெழுந்தாற் போல் சிலர் வேதாந்தம் பேசுகிறார்கள்.

ஆண்களுக்கு மத்தியில் குமுறலும் செய்வதறியாத கோபமும்



படிப்பகம்

www.padippakam.com

விரவின. போலீஸ் கேஸ் 'கூலிக்காரன்னா லேசாப் பூட்டுதா...?' தோள் புடைப்பு.

அவர்கள் கரூர் இறக்குமதி ஒட்டர்கள். சாலை வேலை செய்ய இங்கு வந்தவர்கள்; கட்டை மண்வெட்டியின் காதலர்கள். காண்டிராக்டர் தங்கதுரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகளுக்குச் 'சவரம்' செய்கிற திருப்பணியில் இவர்கள் தற்காலம் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள்.

இருளனும் அம்மாளும் தங்கள் ஒரே பிள்ளையை அள்ளிக் கொடுத்துவிட்டு அலங்கோலப் பட்டு நிற்பது அதைவிடத் தற்காலம்.

ஆவேசத்தின் 'டிகிரி' கொதி நிலையை நோக்கி எவ்விக் கொண்டிருந்த நொடியில் காண்டிராக்டர் தங்கதுரை அவ்விடத்திற்கு விரைந்துவந்தான். கருப்பு உடம்பு. தங்கநிற டெட்ரக்ஸ் சட்டை. செவ்வகமான முகம். விரைப்பான முடியில் நரை 'ஸ்கெச்' பண்ணிக்கொண்டிருந்தது.

- சாலையோரத்து அடுப்புகளே அந்தத் தொழிலாளிகளின் குடியிருப்புகளுக்கு அங்கீகார அடையாளங்கள்.

நாட்டாண்மை பக்கிரி ஒப்பந்தக்காரருக்கு முன்னால் கேள்விக் குறியானான். முழங்கால், இடுப்பு, முதுகு, பிடரி முழுவதும் வளைவுகள்.

தங்கதுரை பக்கிரியை நோக்கிக் கண்ணசைத்து விட்டு விலகிப் போனான். பக்கிரி பின் தொடர்ந்தான். ஒதுக்கமான சந்து.

அது வியாசன் கண்ணில் அகப்படாத இன்னொரு கிருஷ்ண பரமாத்மா-அசுவத்தாமா சந்திப்பு.

பேரங்கள், பரிமாற்றங்கள்-?

தங்கதுரையின் வசதி 'எர்த் வொர்க்' பெற்றுக் கொடுத்த இலட்சங்களாய்க் காய்த்திருந்தது. என்றாலும் இவன் பண்ணை விட்டுப் பந்தல்கால் அளவுதான். அங்கு பிறக்கிற உத்தரவுகள் 'எமெர்ஜென்ஸியாகவே' இருக்கும். இவன் அவற்றை எடுத்து விலங்காகப் பூட்டி மகிழ்வான்.

பக்கிரி மட்டும் திரும்பினான் பல்லெல்லாம் இளிப்பாக. மடிக்குள் கொத்தாக இருகட்டோ, மூன்று கட்டோ டிராக்டர்கள் மொடமொடக்கின்றன.

'டிகிரி'யை இப்பொழுது 'மைனஸ்' துரத்துகிறது. ஒவ்வொருவராய்ச் சந்துப் பக்கம் போய்த் திரும்புகிறார்கள். போகிற போது சுபாவம். திரும்புகிற போது 'பாவம்!'

கருவிகள் இல்லாமலே சரளை நிரவுகிறார்கள்.

இருளனுக்குள் இரட்டிப்பு உற்சாகம். 'பில்லி' 'விட்டர்' அளவாக உயர்ந்ததன் விசேடமாய்,



படிப்பகம்

www.padippakam.com

அவன் எழுந்து கால்களை அகலமாய் வைத்துக்கொண்டு நின்றான். கைகளை நீட்டி'நீட்டி, மாரடி தூள் பறக்கிறது: "நான் பெத்த ராஜாவே!"

இந்தக் கோலம் சோகத்தைப் பிழிந்தெடுத்தது. அம்மாளு கதறு கிறாள்:

"அந்தி நிலவெரிக்கும் நான்
பெத்த கண்ணே
என்னாடே வாசலிலே அரு
நெல்லி பிஞ்சிறங்கும்
அந்தி நிலவிலேயும் அரு
நெல்லி நிழலிலேயும்
நான் பெத்த மகனே ஆடி
வெளையாட வாரதெப்போ?"

புயல் வசப்பட்ட கடலலைகள் போல் துக்கம் பெருகி மோது கிறது. அடிவயிற்றைப் பிளந்து வெளிப்படுகிறது ஓலம். இருளன் மாரடி தொடர்கிறது. கண்ணீர், மூக்கு ஒழுகல், எச்சில் திரிவேணி சங்கமமாய் வழியக் கத்துகிறான். அவனை மிஞ்சி அம்மாளு கத்திக் கத்தி,...மயங்கிப் போனாள். தண் ணீர் தெளித்து கிட்டிப் போன பல்லை நெம்பி, தூக்கி மடியில் கிடத்தி...உபசாரங்கள்.." மாளு! மாளு!"

அவள் விழித்துத் தரையில் உருண்டு புரண்டு உதைத்து கொண்டாள்.

துக்கம் மடை உடைக்கிற வேகத்தில், கூடியிருந்தவர்கள் 'காரியங்களுக்கு' விசையேற்றி னார்கள்.

இரண்டு பேர் தோள்களில் பாடை தொற்றிக் கொண்டது. அழுகையின் உச்சம்.

சுக்குரு சுக நித்திரையில் பய ணம் போகிறான்.

மற்ற பெண்கள் அம்மாளுவைக் கைத்தாங்கலாக உயர்த்தினார் கள். அவளோ பிடிப்பை உதறி, கதறிக் கொண்டு பின்னாலேயே ஓடுகிறாள். தெருவே திகைத்து நிற்கிறது: "என்னெப் பெத்த ராசாவே!"

காந்தி சிரிக்கிறார். டிராக்ட ரைக் காணவில்லை. 'டேப்'பும் அளவையும் டிராக்டருக்குப் பச் சைக் கொடி காட்டியிருக்கும்.

அந்த முக்கத்தில் பாடை அவள் பார்வைக்கு மறைந்துவிட் டது. பின் தொடரக் கால்கள் தவித்த பொழுது, கண்ணீரில் கழுவிய முகத்தை அவள் திருப்பி னாள். விழிகளைக் குளிப்பாட்டு கிற கண்ணீரைத் துளைத்துக் கொண்டு பார்த்தாள்.

அம்பாஸிடர் கபில நிறம்.

அந்தக் காருக்கு அப்பால் கருஞ் சிவப்பு நிறத்தில் மெல்லிய வெள் ளைக் கோடுகள் கட்டம் போட்ட கட்டடம். காவல் நிலையம். உள்ளே காக்கி உடைகளின் உல வல்.



படிப்பகம்

www.padippakam.com

கதர்ப் பட்டும் கழுத்துச் சங்கிலி யுமாய், நாற்காலிக்குள் திணிக்கப் பட்டிருக்கும் மாமிச மலை, பண்ணை.

அம்மாளு சென்ற அறுவடைக் குப் போயிருந்த பொழுது பார்த் திருக்கிறாள்.

காவல் நிலையத்திற்கு இடப் பக்கம் ஸப்-இன்ஸ்பெக்டரும் காண்டிராக்டர் தங்கதுரையும் பேச்சு வார்த்தை. பண்ணையின் 'விசேஷ தூதர்.' பதவி தங்க துரைக்கு இலேசிலா கிடைக்கும்? இப்படி ஏதாவது நடந்தால் உண்டு.

குளிர் பானங்கள் ரோஜா நிறத் தில் கண்ணாடிக் குவளைகளில் சிரித்தன. தகர 'டிரே' பல்லக்கில் பவனிவருகின்றன. அவற்றை எடுத்து வருகிற சிறுவன் அசப்பில் சுக்குரு மாதிரியே-அசப்பா? அவனே தான்.

"டே, சுக்குரு!" அவள் கத்திக் கொண்டு காவல் நிலையத்திற் குள் ஓடுகிறாள். வேகமும் மயக்க முமாய் என்னவோ பிடிபடாத சுழற்சி.

அந்தச் சிறுவன் அம்மாளு அலறலுக்குக் காது கொடுப்பதா கவே தெரியவில்லை. திரும்பிப் போகிறான். அடுத்த 'செட் ரோஸ் மில்க்' உள்ளே அவசரத் தேவை.

'இவன் சுக்குரு இல்லை' தேம் பினாள் அவள் கண்ணீர் நின்று விட்டது. ஆத்திரமாய் வந்தது.

"யார் நீ? என்ன வேணும்?" ஒரு காவலர் கத்தினார்.

தன் மகன் சாவில் உடம்பைக் குளிர்ச்சிப் படுத்திக் கொண்டிருக் கும் அந்தக் கூட்டத்தை ..?

பாக்கு வெட்டும் நேரத்திற்குள் அவள் புயல் மாதிரி மேசையை நோக்கிப் பாய்ந்தாள். அதன் மீது காத்திருந்த ரோஜாக் குளியலிட்ட கண்ணாடி குவளைகளை இரண்டு கைகளாலும் இப்படியும் அப்படியும் அலைத்துத் தட்டி உருட்டினாள்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர், பண்ணை, இன்னும் யார் யாருக்கோ சட்டை, உடை எங் கும் ரோஜா வண்ண நீர்ச் சிதறல் நனைத்தது.

மாமிச மலை அசைந்தது. "சேச் சே!"

"ஏ, பைத்தியம் நீ யாரு? கொஞ்சங்கூட டீஸன்ஸி தெரி யாம! நினைச்ச நாயெல்லாம் உள்ளே..." சர்க்கிள் அருவருப் பாய்ப் பொரிந்தார்.

ஒரு காக்கி உடை கான்ஸ்டே பிள் பாய்ந்து வந்து, அவள் பிடரி யில் கைகொடுத்து வெளிப்புறம் நோக்கித் தள்ளினான்.

அம்மாளு வாசலைக் கடந்து நிலை குலைந்து படிகள் மீது குப் புற விழுந்தாள்.

மகனுக்காகக் கண்ணீரை மட் டும் வடிக்க முடிந்த அவளை இரத்தமும் வடிக்க வைத்த கரு ணையே கருணை!

★



படிப்பகம்

www.padippakam.com

# வேல்ஸ் இளவரசர் வருகையும் பாரதியும்

தன் கவிதைஎனும் கைவாளை ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகச் சுழற்றிய மகாகவிபாரதி வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பு பாடியதாகக் காணப்படும் பாட்டு ஒன்று பலருக்குக் குழப்பத்தை உண்டு பண்ணுகிறது.

தேச பக்தக் கனல் தெறிக்கப் பாடிய பாரதியின் கைகளால் இத் தகைய பாட்டு எழுதப்படலாமா? என்ற கோபம் சிலருக்குவருகிறது!

இந்தக் காலத்து அரசியல்வாதிகளைப் போலப் பாரதியும் கட்சி மாறியவரோ என்ற ஐயம் சிலருக்குத் தோன்றுகிறது.

பாரதி பாடல்கள் தோன்றிய காலச் சூழ்நிலைகளைத் தெற்றெனக் காட்டும் நோக்கில் உருவாக்கப்பட்டு வெளியிடப் பெற்ற பெ. தூரனின் 'பாரதி தமிழ்' இந்தப்பாட்டு எழுந்த சூழ்நிலைபற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

'இணையற்ற உணர்ச்சி மிக்க தேச பக்திப் பாடல்களைப் பாடித் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பிய பாரதியார் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறிப் பாடியிருப்பது ஆச்சர்யமாகவே தோன்றும். முழு மனத்தோடு இதைப் பாரதியார் இயற்றினாரா என்பது சந்தேகம்தான். தாம் ஏற்றுக் கொண்டிருந்த வேலையினால் ஏற்பட்ட கடமையை நிறைவேற்றவே இதை அவர் செய்திருக்கலாம்'.

தூரன் அவர்களின குறிப்பில் பாரதி சுதேசமித்திரன் நாளிதழில் துணையாசிரியராக இருந்த நிலைமை காரணமாகவே வேறு வழியின்றித் தன் வேலையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்ற நினைப்பில்-இதனைப் பாடியிருக்கலாம் என்ற பொருள் தொனிக்கிறது.

ஆனால் பாடல் எழுந்த வரலாற்றுச் சூழல் பாட்டின் உள்ள

— அமரர் பாரதிபித்தன்



படிப்பகம்

www.padippakam.com

டக்கம் ஆகிய இரண்டையும் மனக் கண்முன் கொண்டு வந்து பார்த்தால் பாரதி தவறு எதுவும் செய்துவிடவில்லை என்பதையும் நிர்ப்பந்தம் காரணமாகப் பாட வில்லை என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

இந்தப் பாடல் தோன்றிய காலத்தின் வரலாற்றுச் சூழ்நிலை என்ன?

வேல்ஸ் இளவரசர் இருமுறை இந்தியாவிற்கு வந்திருக்கிறார்.

முதல் முறை வந்தபோதுபாடப் பட்ட பாட்டே பாரதியார் கவி தைத் தொகுப்பில் காணப்படு வது.

முதல் முறை வேல்ஸ் இளவர சர் இந்தியாவுக்கு வந்த ஆண்டு 1906

1906 வரை இந்திய தேசியக் காங்கிரஸ் பூரண சுதந்திரக் கோரிக்கையை முன் வைக்க வில்லை.

1907 இல் நடைபெற்ற சூரத் காங்கிரஸ் மாநாட்டில் கட்சி பிளவுபட்டு திலகர் தலைமையில் தீவிரவாதிகள் ஒன்றுபட்ட பின் னரே பூரண சுதந்திரக்கோரிக்கை வலுவாக வெளிவந்தது. 1929 இல் நடைபெற்ற லாகூர் காங்கி ரசில் தான் பூரண சுதந்திரத் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய விடுதலை இயக்கத் தின் ஈட்டி முனையாக விளங்கிய இதே இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளில் அந்தக் காலகட்டத் தில் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுக்கு வாழ்த்துக் கூறுதல் மரபாகப் பின்பற்றப்பட்டு வந்தி ருக்கிறது.

அந்த மரபுக்கு ஏற்பவே 1905 டிசம்பரில் காசி நகரில் கோகலே தலைமையில் நடைபெற்ற காங் கிரஸ் மாநாட்டில் வேல்ஸ் இளவ ரசருக்கு வரவேற்பு அளிப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள் ளது. இதுபற்றி டாக்டர் பட் டாபி சீதாராமையா எழுதிய காங்கிரஸ் சரித்திரம் பின்வருமாறு கூறுகிறது.

"1901 இல் விக்டோரியா மகா ராணி மறைந்த போதும் 1910 இல் எட்வர்ட் மன்னர் இறந்த போதும் காங்கிரஸ் மாட்சிமை தங்கிய மன்னருக்கு விசுவாசம் தெரிவித்தது. ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் (1906 இல் இவரே வேல்ஸ் இளவரசர்) வருகையின்

---

# தேனீர்

ஏழை வர்க்கத்தின்
எழுச்சி சுரபி!
திசுக்களில்
உற்சாகத் தேனீக்களைச்
சிறகசைக்கச் செய்யும்
திரவச் சூத்திரம்
சோம்பல் சுளுக்கெடுக்கும்
சுறுசுறுப்புச் சொர்க்கம்

— தஞ்சை சுகன்



படிப்பகம்

www.padippakam.com

போதும் அவருக்குக் காங்கிரஸ் வரவேற்பு அளித்தது' (பட்டாபி சீதாராமையா-காங்கிரஸ் சரித்திரம் பக். 85)

ஆகவே பாரதி தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தின் நிலைபாடுகளுக்கு ஏற்ப நடந்து கொண்டிருக்கிறார் என்பது தெளிவு.

இன்னொன்றையும் நாம் நினைவுபடுத்திக் கொண்டு விட்டால் இக்கருத்துத் தெளிவுபடும்.

1914 முதல் 1918 முடிய நடந்து முடிந்த முதல் உலகப் போரின்போது அண்ணல் காந்தியடிகள் ஆங்கிலேய ஆட்சிக்கு ஆதரவாக நின்று ஆங்கிலப் படையில் சேர்ந்து பணியாற்றுமாறு இந்திய மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார் என்பதை நாமசேர்த்து எண்ணிப் பார்த்தல் வேண்டும். அதற்குப் பல அரசியல் காரணங்கள் உண்டு. ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோலை

## பதவி

மனிதப் பதவியை
 விட்டு விட்டு
வீட்டிற்கு வந்தேன்;
 மாலையோடு காத் திருந்தது
மந்திரி பதவி!

—ஆரூர் தமிழ் நாடன்

நோக்க ஆங்கிலேய ஏகாதிபத்தியம் செலுத்தியது 'செங்கோல்' தான் எனக் காந்தியடிகள் கருதியதும் ஒரு முக்கிய காரணம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

முதல் உலகப் போரில் ஆங்கிலேயருக்கு ஆதரவாக இருந்த ஒரே காரணத்திற்காக மகாத்மாவின் தேச பக்தியை யாரும் சந்தேகிக்க வில்லையே! குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையில் அவர் அவ்வாறு கொண்டமை சரியே! என முடிவு கட்டுகிறோம். அது பாரதிக்கும் பொருந்தாதா என்ன?

அரசியல் காரணங்கள் ஒருபுறமிருக்கட்டும். அந்தப் பாட்டின் உள்ளடக்கத்தில் என்ன தான் இருக்கிறது?

ஏகாதிபத்தியத்தை ஆதரித்து எங்காவது ஒரு சொல் உண்டா? இல்லையே!

அந்நியச் சுரண்டலை நியாயப் படுத்திய ஒரு சொற்றொடர் உண்டா? இல்லையே!

அதற்கு மாறாக அந்த வரவேற்புப் பாட்டிலும்

'ஆயினும் என்ன?
 ஆயிரங் கோடி
தொல்லைகள் இன்னும்
 தொலைந்தன வில்லை



படிப்பகம்

www.padippakam.com

நல்குரவாதி நவமாம்
தொல்லைகள்
ஆயிரம் என்ன வந்து
அடைந்துள நுமரால்'

என்று வெள்ளையராட்சியரால் விளைந்த இன்னல்களைக் குறிப்பிடத் தவறவில்லை. வெள்ளையராட்சியின் விளைவாகச் சில நன்மைகளும் விளைந்ததுண்டு. அது மறுக்க முடியாத வரலாற்று உண்மை. அதையும் பாரதி இந்தப் பாட்டில் குறித்துள்ளார்.

ஆங்கிலேயர் வருகைக்குமுன் இமயம் முதல் குமரி வரை ஒரே நாடாக இந்தியா இருந்ததில்லை.

ஒரு வலிமை மிக்க மத்திய அரசின் கீழ் இந்தியா ஆளப்படாமையால் அது படையெடுத்து வந்தவர்கட்கெல்லாம் வேட்டைக் காடாக இருந்தது.

கடவுள் பெயரால் சமய வாதிகள் விளைவித்த தீமைகட்கு எல்லையே இல்லாமல் இருந்தது.

சிறு பெண்களின் கழுத்தில் தாலியைக் கட்டி, கணவன் குழந்தை இறந்தபின் மனைவிக் குழந்தையை விதவை என அறிவித்த பாலியத் திருமணக் கொடுமை;

கணவன் இறந்துவிட்ட காரணத்திற்காக மனைவியையும் அவனோடு கொளுத்திய காட்டுமிராண்டித்தனம்.

இவையெல்லாம் அழிய வெள்ளையராட்சி உதவியாக இருந்தது உண்மைதானே?

இந்த விளைவுகளையே பாரதி தன்பாட்டில் பாராட்டியுள்ளார்.

கொடுமதப் பாவிகள்
குறும்பெலாம் அகன்றன
யாற்றினில் பெண்களை
எறிவதூஉம், இரதத்து
உருளையிற் பாலகரை
உயிருடன் மாய்த்தலும்
பெண்டிரைக் கணவர்தம்
பிணத்துடன் எரித்தலும்,
எனப்பல தீமைகள் இறந்து
பட்டனவால்......

என்பன பாரதி வாக்கு.

பாரதி ஆவேசக் கவிஞன் மட்டுமல்லன்; ஒரு நடுநிலையான வரலாற்று ஆசிரியனின் நோக்கோடு எழுதவும் முடிந்த ஒரு எழுத்தாளன் என்பதே இந்தப் பாடலால் நமக்குத் தெளிவுபடுகிறது.

நன்றி: ஜனசக்தி பாரதி நூற்றாண்டு விழா மலர் 1982.



படிப்பகம்

www.padippakam.com

# தஞ்சாவூர் ஓவியம்

## ஓவியர் ஆழி, வே. ராமசாமி

ஒவ்வொரு நாட்டுக்கும், பிராந்தியத்துக்கும் உரித்தான கலை மரபுகள் உண்டு. இந்தக் கலைமரபினை மற்றைய பகுதிகளின் மரபுகள் பாதிப்பதில்லை; அல்லது பாதிக்க விடுவதில்லை.

இந்த நவீன யுகத்தில், உலகின் ஒரு மூலையில் உள்ள கலாசாரம் மறு மூலைக்குப் பரவி, தாக்கத்தை ஏற்படுத்தி விடுவது உண்டு. ஆனால், உண்மையான கலை உணர்வுகள் உள்ளவர்கள், தங்கள் மண்ணுக்குச் சொந்தமான பாணியைச் சிதைக்க விரும்ப மாட்டார்கள். இது எல்லா கலைகளுக்கும் பொருந்தும். அந்த வகையில் தஞ்சாவூர் ஓவியங்களைச் சொல்லலாம்.

## தஞ்சாவூர் ஓவியம்

இக்கட்டுரை ஆசிரியர் ஓவியர் ஆழி (ஆழி. வே. ராமசாமி) ஓவியத்தைப்பற்றி 17 புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இவற்றைத் தவிர, சிறுகதைத் தொகுப்பு, நாவல், அறிவியல், ஆன்மீகம் என்று 25 புத்தகங்களும் எழுதியிருக்கிறார். இவர் குழந்தைகளுக்கான மூன்று நூல்களுக்கு மூன்று தடவை குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தங்கப் பதக்கங்கள் பெற்றிருக்கிறார். வானொலியிலும் இவருடைய படைப்புகள் ஒலி பரப்பப்படுகின்றன. இவரது கலைப் பயணத்தில் துணை நிற்பவை, தூரிகையும் பேனாவும். ஓவியக் கலையைத் தமிழில் தனித் துறையாகக் கருதும் அளவிற்கு ஓவிய நூல்கள் எழுதிய முதல் தமிழ் ஓவியர் இவரே. உருவங்களை ஒத்தி எடுத்தாற்போல் தத்ரூபமாக வரைவதில் இவருக்கு நிகர் இவரே.



படிப்பகம்

www.padippakam.com

அது என்ன தஞ்சாவூர் ஓவியங்கள்?

சாதாரணமாக ஓவியங்கள் வரைகிறவர்கள், கோடுகளையும் வண்ணங்களையும் தீட்டி ஓவியங்களை உருவாக்குவார்கள். தஞ்சாவூர் ஓவிய பாணி அப்படி அல்ல.

ஓவியங்களை வரைந்து விட்டு, அவற்றிற்கு அழகு சேர்க்கும் அணிமணிகளையும் வண்ணங்களாலேயே வரைவதை விடுத்து, அந்த அணிமணிகளை உண்மையிலேயே தங்கத் தகடுகளாலும், முத்துக்களாலும், வண்ணக் கற்களாலும் அலங்கரிப்பதுதான் தஞ்சாவூர் பாணி.

ஓவியத்தின் நாயகி முத்து வளையல் அணிந்திருந்தால், உண்மையான முத்துக்களை அந்த இடத்தில் பதிப்பார்கள். தங்க ஆபரணங்கள் அணிவது என்றால் உண்மையான தங்க ரேக்குகளைப் பதிப்பார்கள் ஓவியத்தை வரைந்துவிட்டு, அதில் அணிமணிகளைப் பொற்கொல்லர்கள் நகாசு வேலை செய்வது போலவே அமைப்பார்கள் ஓவியர்கள். இந்த வகையில்தான் மற்ற ஓவியங்களினின்றும் மாறுபடுகிறது தஞ்சாவூர் ஓவியம்.

தஞ்சாவூர் ஓவியங்கள் மிகவும் தொன்மை வாய்ந்தவை. காலத்தால் அழியாதவை.

# சிலையான செம்மல்கள்

## 1. மறைமலையடிகள்

நாகையை அடுத்த காடம்பாடியில் பிறந்த இவர் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை; மும்மொழி வித்தகர்; பழந்தமிழ் நூல்களுக்கு உரையும் புத்திலக்கிய படைப்புகளும் செய்து தமிழை வளப்படுத்தியவர்; இவருக்குப் புலவர் கோவை இளஞ்சேரன் முயற்சியால் நாகை பழைய பேருந்து நிலையத்தில் சிலை வைக்கப்பட்டுள்ளது.

## 2. திரு. வி. க.

நாடறிந்த தேசியவாதி; தொழிற்சங்க இயக்க முன்னோடி பெண்ணுரிமைக்குப் போராடிய பெற்றியர்; பழுத்த தமிழ்ப் புலமை படைத்த இவர் இறவா நூல்களைப் படைத்துப் பைந்தமிழை நிமிரச் செய்தவர்; ஒழுக்க சீலர்; இவருக்கு இலக்கணப் புலவர் த. ச. தமிழன் முயற்சியால் திருவாரூர் பேருந்து நிலையத்தில் சிலை நிறுவப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

விஜயநகர மன்னரான கிருஷ்ண தேவராயர் எல்லா கலைகளுக்கும் ஆதரவு தந்தவர். சிறந்த கலா ரசிகர். அவருடைய ஆட்சிக் காலத்தில் தமது சாம்ராஜ்யத்தின் புகழ் பரப்ப, தமிழ் நாட்டில் தஞ்சாவூர், திருச்சி நகரங்களுக்குச் சிறந்த கலைஞர்களையும் அனுப்பி வைத்தார். அவர்களில் ஓவியக் கலைஞர்களும் இருந்தனர். அவர்கள் தஞ்சாவூர், திருச்சி நகரங்களில் குடும்பத்துடன் குடியேறினர்.

இந்தக் கலைக் குடும்பங்களை ஆதரித்து, அவர்களின் கலை ஆர்வத்தை வளர்த்தவர்கள் சோழ அரச பரம்பரையினர் என்று சொல்லுவார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தஞ்சாவூர் ஓவியக்காலம்.

இன்னும் தெளிவாகச் சொல்லுவதானால், தென்னிந்தியாவுக்கு வந்த விஜயநகர ஓவியர்கள் மூன்று பாணிகளில் ஓவியங்களைப் படைத்தனர். தட்சின பாணி ஓவியம், மைசூர் பாணி ஓவியம், தஞ்சாவூர் பாணி ஓவியம்.

பதினெட்டாம் நூற்றாண்டில், மும்மடி கிருஷ்ணராஜ உடையார் ஆட்சிக் காலத்தில் மைசூர் பாணி ஓவியம் சீரும் சிறப்பும் பெற்றது. தஞ்சாவூரில் மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தஞ்சாவூர் பாணி ஓவியங்கள் சிறப்புப் பெற்றன. குறிப்பாக, சிறந்த கலா ரசிகரான சரபோஜி மகாராஜா, தஞ்சாவூர் பாணி ஓவியங்களில் தனிக்கவனம் செலுத்தினார்.

தஞ்சாவூர், சிதம்பரம், கும்பகோணம், திருவாரூர், திருவலஞ்சுழி, இராமநாதபுரம், திருச்சி, ஸ்ரீரங்கம், மதுரை கோவில்களில் இன்றும் இந்த பாணி ஓவியங்கள் இருக்கின்றன.

நாயக்க மன்னர்களின் காலத்தில் இந்த ஓவியக் கலை பரவியதால், பெரும்பாலும் வைணவக் கடவுற் உருவங்களே ஓவியங்களில் இடம் பெறுகின்றன. மிக அதிகமாக கிருஷ்ணன் ஓவியங்களுக்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வெண்ணெய் தின்னும் கண்ணன், கிருஷ்ணனும் யசோதையும், கிருஷ்ணனும் ராதையும் ருக்மணி கல்யாணம், குழலூதும் கோபாலன், கண்ணனின் பலவித லீலைகள் முதலியவை சிறப்பான இடம் பெறுகின்றன. தவிர, இராமர் பட்டாபிஷேகம், சீதா கல்யாணம், இராமர், லட்சுமி, லட்சுமி நரசிம்மர், ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கும் பரந்தாமன் ஆகியோரும் வரையப்படுகின்றனர்,



படிப்பகம்

www.padippakam.com

ஓவியத்தில், முதல் நாயகருக்கே முக்கியத்துவம் கொடுத்து வரைகிறார்கள் ஓவியங்கள். பாதிக்கும் மேற்பட்ட இடம் ஓவியத்தின் முதல் நாயகருக்குத்தான். ஓர் ஓவியத்தில் கிருஷ்ணன் வரையவேண்டுமானால், கிருஷ்ணனின் உருவம் பாதிக்கு மேல் இருக்கும். மீதி இடத்தில் மற்றவர்களின் உருவங்களைச் சிறிதாக வரைவார்கள்.

இப்போது கையாளவப்பட வேண்டிய, பெரிதும் எதிர் பார்க்கப்படுகிற 'தொலைத் தோற்ற' உத்தி இந்த பாணி ஓவியத்தில் இருப்பதில்லை.

தஞ்சாவூர் ஓவியங்களில் புராண, இதிகாசக் காட்சிகள் தாம் இடம் பெறுகின்றன. ஒரு காலத்தில் வைணவக் கடவுள்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருந்தாலும், இப்போது நடராஜர், சிவ பார்வதி, பார்வதி, மீனாட்சி, ராஜேஸ்வரி, ஸ்ரீசாரதா தேவி, முருகன், கணபதி முதலிய சைவ மதக் கடவுளர்களின் திருவுருவங்களும் வரையப் படுகின்றன.

தஞ்சாவூர் ஓவியங்களை எப்படி வரைகிறார்கள்?

வரையப் போகும் ஓவியத்தின் அளவுக்குத் தகுந்தாற்போல பிளைவுட் பலகையின் மேல் ஒரு தரமான வெள்ளைத் துணியைச் சுருக்கமில்லாமல் ஒட்டுகிறார்கள். வரையத் தகுந்த நிலைக்கு அதைத் தயார் பண்ணியதும் அதன் மீது, சிறிது மஞ்சள் காவி, சாக் பவுடர், ஃபெவிகால் அல்லது அதுபோன்ற பசையைக் கலந்து பூசி, காயவைக்கிறார்கள். காய்ந்

---

## வாய்மைநாதன்

தொடக்க காலம் முதல் அமரர் பாரதிபித்தனோடு இணைந்து தஞ்சை மாவட்டம் முழுவதும் பெருமன்றக் கிளைகளைக் கட்டியவர் சிறுகதை, புதினம், கவிதை, கட்டுரை முதலிய வளமான துறைகளில் ஈடுபட்டு வளர்தமிழுக்கு வளம் சேர்ப்பவர். அலைமகள், ஓ.. பீனிக்ஸ் பறவைகளே (இதழில் வருகிறது) புகையிலை விரிச்சாப் போச்சு (எழுதப்படுகிறது) ஆகிய நவீனங்களுக்குச் சொந்தக்காரர். பேரா. நா. வா, அவர்களுக்குத் தஞ்சை நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்துத் தந்தவர். 'பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பிறகு சிந்து வடிவத்தில் வெற்றி பெற்ற ஒரே நூல் நேதாஜி காவியம்' என்று இவர் நூலை இலக்கணப் புலவர் த. ச. தமிழன் பாராட்டுவது இவண் மனங் கொள்ளத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

தும் நன்றாகத் தேய்த்துச் சமப்படுத்துகிறார்கள். வேண்டிய கடவுளின் உருவம் அதன் மீது நிதானமாக வரையப்படுகிறது.

இதில் சில பக்குவங்கள் இடத்துக்கு இடம் சிறிது மாறுபடக் கூடும். சில இடங்களில் பிளைவுட் பலகையில் கனமான பழுப்புநிற காகிதத்தை மைதாப் பசை, புளியங்கொட்டைப் பசை கொண்டு ஒட்டுகிறார்கள். அதன் மீது வெள்ளைத் துணியைச் சுருக்கம் இல்லாமல் ஒட்டுகிறார்கள் வெள்ளைத் துணி மீது பிரெஞ்ச் சாக் பவுடர், ஆர்பிக் பசை(Gum arbic) கலந்து பூசுகிறார்கள். ஓர் உருளையான பாட்டிலை வைத்து உருட்டி, மேல் பரப்பை மிருது வாக்குகிறார்கள் அப்புறம் வரைகிறார்கள்.

ஆபரணங்கள் இருக்க வேண்டிய இடங்களில் வண்ணக்கற்களும் முத்துக்களும் பதிக்கப்படுகின்றன. சில பகுதிகளுக்கு அசல் தங்கத் தகடுகள். தங்க ரேக்குகள் ஒட்டப்படுகின்றன. ஓவியத்தில் உள்ள தூண்கள், திரைச் சீலைகள் முதலியவற்றிலும் தனிக் கவனம் செலுத்தப்படுகின்றன. பின்பு மீதி இடங்களில் பிரஷ் கொண்டு வண்ணங்கள் பூசுகிறார்கள். இந்த ஓவியங்களுக்கு சிவப்பு, மஞ்சள், வெள்ளை, பச்சை, நீலம் என்ற குறிப்பிட்ட சில வண்ணங்களே நேரடியாகப் பயன்படுத்தப் படுகின்றன. வேறு வண்ணக் கலவைகள் அதிகமாகப் பயன்படுத்தப் படுவதில்லை.

இப்போது ரசாயன முறையில் நூற்றுக் கணக்கான வண்ணங்கள் தயாரிக்கப்படுகின்றன; என்றாலும் தஞ்சாவூர் ஓவியங்களுக்கு அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. இந்த வகையிலும் ஒரு தனித் தன்மை காப்பாற்றப்படுகிறது. தஞ்சாவூர் ஓவியத்தில் சிவப்பு வண்ணத்தின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும்.

---

# அ. ப. பாளையன்

இவர் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத் தஞ்சை மாவட்டக் குழுத் தலைவர். சங்க இலக்கியத்தை மார்க்சிய அணுகுமுறையில் ஆராய்வதில் ஆர்வமுள்ளவர். இம்முறையில் கட்டுரைகளைத் தாமரை முதலான ஏடுகளில் எழுதிவருபவர். பரவலான வரவேற்பைப் பெற்ற பாரதியாரும் ரஷ்ய புரட்சியும் என்ற நூல் இவரது ஆராய்ச்சித் திறத்திற்கும் உரைநடை வளத்திற்கும் சான்று பகர்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

மிக சிரத்தையுடனும் நுட்பத்துடனும் உருவாக்கப்படும் இந்த ஓவியத்தைச் சுற்றிலும் சிலர் ரசம் பூசப்பட்ட கண்ணாடித் துண்டுகளையும், பல வண்ணமுள்ள ஜெய்பூர் கற்களையும் மக்குவைத்துப் பதிக்கிறார்கள்.

மற்றும் சிலர், தங்க ரேக்குகளுக்குப் பதிலாக, பளபளப்பான மலிவான காகிதங்களாலும் கண்ணாடித் துண்டுகளாலும் அழகுபடுத்துகிறார்கள். இதனால் செலவு குறையும்.

ஓவியத்திற்கு எவ்வளவு கவனம் செலுத்துகிறார்களோ அந்த அளவுக்கு இதற்கு அலங்காரமான கண்ணாடிச் சட்டமிடுவதிலும் கவனம் செலுத்துகிறார்கள்.

தஞ்சாவூர் ஓவியத்தைச் சாதாரணமாகப் பூர்த்தி செய்துவிடுவதில்லை. நாள், கிழமைப் பார்த்து, தேங்காய் பழம் வைத்து பூஜை செய்து ஓவியத்திற்குக் கண்திறப்பது என்கிற சடங்கைச் செய்து தான் பூர்த்தி செய்கிறார்கள். இப்போதெல்லாம் ஓவியத்தின் வண்ணங்கள் மங்காமல் இருக்க, வீணாகாமல் இருக்க, ரசாயனப் பூச்சும் கொடுக்கிறார்கள்.

தஞ்சாவூர் ஓவியங்களில் தெய்வத் திருவுருவங்கள் தவிர மற்ற உருவங்களை, அல்லது காட்சிகளை வரைந்தால் அவற்றை மக்கள் விரும்புவதில்லை.

ஒரு காலத்தில் இந்த தஞ்சாவூர் பாணி ஓவியங்களைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுப்பதில்லை. இதில் தெய்வத் திருவுருவங்களே வரையப்படுவதால் பெண்களால் சில நாட்களில் ஆசாரம் கெடும் என்கிற எண்ணம் தான் இதற்குக் காரணம்.

இந்த ஓவியங்களின் விலை எப்படி இருக்கும்?

சுமார் 700 ரூபாய் முதல் 30,000 ரூபாய் வரை இருக்கும்ஓர் ஓவியத்தின் விலையை அதற்குப் பயன்படுத்தப்படும் வண்ணக் கற்கள், தங்க ரேக்குகள், நகாசு வேலைகள், வரைவதற்கு ஆகும் காலம் ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயிக்கிறார்கள்.

## ஞானச் செல்வன்

மதுக்கூரில் பிறந்து ஆருரில் ஆசிரியப்பணியும் அருந் தமிழ்ப்பணியும் செய்துவரும் இவர் முப்பது ஆண்டுகளாகத் தமிழ்க் கவிதையுலகில் கொடிகட்டிப் பறப்பவர். இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு உள்ளிட்ட பல இலக்கிய அமைப்புகளில் பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றவர். கவிக்கோ, நற்றமிழ்ப் பாவலர் முதலிய விருதுகளைப் பெற்றவர். பாடிவந்த நிலா, ஓ, இளமையே, அர்த்தமுள்ள அரங்குகள் முதலிய கவிதை நூல்களைக் கன்னித் தமிழுக்கு அளித்தவர்.


படிப்பகம்

www.padippakam.com

# கரிச்சான் குஞ்சுவுடன் ஒரு பேட்டி

10-7-1919 ல் பிறந்த ஆர். நாராயணசுவாமி 1940 முதல் 1976 வரை தமிழாசிரியராகப் பணியாற்றியவர். 1939 முதல் எழுதிவருபவர். கு.ப. ராவின் நெருங்கிய நண்பர். கு.ப. ராவின் புனைபெயரான "கரிச்சான்" என்பதுடன் "குஞ்சு" என்பதை இணைத்துப் புனைபெயர் பூண்டவர். கு.ப.ரா பற்றி ஒரு நூலும், தெளிவு, அன்றிரவே, கரிச்சான் குஞ்சு சிறுகதைகள் ஆகிய தொகுப்புகளும், பசித்த மானிடம் என்ற நாவலும் பாரதியார் தேடியதும் கண்டதும் என்ற நூலும் இவரது படைப்புத் துறையின் முத்திரைச்சின்னங்கள். சமீபத்தில் தேவி பிரசாத் சட்டோபாத்தியாயாவின் தத்துவநூலை மொழிபெயர்த்திருப்பது குறிப்பிடத் தக்கது. தமிழர்கள் பெருமைப்படத்தக்க தரமான இந்த எழுத்தாளரை 'தாமரை' தஞ்சை மாவட்ட இதழுக்காக மன்னை த.க.இ. பெ. தலைவர் புலவர் மு. கலியபெருமாளும், கவிஞர் மா.சி பூபாலனும் பேட்டி காண்கின்றனர்.

தாமரை : ஐயா, தாங்கள் எழுதத் தொடங்கிய காலம் எது?

கரிச்சான்குஞ்சு : 1939-40 களில் எழுதத் தொடங்கினேன். முதல் இரண்டு சிறுகதைகள் கலைமகளில் வெளிவந்தன.

தாமரை : நீங்கள் எழுதணும்னு உங்களை 'Inspire பண்ணியது எதுன்னு சொல்ல முடியுமா?

க. குஞ்சு : நான் மணிக்கொடி கால எழுத்துக்கள படித்ததன் மூலமும். பிரேம்சந்த் போன்றவர்களின் வங்கக்கதைகளை படித்ததன் மூலமும் எழுத வேண்டும் என்ற' எண்ணம் எழுந்தது.



படிப்பகம்

www.padippakam.com

தாமரை : 'மணிக்கொடி காலம்' என்று சொல்கிறமாதிரி தற்போது இலக்கிய இதழ்கள் இல்லையா?

க. குஞ்சு : சிறு சிறு இதழ்கள் முயற்சி செய்கின்றன. காலம் தான் எதையும் தீர்மானிக்கும்.

தாமரை : தங்களது காலத்தில் சிறந்த படைப்பாளிகள் என்று யாரை கருதுகிறீர்கள்?

க. குஞ்சு : தி. ஜானகிராமன், எம்.வி. வெங்கட்ராமன்' கு ப.ரா......சிதம்பர ரகுநாதன், இராஜம் கிருஷ்ணன், பொன்னீலன், சின்னப்பாரதி இவங்க வித்தியாசமா எழுதுறாங்க.

தாமரை : நல்லகதை அல்லது நல்ல நாவல் என்று நாம் எப்படி அடையாளம் காணுவது?

க. குஞ்சு : வாழ்க்கையை பிரதிபலிப்பதாக, உயிரோட்ட முள்ளதாக, வாசகர்களுக்கு 'Some Message' ஐ எடுத்துத் தருவதாக படைப்புகள் இருக்கணும். அதுதான் நல்லவையின் அளவுகோல். அதே சமயத்தில் படைப் பாளி பிரச்சாரகனாக இருக்கக்கூடாது.

தாமரை : விடுதலைப் போராட்டக்கால எழுத்தாளர்களுக்கும், இப்போதைய எழுத்தாளர்களுக்கும் என்ன வேறுபாட்டை காண்கிறீர்கள்?

க. குஞ்சு : விடுதலைப் போராட்ட எழுத்தாளர்களுக்கு பாரதி வழிகாட்டியாக இருந்தான். பாரத விடுதலை பொது இலக்காக அமைந்தது. ஆனால், இன்று பெரும்பாலான எழுத்தாளர்கள் இலக்கு இல்லாமலேயே எழுது கிறார்கள்.

தாமரை : அதற்குக் காரணம் என்ன?

க. குஞ்சு : (சிரிக்கிறார்) நிறைய பணம் கிடைக்குது....சீக்கிரம் பணக்காரனாகலாம் அதுனால மாதத்துக்கு இரண்டு, மூன்று கதைகள் கூட எழுதுறாங்க... சிலு சிலுப்பாவும் எழுதுறாங்க.

தாமரை : தரமான இலக்கியங்கள் வளர என்ன செய்யலாம்?



படிப்பகம்

www.padippakam.com

க. குஞ்சு : நல்லத வாங்சிப் படிக்கிற வைராக்கியம் வளரனும் மக்கள 'Educate' பண்ணனும். எடுத்துச் சொல்லணும்.

தாமரை : 'தனித்தமிழில்தான் பேசவும் எழுதவும் வேண்டும்' என்பது தமிழை வளர்க்குமா?

க. குஞ்சு : இன்று தமிழ்த்தாய் வாழ்த்தாய் இருக்கிற 'நீராரும் கடலுடுத்த...' பாடலின் ஆறுவரிகளில் எட்டு சமஸ்கிருத வார்த்தைகள் இருக்கின்றன. தனித்தமிழிலேயே எல்லாம் இருக்க வேண்டுமானால் மொழியின் வளர்ச்சியும், வாழ்வும் கெடும்.

தாமரை : பெண் எழுத்தாளர்கள் ராஜம்கிருஷ்ணன், லட்சுமி, இந்துமதி, சிவசங்கரி, அனுராதா ரமணன்...

க. குஞ்சு : (இடைமறித்து) ராஜம் கிருஷ்ணனோடு ஏனையோரை சேர்க்காதீங்கோ. ராஜம் கிருஷ்ணன் நல்ல எழுத்தாளர். மற்றவங்களெல்லாம்...(க்ஹா...க்ஹா... சிரிப்பு)

தாமரை : புரியாம எழுதி 'புகழ்' பெற்றவங்களப்பற்றி....

க. குஞ்சு : லா.சா ரா கிட்ட நேரிலேயே இதுபற்றிச் சொன்னேன். அழகியல் குறைவாவும், சம்பவங்கள் நிறைந்தும் கதை அமையனும். புரியாம இருக்கனும் என்பதற்காக எழுதப்படுவது இலக்கியமல்ல.

தாமரை : ஜெயகாந்தனோடு தொடர்பு உங்களுக்கு இருந்தது. அவரைப்பற்றிய தங்கள் அபிப்ராயம்?

க. குஞ்சு : ஜெயகாந்தன் 'டால்ஸ்டாய்', கார்க்கி ஆகியோரின் எழுத்துக்களை வாசித்து ஜீரணித்துக் கொண்டு நமக்கேற்றாற் போல எழுதிய அற்புதமான எழுத்தாளர்.

ஆனால்...

தாமரை : ஆனால்...

க. குஞ்சு : இன்னக்கி கார், பங்களா, சொகுசான வாழ்க்கை வந்துட்டுது. அதுக்கேற்ற மாதிரி எழுத்தும் மாறிருச்சு.



படிப்பகம்

www.padippakam.com

கதையம்சம் மாறி பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு போய்விட்டார்.

தாமரை : கலைகளுக்கும், எழுத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

க. குஞ்சு : மனதுக்கு இன்பமூட்டுவது அனைத்தும் கலையின் வெளிப்பாடு. எழுத்துங்றது பிரச்சினைகளுக்கு குறைந்தபட்ச தீர்வின் வழியையாவது காட்ட வேண்டும். ஆழ்ந்த உள்ளுணர்வும் உலகத்தைப் பார்க்கிற பார்வையும், கேட்பவையும் இருந்தால் போதும். இதற்கென்று புதிதாய் பிறப்பெடுக்க வேண்டியதில்லை.

தாமரை : வ. ராவுக்கு இது நூற்றாண்டு. அவரோடு உங்களுக்கு தொடர்பு உண்டா?

க. குஞ்சு : அவரைப் பற்றி நிறைய சொல்லலாம். அண்ணாத்துரை சொன்னது மாதிரி 'அக்ரகாரத்து அதிசய பிறவி'. அவர் தேசிய இயக்கத்துக்காகவும், சீர்திருத்தத்துக்காவும் உழைச்சார். பாரதியை சிறப்பா அறிமுகம் செய்தவர்.

தாமரை : திறனாய்வு உலகு பற்றிய தங்கள் மதிப்பீடு....?

க. குஞ்சு : க.நா.சு. கொஞ்சம் செய்தார். நா.வானமாமலை ஆராய்ச்சி நடத்தினார். (இப்பவும் வருகிறது—நாம்) பாண்டிச்சேரில நான் வானமாமலைய சந்திச்சப்ப, வடமொழி இலக்கிய ஆராய்ச்சி பற்றி கட்டுரை கொடுங்கன்னு சென்னார். மறுபடி கடிதம்எழுதினேன் அவர் இறந்த செய்திதான் வந்தது. (வருத்தப்படுகிறார்)

தாமரை : தாமரை வாசகர்களுக்கு...

க. குஞ்சு : ஆழமா மெருகோட தாமரை வெளிவரட்டும். நல்லா வளரனும் நல்ல பத்திரிகை. எல்லார் கிட்டேயும் எடுத்துச் செல்லனும்.

*



படிப்பகம்

www.padippakam.com

# உடலின் முழுப் பரிசோதனையும் சில விபரீதங்களும்

## டாக்டர் அ. கதிரேசன்

குழந்தைப் பருவமானாலும் சரி, எந்தப் பருவமானலும் சரி, அடிக்கடி உடல் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. குறிப்பாக 35 முதல் 60 வயதுக்குள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவையும், 60 முதல் 75 வயதுக்குள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு.தடவையும், 75-க்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் உடலைப் பரிசோதித்துக் கொள்வது நல்லது. மற்றபடி நோயுற்ற போதெல்லாம் டாக்டரை அணுகுவது நல்லது. உச்சி முதல் உள்ளங்கால் வரை பரிசோதிப்பது நல்லது. தலையிலுள்ள பொடுகுகள், கண்ணில் காமாலை, வைட்டமின் 'ஏ' பற்றாக்குறை, கண்புரை ஆகியவை, வாய்ப்புண்கள், வாய் ஓரங்களின் புண் (வைட்டமின் 'பி' ரிபோஃபிளேவின் குறைவு) பிறவி இருதய நோயைத் குறிக்கும் நீல உதடுகள், காதில் சீழ் ஒழுக்கு, செவிட்டுத்தன்மை, கழுத்தில் தைராய்டுகட்டி, கழுத்தின் பக்கங்களில் நிணக்கணுக்களின் வீக்கம், இருதய நுரையீரல் நோய்களால் சிரம மூச்சு, இருமல் சளி முதலியன. உள்ளங்கையில் காமாலையைக் குறிக்கும் மஞ்சள் நிறம், இருதய நுரையீரல்களின் நோயைக் குறிக்கும் விரல் நுனிகளின் வீக்கம் (Clubbing) சோகையையும், கொக்கிப்புழு நோயையும் காட்டும் குழிவிழுந்த நக நுனிகள், கைரேகைகளே இல்லாத மங்கோலிய மன ஊன நோய், கீல்வாத மூட்டில் கைகளின் சிறிய மூட்டுக்களின் வீக்கம், வாயில் பற்களின் நோய்கள், நாளமில்லாச் சுரப்பிகளின் நோயை சுட்டிக் காட்டும் முலை வீக்கம், (ஆண்களில்) ரோம வளர்ச்சி மார்பிலும், அக்குளிலும் இல்லாமை, சொரசொரப்பான தடித்ததோல், பேசும் குரலில் மாற்றம், பெரிடோனிய உறையில் நீர்த்தேக்கத்தாலோ அல்லது கொழுத்த உடலாலோ மிகவும் பெருத்த வயிறு, மிகவும் பெருத்த உப்பிய வயிறாக இருந்தால் ஆங்கில மருத்துவத்தில்



படிப்பகம்

www.padippakam.com

5 எஃப் (F) என்று சொல்லுவார்கள். 1) Flatus (வாயு) 2) Foetus (கருப்பை சிசு) 3) Faeces (மலத் தேக்கம்) 4) Fat கொழுப்பு 5) Fluid (திரவம்) பால்வினை நோய் அறிகுறியான தொடையிடை நிணக்கணுச்களின் வீக்கம், சிறு நீர் புரவழியில் சீழ் ஒழுகுதல், ஆண் குறித்தண்டின் தோலில் புண்கள், ஹெர்னியா என்ற குடல் பிதுக்கம் (விரைக்கு மேலே), விரைவீக்கம், (யானைக்கால் வியாதியின் அறிகுறி), காளான் சரும நோய்கள், முடக்குவாத முழங்கால் மூட்டு வீக்கம், யானைக்கால் வியாதியால் வீக்கமடைந்த இரண்டு கால்கள் அல்லது ஒரு கால் வீக்கம், இருதய நோயையோ சோகையையோ குறிக்கலாம். மேற்கூறிய அனைத்தையும் நோயாளியைத் தொடாமலேயே கூர்ந்து நோக்குவதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

எனினும் உடல் எடை, இரத்த அழுத்த அளவு, இரத்தத்தை எடுத்து சர்க்கரை, கொலஸ்டிரால் அளவை நிர்ணயிப்பது, சிறு நீர் பரிசோதனை மூலம் சிறுநீரக நோய், நீரிழிவு நோய், மஞ்சல் காமாலை ஆகியவற்றை நிர்ணயிக்கலாம். தேவையிருந்தால் மார்பின் எக்ஸ் கதிர்படம், இருதய மின்னலை வரைபடம் (இ. ஸி. ஜி) ஆகிய வற்றைக் கணிக்கலாம். இவற்றின் மூலம் பெரும்பாலான தடுக்கக் கூடிய தீர்க்கக் கூடிய நோய்களைத் தெரிந்து கொள்ளலாம்.

சிலர் தங்களது உடல் ஊனங்களை மறைக்க சில வழிகளை கடைபிடிப்பர். மேற்கையிலும், முன்கையிலும் உள்ள காளான் சரும நோய்களை மறைக்க எப்போதும் முழுக்கைச் சட்டை அணிந்திருப்பர். சிலர் எப்போதுமே கருப்புக் கண்ணாடி அணிந்திருப்பர். அப்படியானால் ஏதோ ஒரு கண் குருடாக இருக்கும், அல்லது ஏதோ ஒரு கண்ணில் பெரியம்மை காரணமாக விழித்திரையில் பூ விழுந்து பார்க்க கோரமாக இருக்கும், அல்லது ஒரு கண்ணே இல்லாமல் குழி விழுந்து இருக்கும். இதை மறைக்க கருப்புக் கண்ணாடி அணிவது தவறல்ல. சிலர் தங்கள் வேஷ்டிகளை தரையைத் தொடுமாறு அணிவார்கள். அவர்களுக்கு அநேகமாக யானைக்கால் வியாதியால் இரு கால்களும் வீங்கியிருக்கும். இதையெல்லாமல் முழுப் பரிசோதனையின் போது டாக்டர் தெரிந்து கொள்வார்.

இத்தகைய பரிசோதனைகளில் நடக்கும் விபரீதங்களைத் தெரிந்து கொள்வது நல்லது. அதாவது ஒரு சில டாக்டர்களின் பணம் பிடுங்கும் பேராசை. தேவையில்லாத, மிகச் செலவாகும் பரிசோதனைகளைப் பரிந்துரைத்தல். ஒரு காச



படிப்பகம்

www.padippakam.com

நோயாளிக்கு மார்பின் எக்ஸ் கதிர்படம் மிகவும் அவசியம். காசநோய் இருந்தால் சிகிச்சையைத் துவங்கி இரண்டு - மூன்று மாதத்திற்கு ஒரு தடவை எக்ஸ் கதிர்படம் எடுத்தால் போதும். ஆனால் எனக்குத்தெரிந்த டாக்டர் ஒருவர், வாரத்திற்கு இரண்டு படம், அதுவும் பல கோணங்களில் (முன்புற பின்புற மான ஒரு படம் போதும்) ரூ. 30/-ல் முடியக் கூடிய ஒருவனுக்கு ஒரு மாதத்தில் ரூ. 300- செலவழிக்க வைக்கும் டாக்டர்களும் உண்டு. மேலும் சில குறிப்பிட்ட ஆய்வகத்தில்தான் பரிசோதனை செய்ய வேண்டும் என்றும், குறிப்பிட்ட கடையில் தான் மருந்துகள் வாங்க வேண்டும் எனவும் டாக்டர் கூறுவார். ஏனெனில் அவற்றில் டாக்டருக்கு கமிஷன் உண்டு. இன்னும் ஒரு மோசமான நிலை. தான் செலவு செய்து எடுத்த படங்களை, பரிசோதனை முடிவுகளை நோயாளியிடம் தர மாட்டார்கள். வேறு டாக்டரிடம் போய்விடுவார்களோ என்ற அச்சம். எனது நண்பர் ஒருவர் மார்பு வலி என்பதால் ஒரு E. C. G (ரூ. 250/- செலவு) காலை 8 மணிக்கு எடுத்து 9 மணிக்கு இருதய நோய் நிபுணரிடம் சென்றார். அவர் இந்த E.C.G. நன்றாக இல்லை. இன்னொரு E C.G. என்னிடம் புதிதாக எடுக்க வேண்டும். எனக் கூறி செலவை அதிகப்படுத்தினார். மிகவும் மோசமான மற்றொன்றைச் சொல்லி, மருத்துவ துறையில் நடக்கும் விபசாரத்தைப் பற்றி எழுதுவதை நிறுத்திக் கொள்கிறேன். சில ஆய்வகங்களில் (Laboratories) ஆய்வுக்கு வேண்டிய சிறு நீர், இரத்தம் இவற்றை எடுத்துக் கொண்டு, அதன் முடிவைத் தெரிய மறு நாள் வரச்சொல்வார்கள். அந்த ஆய்வகத்தில் (?) பரிசோதனைக்கான கருவிகள் சாதனங்கள் எதுவுமே இராது. உத்தேசமாக சிறுநீர், இரத்த

நீதி தழைத்த ஆரூரில்
தரமான படம் பார்க்க
ஒரே இடம்

**நடேஷ்** A/c திரையரங்கம்

வாழ்த்துக்களுடன்
**என். ஞானசேகர்**



படிப்பகம்

www.padippakam.com

முடிவுகளை அழகாக தட்டச்சு செய்து மறுநாள் நோயாளியிடம் கொடுத்து பெருமளவில் பணமும் பெற்றுக் கொள்வார்கள். இது, நான் நேரில் கண்டுபிடித்த ஒன்றாகும். சொல்லவும், எழுதவும் இன்னும் பல இருக்கின்றன. அதை ஒரு தனிக்கட்டுரையாக வைத்துக் கொள்வோம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு சீனா போன்றநாடுகளில் நோய் தீர்ந்தால் தான் டாக்டருக்கு பணம் கிடைக்கும். மற்றுமொரு வி னோ த ம் என்னவெனில் அறுவை நிபுணர்களின் அறுவை சிகிச்சைக்குப் பின்பு நோயாளி இறந்து விட்டால், அந்த அறுவை டாக்டரின் கைகள் துண்டிக்கப்படும். இது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு. இந்த முறையை தற்போது இந்தியாவில் பின்பற்றினால், இவ்வளவு காலத்தில் பலர் தங்களது கைகளை இழந்திருப்பார்கள்.

முழு உடல் பரிசோதனையின் போது கவனிக்கப்பட வேண்டியவை:

1. இருதயவியாதிகள்: நோயாளியின் முன் வரலாறு, நோயாளி கர்ப்பச்சிசுவாக இருக்கும் போது தாய்க்கு ஏற்பட்ட வியாதிகள், சாப்பிட்ட மருந்துகள், நிறை இளம் பருவத்தில் தோன்றிய நோய்கள் எக்ஸ் கதிர்படம், இருதய மின்னலை வரைபடம் ஆகியவை நோய் நிர்ணயத்தில் உதவி புரியும்.

2. உடல் எடை

உடல் எடை அதிகரித்தால் இரத்த மிகு அழுத்தம், நீரிழிவு, தட்டைப் பாதம் போன்றவை உண்டாகலாம். ஆகவே உடல் எடையையும் அடிக்கடி சரி பார்த்துக் கொள்ள வேண்டும். எடை திடீரென்று அதிகரிக்கவும் கூடாது. திடீரென்று குறையவும் கூடாது.

3. இரத்த மிகை அழுத்தம்: இனந்தெரியாத மந்தமான

தஞ்சை மலருக்கு இனிய வாழ்த்துக்கள்!

S.S.L.C., H.S.C., பட்டப்படிப்புகளில்
வெற்றி பெற

**BTC**
**பிர்லியண்ட் டுடோரியல் காலேஜ்**
பட்டுக்கோட்டை



படிப்பகம்

www.padippakam.com

தலைவலி, கண்பார்வை மந்தம், நெஞ்சுப் படபடப்பு ஆகியவை தோன்றலாம். இந்த அறிகுறிகளைக் கவனியாது விட்டால், இருதயத் தாக்கம், சிறுநீரகக் கோளாறு, பக்கவாதம் ஆகியவை வரலாம். எடைகுறைப்பு, உணவில் கட்டுப்பாடு (உப்பைக் குறைத்தல்) உடற்பயிற்சி பெருமளவிற்கு உதவி புரியும்.

4. கொலஸ்டிரால் அளவு

இரத்தத்தில் கொலஸ்டிராலின் அளவு 180 மி. கி. வரை இருந்தால் நல்லது. இதிலும் மிகை அடர்த்தி கொழுப்பு புரதப் பகுதி அதிகமாக இருந்தால் நல்லது. (High Density Lipo Protein, HDLP), கொலஸ்டிரால் அளவு அதிகமாக இருந்தால் உணவுக் கட்டுப்பாடு, எடைக்குறைப்பு, உடற்பயிற்சி ஆகியவை நல்லது. சமீபகால ஆராய்ச்சி மூலம் கொலஸ்டிரால் அளவு மிகவும் குறைந்துவிட்டால் புற்று நோய், பக்கவாதம் வருவதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

5 இரத்தத்தில் குளுகோஸின் அளவு: இரத்தத்தில் குளுக்கோஸ் 80-120 மில்லி/கனமில்லி கிராம் மீட்டர் இருப்பது நல்லது. இதுவும் கனிக்கப்பட வேண்டும். சர்க்கரை அதிகமாக இருந்தால் உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி, எடைக் குறைப்பு, தேவையிருந்தால் மருந்துகள், ஊசிகள் பயன்படுத்துவது நல்லது.

6. புகைப்பிடித்தல்: இருதயத் தாக்கமும், நுரையீரல் புற்று நோயும் புகைப்பிடிப்பவர்களிடம் அதிகம் காணப்படுவதாக தீர்மானித்துள்ளனர். கட்டாயமாக புகைப்பிடித்தலை நிறுத்த வேண்டும்.

7. மார்புப்பட எக்ஸ்ரேயும், இருதயமின்னலை வரைவுபடமும் 2-3 ஆண்டுகளுக்கு ஒரு தடவை எடுத்துக்கொள்வது நல்லது.

கீழ்க்கண்ட அறிகுறிகள் தோன்றினால் முழு உடல் பரிசோதனை நல்லது.

1. ஒரு புண்ணோ, காயமோ இரண்டு வாரங்களுக்குள் சீரடையாவிடில்,
2. சிறு நீர் மற்றும் சளி, மலம், வாந்தி ஆகியவற்றில் இரத்தம் வெளிப்பட்டால்,
3. பெண்களில் பிறப்பு உறுப்பு வழியாக மிகையாக இரத்தம் வெளிப்பட்டால்,
4. திடீரென்று எடை குறைந்து அசதி தோன்றினால்,
5. 10 நாட்களுக்கு மேற்பட்ட காய்ச்சல்,
6. உடலின் எந்தப்பகுதியிலாவது, திடீரென்று கட்டி தோன்றினால் அல்லது ஏற்கெனவே இருந்த கட்டி, பெரிதாகி வலி உண்டானால்,



படிப்பகம்

www.padippakam.com

7. ஏற்கெனவே உடலில் இருந்த மச்சம் அல்லது மறு பெரிதானாலோ அல்லது நிறம் மாறினாலோ,

8. மலஜலம் கழிப்பதில் ஏற் படும் மாற்றங்கள்,

9. பேசும் குரலில் மாற்றம்,

10. விழுங்குவதில் சிரமம்,

11. நாட்பட்ட, இடைவிடாத இருமல்.

பெண்கள் தாங்களாகவே தங்களது முலைகளை அமுக்கிப் பிதுக்கிப் பார்த்து ஏதாவது சிறிய கட்டிகள் தென்பட்டால் உடனடியாக டாக்டரை அணுகினால் சிகிச்சை மிகவும் எளிது.

மேற் கூறியபடி அடிக்கடி உச்சி முதல் உள்ளங்கால் வரை (45 வயதுக்கு மேல்) பரிசோதித்துக் கொண்டால் நோய்களை துவக்கத்தில் நிர்ணயம் செய்து, சிகிச்சை அளித்தால் செலவும் மிச்சம், தொந்திரவுகளும் குறையும். நாம் அடிக்கடி குறிப்பிட்டது போல் உடல் எடை குறைப்பு, உணவுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி பெருமளவு நலம் பயக்கும். புகைப்பிடிப்பதை அடியோடு நிறுத்துவதால் நீங்கள் உங்களுக்கும், உங்களது நண்பர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் அக்கம் பக்கத்தாருக்கும் நன்மை புரிகிறீர்கள். ★


தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற
தஞ்சை மாவட்டக் குழு தயாரிக்கும்
தாமரை வெண்மணிச் சிறப்பிதழ் சிறக்க....
எங்கள் புரட்சி வாழ்த்துக்கள்

தோழமையுள்ள,

**எம். கே. சதாசிவம்**

**சவுக்கு விறகு, முட்டுமரம் கரி,**
**மலர் வணிகம்**

மருதூர் தெற்கு - அஞ்சல் - 614714
வேதாரண்யம் - வட்டம்
தஞ்சாவூர் - மாவட்டம்




படிப்பகம்

www.padippakam.com

# கடன்

''ஏய் செங்கோடா! கோடி வீட்டு மாரி வலைக்கி போயி ருக்குறானா ?'' ஆறுமுகத்தின் குரல் கேட்டு வலை பொத்திக் கொண்டிருந்த செங்கோடன் தலையை நிமிர்த்தினான்.

''ஆமாண்ணே! என்ன விச யம் ? ஏதாச்சும் சொல்லனும்னா சொல்லுங்க வந்ததும் சொல்லிப் புடுறேன்''

''ஒண்ணுமில்ல-புதுசா வலை வாங்க கடன் கேட்டிருந்தோ மில்ல. அந்த கடன் பேங்குல தரப்போறாங்களாம் நாளக்கி. முதல் கட்டமா இருபது பேருக்கு தர்ராங்களாம். இருபது பேரை யும் காலைல பேங்குக்கு வரச் சொல்லி தலைவர் சொல்லி அனுப்பியிருக்காரு அதான் சொல் லிட்டு போகலாம்னு....''

''ஏண்ணே! எம்பேரு?'' செங் கோடன் திருப்பிக்கேட்டான்.

''உனக்கு அடுத்தவாட்டிதான் கிடைக்கும்போல. மறந்துடாம மாரிக்கிட்ட சொல்லிடு என்ன?''

''ஆகட்டுண்ணே! எனக்கு கிடைக்குதோ இல்லையோ! நம்ம ஆறுகாட்டுத்துறை மீனவர் களுக்கு கடன் கிடைக்க காரண மாயிருக்குற உங்களுக்கு எப்படி நன்றிசொல்றதுண்ணே புரியல'' செங்கோடனின் குரலில் நன்றி ததும்பி நின்றது.

''இதுல எனக்கு நன்றிசொல்ல என்ன இருக்கு செங்கோடா? எல்லாம் தலைவரோட அருள். அவருக்குத்தான் ஒட்டு மொத் தமா நன்றி சொல்லணும்'' என்று சொல்லித் தன் குடிசையை நோக்கி நடந்தான் ஆறுமுகம்.

''ஏங்க! இந்த கடன்ல வலை வாங்கினது போக ரூவாமிச்ச படு மில்ல?'' குரலில் எதிர்ப்பார்ப்பு நிறைய கேட்டாள் செல்லாயி.

''ஏன்? மிச்சப்படும். ரெண்டா யிரம் கொடுக்குறாங்க. அப்படி இப்படின்னு வலைவாங்கினது போக ஒரு இருநூறாவது மிச்சப் படாமலா போயிடப் போவுது?'' என்றான் மனைவியிடம் ஆறு முகம்.

''அப்படின்னா நான் ரொம்ப நாளா கேட்டுக்கிட்டிருக்கிற சின் னாளப்பட்டு சீலைய அதுல எடுத்து தருவீங்களாம்''

தன் மனைவியின் நீண்ட நாளான ஆசையை ஒரு நூறு முறையாவது கேட்டுக் கேட்டுச்

பொன்மணிதாசன்



படிப்பகம்

www.padippakam.com

சலித்துப்போன ஆறுமுகம் இந்த முறை ஏதோ புதிதாகக்கேட்பது போல உணர்ந்தான்.

''ஆகட்டும் புள்ளே! வலை போக எம்மா மீந்தாலும் சரி அம் மாத்துக்கும் சின்னாளப் பட்டு தான் போதுமா?''

கணவனின் உறுதியானவார்த் தைகளைக் கேட்டு சின்னாளப் பட்டுக் கனவுகளில் சிறையா னாள் செல்லாயி.

மறுநாள்—

வங்கி வாசலில் தன்னையும் சேர்த்து இருபது தலைகளோடு நின்று கொண்டிருந்தான் ஆறு முகம். காரில் வந்திறங்கிய தலை வர் தணிகாசலம்.

''வாங்க ஆறுமுகம், ஏன் வாசல்லயே நிற்குறீங்க உள்ளப் போயி உக்கார வேண்டியது தானே ? சும்மா வாங்க'' என்று உள்ளே நுழைய,

''பரவாயில்லேங்க'' என்று ஒப்புக்குச் சொன்ன ஆறுமுகம் தன் சகாக்களை அழைத்துக் கொண்டு அவரோடு உள்ளே போனான்.

தலைவர் மட்டும் வங்கியின் மேலாளர் அறைக்குள் சென்று வெளிப்பட்டவர் கணக்கில் மும் முரமாக ஈடுபட்டிருந்த ஒரு குமாஸ்தாவிடம் ஏதோ காதில் கிசு கிசுக்க தான் பார்த்துக் கொண்டிருந்த கணக்கு நோட்டை மூடிவைத்துவிட்டு இருபதுபேருக்கும் உண்டான கடன் பத்திரங்களை நிரப்பி ஒவ்வொரு பெயராக அழைக்க ஆறுமுகம் உட்படஇருபது பேரும் குமாஸ்தா நீட்டிய இடத்தில் கையெழுத்தும் ரேகையுமாக போட்டுக் கொடுத்தார்கள்.

அடுத்த கணம்.

''அப்பநீங்க எல்லோரும் நம்ம வீட்டுலபோய் இருங்க'' இன்னும் பத்து நிமிஷத்துல வந்துடுறேன் என்று தலைவர் தணிகாசலம் சொல்ல, தங்களுக்குத்தலைக்கு இரண்டாயிரம் கிடைக்கப்

''மன்னையில் மாபெரும் மளிகை உலகம்''

PARRY AGENCIES

Whole Sales, Retail
General merchant
62, Melarajaveethi, Mennargudi - 614012.

Agent : கதிர் மைதா - ரவா; பெருமாள் மைதா - ரவா
M S பிராண்டு Agmark நல்லெண்ணெய்



படிப்பகம்

www.padippakam.com

போகின்ற சந்தோஷத்தில் 'சரிங்க' என்று செம்மறியாய் தலையாட்டிக் கொண்டு நடந்தார்கள் இருபது பேரும்.

''ஆறுமுகம் நான் சொல்லுறேன்னு தப்பா நெனச்சுக்க கூடாது. நான் என்ன சொல்றேன்னா இந்த கடனிருக்கேஇது நான் ரெக்கமண்டேஷன்பண்ணி வாங்கின கடன். வரப்போறது இனி மழைக்காலம். இதுல உங்களுக்கு மீன் கிடைக்கிறது ரெண்டாம் பட்சம். வாங்கின கடன உங்களால ஒழுங்காக் கட்ட முடியாது. நீங்க ஒழுங்காக் கடனக் கட்டலேன்னு ஜாமீன்பட்ட நான் தான் இந்த கடனகட்டியாகனும். புரியுதா? அதனால இந்தலோன் பணத்த நானே வெச்சுக்கிட்டு கடன நானே உங்கபேருல கட்டிப்புடுறதா முடிவு பண்ணிட்டேன். எனக்கு இருக்குற பல பிஸ்னஸ்ல இந்த பணம் புரளட்டும். அடுத்தபடியா மான்யத்தோட ஒரு கடன் உங்களுக்கு ஏற்பாடு பண்ணித் தர்றேன். என்ன சரிதானே?'' தலைவர் தணிகாசலத்தின் அதிகாரக் குரலில் அழுந்திப்போன ஆறுமுகம் தலையையாட்ட, அப்புறமென்ன....?

''டேய் முனியப்பா இருபது பேருக்கும் குடிக்க நல்ல சரக்கா கொண்டுவந்து கொடு!'' தணிகாசலம் சொன்னதுதான் தாமதம்.

ஆறுமுகத்தைத் தவிர அத்தனைபேரும் சாராய போதை ஏறிப்போயிருக்க ஆறுமுகம் மட்டும் சிந்தித்துக் கொண்டிருந்தான்மனைவிகேட்ட சின்னாளப் பட்டைப் பற்றி. ★


தஞ்சை மண்ணின் மணம் கமழ முகிழ்க்கும் தாமரைக்கு வாழ்த்துக்கள்....

தஞ்சை மாவட்டத்தில் முதன் முறையாக
தமிழ்நாடு பரிசுச் சீட்டில் பம்பர் பரிசு
ரூ. 35 லட்சம் பெற்றுத் தந்த—

**சோழன் ஏஜன்ஸி**

(பரிசுச் சீட்டு உலகம்)

**2, பேருந்து நிலையம் / 47 காமராஜர் சாலை,**

**மன்னார்குடி.**

போன்: 794




படிப்பகம்

www.padippakam.com

# உப்புப் போர்

புனித பாரதத் தாயின் அடிமை விலங்கொடிக்கும் புண்ணியப் போரில் 'வேதாரணியம் வேள்வி' எனப்படும் உப்பு அறப்போர் பெருமிதமான ஒன்று. இது அண்ணல் காந்தியடிகளின் வடநாட்டுத் தண்டி யாத்திரைக்கு இணையாகத் தென்னக மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த போராட்டமாகும். மேட்டுக்குடியினரிடையிருந்த அன்றைய அரசியல் சிந்தனையை அகலமாக்கிப் பாமரரிடமும் பரப்பிய பணி இதனையே சாரும். இந்தியர் அனைவர் கவனத்தையும் ஈர்த்தது இந்த இனிய இயக்க எழுச்சி. அனைவரும் பயன்படுத்தும் இயற்கையின் கொடையாகிய உப்புக்கும் வரி விதித்து இந்தியரைச் சுரண்டிய ஆங்கிலேயரின் சுரண்டல் கொடுமையைத் தோலுரித்துக் காட்டியது இந்த வீர வரலாறு.

ஆங்கிலேயர்களின் காலனி நகர்கள் ஏடன், லிவர்பூர் அங்கிருந்து இந்தியா வரும் வணிகக் கப்பல்களின் அடித்தளத்தில், கப்பல் ஆடாதிருக்க ஏற்றப்பட்ட பொருள் உப்பு. அதனையும் காசாக்க விரும்பியது ஆங்கில அரசு. எனவே இங்கு விளையும் இயற்கைத் தாயின் கருணைக் கொடையாம் உப்புக்குக் கலால் வரி விதித்தது அந்த அரசு. எவ்வளவு தெரியுமா? உப்பின்விலை 12 காசு. அரசாங்கம் விதித்த வரியோ மூன்று ரூபா பதின் மூன்று காசு. ஆக ஒரு மூட்டை உப்பின் விலை மூன்று ரூபா இருபத்தைந்து காசுஆக உயர்ந்தது. இவ்வரி விதிப்பு உள் நாட்டு உப்பு உற்பத்தியைக் குறைத்தது. இத்தொழிலில் ஈடுபட்டோரின் வயிற்றில் மண் விழுந்தது.

அரசுப்பணிகளில் இந்தியர்க்கு இடம் கேட்டுப் பெறுவதையே வெற்றியாகக் கருதி வந்த தேசிய இயக்கத்தின் பார்வை இத்திசையில் திரும்பியது. இந்தியத் தொழி

வை. பழனிச்சாமி

லும் வணிகமும் நலிவடைவதையும் இந்தியர் அணு அணுவாகச் சுரண்டப் படுவதையும் கண்டது காந்தியத் தலைமை 'சுதேசியம்' என்னும் மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கியது, பாமரனும் இப்பாதிப்பை உணர அவனைப் பாதித்த உப்பு வரிப் பிரச்னையை முன்வைத்துப் போராடத் துணிந்தது. அதன் விளைவே இமயம் முதல் குமரி வரை தேசிய உணர்வூட்டிய உப்புச் சத்தியாக்கிரகம்.

1930 ஏப்ரல் 13 ஆம் நாள்



படிப்பகம்

www.padippakam.com

அதிகாலைப் போதில் திருச்சி மாநகர் புதியதோர் காட்சியைக் காணக் கண் விழித்தது. வெள்ளைக் கதராடையும் குல்லாவும் தரித்த தொண்டர்கள் நூற்றுவர் மூவண்ணக் கொடியேந்தி மூதறிஞர் இராசாசி தலைமையில் அணிவகுத்துச் சென்றனர். திருச்சி நகர வீதிகளில் இரட்டை அணியாய்ச் செல்லும் அறப் போர்த் தொண்டர்களை வழியனுப்ப அவ்வைகறைப் போதிலும் சாலை இருமருங்கும் திரண்டிருந்தனர் நகர மாந்தர். சாதி சமய வர்க்க வேறுபாடு கடந்து அனைவரும் அப்படையின் வெற்றிக்குப் பல்லாண்டு பாடி மகிழ்ந்தனர்.

தொண்டர் படையின் நெடும் பயணம் ஏறத்தாழ 250 கிமீ தொலைவு கொண்டது. திருச்சி திருவரங்கம், திருவானைக்கா கடந்து தஞ்சை மாவட்டத்தில் நுழைந்து, பாபநாசம்,குடந்தை நீடாமங்கலம், மன்னை, திருத்துறைப்பூண்டி வழியாக ஏப்ரல் 29-ஆம் நாள் மாலை 5 மணிக்கு அடியெடுத்து வைத்தனர் அத் தொண்டர்கள். நெடும் பயண வழியெங்கும் ஆங்கில அரசின் அடக்குமுறைச் சட்டங்கள் மக்கள் சக்தியால் தூள் தூளாயின; அவசரச் சட்டங்கள் நிர்மூலமாயின. தொண்டர்படை விருந்தோடும் விழாக் கோலத்தோடும் வரவேற்று உபசரிக்கப்பட்டது, திருச்சி, தஞ்சை மக்களின் தேசிய உணர்ச்சி அணையுடைத்தெழும் வெள்ளம்போல் வெளிப் படக் கண்டனர் ஆங்கிலேயர்கள். எளிய உடையோடும் அரை வயிற்று உணவோடும் நாளோட்டிய அடித்தளத்து மக்களும் தங்கள் காணிக்கையைச் செலுத்தித் தம் நாட்டுணர்வைக் காட்டி நின்றனர். மாற்றான் ஆணைக்கு அடங்க வழி மருங்கமைந்த ஆல அரச மரங்களும மறுத்தன. தம் கிளைகளிலே பல்சுவை உணவும் பொட்டணங்களைக் கொத்துக் கொத்தாய்க் காய்த்து வழங்கித் தொண்டர்களுக்கு இளைப்பாற இடமும் தந்துதவின.

இலண்டன் மாநகரத்துச் சட்டம் இந்திய நகர்களில் மட்டுமின்றி, பட்டிக் காட்டுக் கிராமங்களிலும் புறக்கணிக்கப்படும் இழிநிலைக்கு இறங்கி ஏங்கியது அரசு. இரத்த வெறி பிடித்த தஞ்சை மாவட்ட அன்றை ஆங்கில ஆட்சித் தலைவன் ஏ. ஜே தாரன் என்பான் (தார்ன் என்ற ஆங்கில சொல் முள் என்று பொருள் கொண்டது அன்றைய நகைச்சுவை) குண்டாந்தடிப் பரிசுகளை வழங்க ஆணையிட்டான். அரசின் துண்டறிக்கை மதிக்கப்படாத இடங்களெங்கும் குண்டாந்தடிகளே கோலோச்சின. அறப் போர்த் தொண்டர்

www.padippakam.com

களும் பட்டிக் காட்டுப் பாமரர்களும் தடியடியை இன்முகத்துடன் தாங்கினார்; ''அச்சமில்லை அச்சமில்லை'' என்னும் புரட்சிப் பாவலன் பாரதியின் பாடல் வரிகளை வானகம் அதிரப் பாடி மகிழ்ந்தனர்.

தென்னகம் எதிர் பார்த்த அந்த நன்னாளும் வந்தது. 1930 ஏப்ரல் 30ஆம் நாள் அதிகாலைப் போது அறப் போர்ப்படை முகாமில் தொண்டர் அனைவரும் தம் கடன் முடித்துத் தலைவனைத் தேடினர். தொண்டர்களுக்கு முன்னரே துயிலெழுந்த தூயோன் இராசாசி சிலருடன் அகத்தியம் பள்ளிக்கு அருகில் தடைமீறி உப்பெடுத்து, காவலரால் கைது செய்யப்பட்டதும், மற்றவர்கள் உப்புடன் மீண்டதும் அறிந்து தொண்டர்கள் ஆனந்தக் கூத்தாடினர்

ஆறு மாதச் சிறை விதிப்பை ஏற்று அன்றே சிறை சென்றார் இராசாசி புற்றீசல்போல் புறப்பட்ட தென்னாட்டு மறவர்களையும் பம்பாய் வாழ் தமிழ்த் தொண்டர்களையும் அடக்கும் வழியறியாது தவித்தனர் காவலர் சர்தார் வேதரத்தினம் அவர்களைச் சிறையிட்டால் இயக்கம் நிலை குலையும் என்று மனப்பால் குடித்தது காவல்துறை சர்தார் சிறையிடப்பட்டதும், எதிர்பார்ப்புக்கு மாறாக அறப் போர் மென்மேலும் கிளர்ந்தெழுந்தது.

தாரன் துரையின் இரும்புக்கை செயலற்றது. மேத்திங்கள் 29-ஆம் நாள், பாடுபட்டுக் கட்டிய தேன் கூட்டைக் குலைத் தழிக்கும் கொடுமனத்தான்போல் அறப்போர் தியாகிகளின் முகாம் காவலர்களால் தகர்த்தெறியப் பட்டது. தொண்டர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு மே, 30, 31 நாட்களில் தண்டனை பெற்று சிறைக்கூடம் புகுந்தனர்.

நாட்டுரிமைப் போரில் இப் புனிதப் போர் ஒரு திருப்புமுனையாயிற்று. விடுதலை உணர்ச்சி காட்டுத்தீப்போல் பரவி நாடெங்கும் சுடர் விட்டெரிந்தது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் வெற்றி நடை போடக் கால் கோள் விழாவாக அமைந்தது இந்த உப்புப்போராட்டமே! தஞ்சை மாவட்டத்தில் பின்னர் தோன்றிய உரிமை இயக்கங்களுக்கும் உழைப்பாளர் இயக்கங்களுக்கும் இந்த உப்புப்போர் வழிகாட்டியாக விளங்கியது என்பதிலும் ஐயமில்லை.

★



படிப்பகம்

www.padippakam.com



## கவிஞர் மீனவனின்

# முத்திரைக் குமரி

''மனிதன் பயனின்றி அழியக் கூடாது''

என்றார் மாக்சிம் கார்க்கி. உயர்ந்த மரபுகளை உருவாக்கி நெறிபடுத்திய மேதைகளின் வழியினைத் தொடர்ந்து தமது கற்பனைச் சிறகுகளால் பறந்து பறந்து கவின்பெறப் பாடிய கவிஞர்கள் எத்தனையோ பேர்.

தேவையற்ற குப்பைகளை இலக்கியத் தேனில் குழைத்துத் தந்து மக்களைக் குழப்பிய கவிஞர்கள் மண்ணில் காலூன்றாமல் வானிலேயே வட்டமிட்ட கற்பனைக் கவிஞர்கள் - இவர்கள் மத்தியில் சமுதாயத் தேவைகளை உணர்ந்து, காலங்கருதி மக்களைத் தட்டியெழுப்பிய பாரதி, பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர்களில் ஒருவர் - அவர்தான் கவிஞர் மீனவன்,

''புலன்கள் உணர்ந்த வற்றைப் பொய்த்திரையால் மூடாமல் சமுதாய விழிப்புக்குச் சலங்கையொலி மீட்டும் தமிழ்க் குமரி நடம் காணத் தவமிருந்தேன்''

இவ்வாறு பணிந்துரையில் குறிப்பிடும் கவிஞர் மீனவனின் இந்தத் தவத்தின் விளைவுதான் எழில் மிகுந்த ''முத்திரைக் குமரி''

பதினைந்து வயதிலேயே பாடத் தொடங்கிய கவிஞர்

### கோவி. தியாகராசன்

தமிழ் இலக்கியச் சோலையில் தடம் பதித்துச் சென்ற கவிதைகளைத் தொகுத்து முத்திரைக் குமரியாகத் தந்திருக்கிறார்.

மொழியியல்.
நாட்டியல்.
உழைப்பியல்
காதலியல்
உலகியல்
நினைவியல்
கனவியல்

இவ்வாறு ஏழு இயல்களாகப் பிரித்து அவற்றின் ஊடே எழுபது கவிதைகளை உள்ளமைத்துப் பாடிய கவிஞர் நெஞ்சில் சமுதாய மேம்பாடே குறிக்கோளாக மிளிர்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

மொழியியலில்...

நெஞ்சின் ஒளியே
நினைவின் சுனையே
நீல விழிச் சிறகே!

-எனத் தமிழ்த் தாய் வாழ்த்து பாடித் தொடங்கும் கவிஞர், செருகல் ஏற்பட்டதால் தமிழ் மொழி சிதைந்து நிற்கும் நிலை கண்டு உருகும் பாங்கு-புகழ்பாடுவது மட்டும் போதாது- நலிவு கண்டால் அதனை நீக்கத் துடிக்கும் நெஞ்சத் துணிவும் வேண்டும் என்பதை உணரச் செய்கின்றது.

நாட்டியலிலே தமிழகம் தொடங்கி வியட் நாம் வரை வீர நடைபோடும் கவிஞர், பொதுவுடமை பூத்துக் குலுங்க புல்லுருவிகளை இனங்காட்ட எத்துணை ஆர்வம் கொண்டிருக்கிறார் என்பதைக் காண முடிகிறது.

உழைப்பியல் கவிஞரின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

கைம்மா றுனக்கிலையே
கற்பூ ரச்சுடரே!

என்று உழைப்பவனைக் கண்டு உருகி நிற்கிறார் கவிஞர். நெய்தலம் பாலையாக, மீனவனாக நீலக் கடலருகே நித்தம் நித்தம் நடைபோடும் காரணத்தாலோ என்னவோ கவிஞரது உள்ளத்தில் 'ஆழித் தொழிலாளி' உண்டாக்கிய பாதிப்பைக் காண முடிகிறது.

மேழித் தொழிலாளி
சாலைத் தொழிலாளி
துப்புரவுத் தொழிலாளி
ஒப்புரவுத் தொழிலாளி

இவர்களோடு ஆசிரியர், எழுத்தாளர், படை மறவர்கள் என இவர்களையும் இணைத்துச் சமுதாயக் கூட்டமைப்பின் மேம்பாட்டிற்கு இவர்களது பங்கினையும் எடுத்துக் காட்டுகிறார் கவிஞர்.

'ஒப்புரவுத் தொழிலாளி' என்ற தலைப்பில் மக்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும்

பாஸ்போர்ட் எடுக்க, கப்பல்—விமான டிக்கெட்டுகள் பெற, பழைய—புதிய பாடல்கள் பதிவு செய்ய, வாங்க மிகச் சிறந்த ஸ்தாபனம்—

**ராஜ் டிராவல்ஸ்**

நியூ கீதாலயா மியூசிக்கல்ஸ்
11 புதிய பேருந்து நிலையம்
மன்னார்குடி.



படிப்பகம்

www.padippakam.com

அனைத்துத் தொழிலாளிகளையும் பாடி அவர்களது தாழ்ந்த நிலைகண்டு சீறி எழுகிறார்.

உழைப்பவர் தாழ்ந்தோர்
என்றும்
உறிஞ்சுவோர் உயர்ந்தோர்
என்றும்
அழைத்திடு சாத்திரப் பொய்
அழியட்டும் நமக்கு
வேண்டா!

காதலைப் பற்றிப் பாடாத கவிஞர் உண்டா?

காதலியலில் இவரும் பாடுகிறார் - இசைப் பாடலாகவும் பாடுகிறார்.

ஒருவன் ஒருத்தி
உணர்வு மிகு காதல்
இருவர் தம் அன்பின்
இனிப்பு

என்று ஒப்புதல் தரும் கவிஞர் ''எப்படித்தான் சொல்வேன்'' என ஏங்கித் தவிக்கும் போது... பாவம் காதலர்கள்! உலகியலில் திருமணம், வாழ்க்கை,மகப்பேறு எனத் தொடங்கிப் புதுமைப் பெண்ணையும் படைத்துக் காட்டுகிறார். மேலும் புதுமை கண்ட புகழாளர்கள் - பகுத்தறிவுப் பணி இவற்றுடன்.

''என்னடா உலகம்'' என்ற ஏக்கப் பெருமூச்சுடன் ஆதிக்க சக்திகளின் முகத்திரையைக் கிழிக்கக் குரல் கொடுக்கிறார் கவிஞர்.

நினைவியலில்,

வள்ளுவர், காந்தியடிகள், நேரு, பெரியார், காமராசர், அண்ணா, அம்பேத்கார், சிங்காரவேலர், பாரதியார், பாவேந்தர் - ஆகியவர்களை நினைவு கூர்வதன் மூலம் இவர்களது தொண்டினையும் தூய சிந்தனையையும் தந்து சிந்திக்கத் தூண்டுகிறார் கவிஞர்.

கனவியற் பகுதியில் கவிஞர் ''புகாரில் ஒரு நாள்'' போட்டியில் பரிசு பெற்ற கவிதை இடம் பெற்றுள்ளது.

காரல் மார்க்சின் கடும்
பயணம்
கவிஞன் காதல்
தமிழ்த் தாய் அறிக்கை.

எல்லாமே கவிஞன் தமது கனவில் தோன்றுவனவாக அமைத்துப் பாடியிருப்பதால் அவற்றை இப்பகுதியில் இடம் பெறச் செய்திருக்கிறார்.

தமிழகத்தின் மூன்று முதல்வர்களிடம் முத்திரைக் கவிஞராகச் சிறப்பு பெற்ற பெருமை இவருக்குண்டு. கவிஞர் மீனவன் தமிழுக்குத் தேனவன்.

விலை ரூ. 15-00

அருமையான நூல். அழகிய படைப்பு. நூல் கிடைக்குமிடம்:.
அம்பிகாபதி நிலையம்
16 B, புதுத்தெரு,
நாகப்பட்டினம்- 611001.

www.padippakam.com

# காலந்தோறும்

# மனுவின் கதை

தஞ்சை மாவட்டத்தில் பல நகரங்கள் இருந்தாலும் திருவாரூர் நகரம் புராண காலம், தொட்டு இன்றுவரை சிறப்புடையதாகவே உள்ளது. திருவாரூரை நினைக்கும்போது அந்நகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மனுநீதிச் சோழனின் கதை எல்லோர் நினைவிலும் நின்று நிழலாடும். நாட்டுப்புறக் கலை வடிவில் இருந்த இந்தக் கதை ஒரு காலத்தில் இலக்கியத்திற்குள் புகுந்து கொள்கிறது. பின்னர் பக்தியாளர்கள் கைக்குப் போய் இறையுணர்வோடு கூடிய புராணத் தன்மை பெற்று மீண்டும் நாட்டுப்புறக் கலைத் தன்மை பெறுகிறது, இடைப்பட்ட காலத்தில் இந்த வரலாற்றைத் தனதாக்கிக்கொள்ளாத சோழ மன்னர்கள் மிகக் குறைவு என்றே சொல்லலாம். கடல் கடந்த ஈழநாடு கூட இக்கதையைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

**மனுநீதிச் சோழன் கதை:—**

மனு நீதிச் சோழன் குடிமக்களுக்குக் காட்சிக்கு எளியனாக இருக்கஆசை கொண்டான். துன்பம் கொண்ட மக்கள் தன் அரண்மனைவாயிலில் உள்ள மணியை அடித்தால் அவன் ஓடோடி வந்து குறை தீர்க்கும் இயல்பினன். ஒரு நாள் ஒரு பசுவால் அந்த மணி ஒலிக்கப் பட்டது. விரைவாக வந்து விசாரித்தான். அப்பசுவின் கன்று தன் மகன் வீதிவிடங்கனால் கொல்லப்பட்டதை அறிந்து மிகவும் வருந்தினான். அமைச்சர்களை அழைத்தான். பசுவின் துயர்தீர என்ன தண்டனை கொடுப்பது? என்று கேட்டான். அவர்கள் ஆராய்ந்து மறையவர்கள் விதித்தவிதிப்படி நின்று பரிகாரம் செய்வோம் என்றனர், மன்னன் மனம் ஒப்பவில்லைபசு அடைந்த அதே துயரத்தை நான் என் மகனை இழந்து அடைய வேண்டும் என்று கூறி, தானே தேரில்ஏறி தன்மகனைத் தேர்க்காலில் இட்டுக்கொன்றான் என்று பெரியபுராணம் கூறுகிறது இம்மன்னன் மனுஸ்மிருதியின் நெறிப்படி ஆட்சி செய்ய விரும்பியே தன்பெயரை மனு என்று மாற்றிக் கொண்டான் என்று பெரிய புராணம் கூறினாலும் இவன் மனுஸ்மிருதியில் கூறியுள்ள பரிகாரங்களை ஏற்காமல் அதற்கு மாறான செயலைச்செய்துள்ளான்.

புலவர் மு. சந்திரசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

## சிலம்பில் மனு

சிலப்பதிகார காலத்தில் இந்தக் கதை நாட்டுப் புறக் கலை வடிவத்தில் புகார் நகரத்துக்குச் சொந்தமானதாக இருந்திருக்கிறது. வாழ்த்துக் காதையில் அம்மானை வரி ஆடும் போது ஒரு பெண்.

''புறவு நிறைபுக்குப் பொன்
னுலக மேத்தக்
குறைவில் உடம் பரிந்த
கொற்றவன் யாரம்மானை''

என்று மற்றொரு பெண்ணிடம் கேள்வி கேட்கிறாள் அதற்கு அவள்

''குறைவில் உடம் பரிந்த
கொற்றவன் முன் வந்த
கறவை முறை செய்த காவ
லன் காணம்மானை''

என்று பாடுகிறாள். இந்தப் பாடல் புறாவுக்காகத் தன் தசையை அரிந்து கொடுத்த சிபிச்சக்ரவர்த்தியும் நீதிக்காகத் தன் மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனு நீதிச் சோழனும் ஒருவனே என்று கூறுகிறது.

கண்ணகி பாண்டியன் நெடுஞ் செழியனிடம் வாதிடும் போது தன் ஊரின் பெருமையை கூறுகிறாள். அப்போது,

''வாயிற் கடைமணி நடு நா
நடுங்க
ஆவின் கடை மணி உகு நீர்
நெஞ்சுடத்தான் தன்
அரும் பெறற் புதல்வனை
ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என்
பதியே''

என்று கூறுவதன் மூலம் இந்தக் கதை புகார் நகரத்துக்குச் சொந்தமானதாகக் கூறுகிறாள். நாட்டுப் புறக்கலை வடிவத்தில் இருக்கும் போது புகார் நகரத்துக்குச் சொந்தமானதாக இக் கதை விளங்குகிறது.

## கல்வெட்டில் மனு:

கி. பி. 1123 ஆம் ஆண்டு விக்கிரம சோழனால் வெட்டப்பட்ட கல்வெட்டொன்று திருவாரூர் கோயிலில் கிடைத்துள்ளது. இது சேக்கிழார் காலத்திற்கு முற்பட்டது என்று திருவாரூர்த் திருக்கோயில் என்ற நூல் எடுத்துக் காட்டுகிறது.

இக்கல்வெட்டு மூலம் மனு திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதும் அங்கே இக்கதை நிகழ்ந்ததும் கூறப்படுகிறது. முதன் முதலில் இக்கதையைத்திருவாரூருக்கு உரிமை ஆக்கியதும் இக்கல் வெட்டுதான்.

## பெரிய புராணத்தில் மனு

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பெரிய புராணம் பாடிய சேக்கிழார் திருவாரூரின் பெருமையைப் பாட வருகிறார். திருவாரூர் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமை



படிப்பகம்

www.padippakam.com

உடையது. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத்தொகை பாடப்பட்ட ஊர் தில்லைக்கு அடுத்த படியாக சைவர்கள் வணங்கும் திருத்தலம் இப்படிப் பட்ட ஊரின் பெருமையைப் பாட வந்த சேக்கிழார், இக்கதையைத் தனது நூலில் விரிவாகப் பாடி இக்கதைக்கு ஒரு செவ்வியல் இலக்கியத் தன்மையைக் கொடுக்கிறார். நாட்டுப்புறக் கலை வடிவத்தில் இருக்கும் இக்

## ராஜகுரு

கொள்ளிடக் கரையில் பிறந்து ஆரூரில் வாழும் இவர் தீயணைப்புத் துறையில் பணிபுரிகிறார். தரமான சிறு கதைகள், புதினங்களை நல்ல தமிழில் எழுதித் தமிழ் இலக்கிய உலகில் தனியிடம் பிடித்தவர். சமூக அவலங்களையே தன் கதைக்குக் கருவாக்கிக் கொள்பவர். உணர்ச்சிகள், போராட்டங்கள், சோழனின் காதலி, காதலாகிக் கரைந்து.... முதலிய புதினங்களைப் படைத்தவர். கலைமகள், தேவி முதலான இதழ்கள் நடத்திய போட்டிகளில் வென்றவர். எல்லாத் தமிழ் இதழ்களிலும் எழுதி வருபவர்.

கதை, சேக்கிழார் பெருமானால் செவ்வியல் வடிவம் பெறுகிறது

### இலக்கியங்களில் மனு

சயங்கொண்டார் தன் கலிங்கத்துப் பரணியில்

"அவ்வருக்கன் மகன் ஆகி
மறு மேதினி புரிந்து
அரிய காதலனை ஆவினது
கன்று நிகரென்று
எவ்வருக்கமும் வியப்ப முறை
செய்த

என்று கூறுகிறார்.

"மையல் கூர் சிந்தனை
யாவிற்கு முற்றத் திருத்
தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோன்

என்று விக்கிரம சோழனுலாவும்

"பார் மேல் மருளப் பசு
வொன்றின அம்பர் நோய்
தீர உருளு திருத்தேர் ஊர
வோன்"

என்று குலோத்துங்க சோழனுலாவும்

"அறவாழி மைந்தன் மேல்
ஊர்ந்தோன்"

என்று இராசராச சோழனுலாவும்

வெய்யோறும் செம்மலைப்
பண்டூர்ந்த தேரோனும்

என்று சங்கர சோழனுலாவும் மனுச் சோழனின் பெருமையைப் பறைசாற்றுகின்றன.

### இலங்கையின் மகாவம்சத்தில் மனு

ஈழநாட்டின் வரலாறு கூறும்



படிப்பகம்

www.padippakam.com

மகாவம்சம் என்னும் நூலில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் சோழ நாட்டு மன்னன் ஒருவன் ஈழநாட்டை வென்றதாகவும் அவன் 45 ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்ததாகவும் கூறுகிறது. அவன் பெயர் ஏழாரம் என்றும் அவன் நீதிக்காத் தன் ஒரே மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற உத்தமன் என்றும் கூறி, இக்கதையை ஈழநாட்டிற்குச் சொந்தமாக்கிக் கொள்கிறது.

## பக்தி இலக்கியத்தில் மனு

திருவாரூர் தியாகராசப் பெருமானைப் பாடிய பிரபந்தங்கள் வரிசையில் தியாகேசர் குறவஞ்சி மிகவும் சிறப்புடையது கி.பி 1684 முதல் 1714 வரை ஆண்ட காசிமகாராசாகாலத்தில் முத்துக் கவிராயர் என்பவரால் எழுதப்பட்ட இந்த நூலில்-

''மனுநெறி தழைக்க வையகம் புரக்கும்
தினகரகுலத்தில் திகழ்மனு
வேந்தன்
மெய்யன் புலகில் விளங்கிட
வேண்டி
ஐயன் பசுவாய் அந்தகன்
கன்றாய்''

வந்ததாகக் கூறியுள்ளார். அதாவது தியாகராசப் பெருமானே பசுவாகவும் எமன் கன்றாகவும் வந்து மனு நெறி நடத்தும் மனு மன்னனுக்கு அருள் பாலித்தார் என்று அந்த நூல் இந்தக் கதையை விரிவாக எடுத்துக் கூறுகிறது. சேக்கிழாரால் செவ்வியல் தன்மை அடைந்த இக்கதை இக்குறவஞ்சியின் மூலம் பக்தி இலக்கியத் தன்மை பெறுகிறது.

திருவாரூர் அம்மானை என்ற நூலில் இதே கருத்து அமையுமாறு செய்திகள் உள்ளன.

''ஈசன் பசுவாகி ஏமன் ஒரு
கன்றாகி

அனைவரும் விரும்பியே ஆர்வமுடன் உண்ணும்
அறுசுவை உணவகம் அதன் ருசி தனி நகரம்!
உடுப்பி கிருஷ்ணபவன்
வெஜிடேரியன்
Best and Pure Vegetarian Restaurent
பந்தலடி வடபுறம் மன்னார்குடி
கோடைக் கேற்ற குளிர்பானங்கள் கிடைக்கும்!



படிப்பகம்

www.padippakam.com

வீசுப் புகழ் ஆரூரின் வீதி வந்
தார் அம்மானை
வீசு புகழ் ஆரூரின் வீதி வந்
தார் ஆமாகில்
காசளவு பாலேனும் கறக்
குமே அம்மானை
கன்றை உதை காலி கறக்
குமோ அம்மானை''

இறைப்பற்றார் இக் கதையை தன் வசதிக் கேற்றார் போல் கற்பனை கலந்து திருவாரூர் இறைவன் தியாகேசனோடு சம்மந்தப்படுத்திக் கொள்கிறார்கள்.

## மனு நீதிச்சோழ நாடகம்

தஞ்சை மாவட்டம் வலங்கை மானுக்கு அருகமைந்த ஆண்டாங் கோவில் என்ற சிற்றூரில் மனு நீதிச் சோழ நாடகம் என்ற தமிழ் இசை நாடகம் ஓலைச் சுவடியாக உள்ளது. இவ்வரிய இலக்கியமும் கூத்துத் தமிழும் அழிந்து போகவண்ணம் ஒவ்வோர் ஆண்டும் அந்த நாடகமாக நடிக்கப்படுகிறது. கர்நாடக இசையை முறைப்படி பயன்படுத்தி பாடல்களின் சந்தங்களுக் கேற்ப ராகங்களும் முறைப்படுத்தப் பட்டுள்ளதை அந்தச் சுவடியில் காண முடிகிறது. தியாகேசர் குறவஞ்சியும், திருவாரூர் அம்மானையும் கூறியுள்ளது போலவே இதிலும் தியாகேசன் பசுவாகவும் எமன் கன்றாகவும் வந்த செய்தியும் விளக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகார காலத்தில் நாட்டுப்புறக் கலை வடிவில் இருந்த இக்கதை சேக்கிழாரால் செவ்வியல் இலக்கியத் தன்மை பெறுகிறது. பின்னர் சமயச் சார்புடையதாகி மீண்டும் நாட்டுப்புறக்கலைத் தன்மையடைந்து இன்னும் நடிக்கப்படுகிறது. ஒரு நல்ல நிகழ்ச்சி என்றால் அதைப் போலவே தானும் நடக்க வேண்டுமென்ற ஆர்வத்தால் அவரவர் தம் கற்பனைக்கு ஏற்றபடி மாற்றி மனுஸ் மிருதியைக் கொள்கையாகக் கொண்டவர்கள் கூட தனக்கு ஏற்றபடிக் கதையை மாற்றித் தனதாக்கிக் கொண்டதை இக்கதை நமக்கு உணர்த்துகிறது. ★

நவ நாகரீக டிசைன்களில்
நகைகள் வாங்கிட....

அழகு ஜுவல்லரி

பெரிய தெரு,
பட்டுக்கோட்டை.



படிப்பகம்

www.padippakam.com

# நகைச்சுவையும் பகைச்சுவையும்

சுவைகளில் உயர்வானது நகைச்சுவை. அதே சமயத்தில் ஆபத்தானதும்கூட.

இருபுறக் கூர்மை இதற்கு உண்டு. மகிழ்வையும் தரும். தவறாகப் பயன்படுத்தினால் துயரத்தையும் உண்டாக்கும்.

## நகைச்சுவையும் தொல்காப்பியமும்

தொல்காப்பியக் கருத்துகள் சிந்திக்கற்பாலன,

'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப!

இச்சூத்திரம் எண்வகை மெய்ப்பாடுகளை விளக்க வந்தது. நவ ரசங்களில் சமநிலை ஒன்றைத் தவிர்த்து எட்டு ரசங்களைக் கூறுகிறார் தொல்காப்பியர். இதில் முதற்சுவையாக உயர்த்தியிருப்பது நகைச்சுவையை, கடைசிச் சுவை உவகை, சிரிப்பைத் தனியாகவும் உவகை என்னும் மகிழ்ச்சியைத் தனியாகவும் தருவதிலிருந்தே சிரிப்பு என்பது மகிழ்ச்சிக்கு மட்டும் அடையாளமென்று தொல்காப்பியங் கொள்ளாதது புரிகிறது.

மகிழ்ச்சியில்தான் சிரிக்கவேண்டும் என்பதில்லை. மகிழ்ச்சியில் சிரித்தே ஆகவேண்டும் என்பதும் இல்லை. சிரிப்பு பல காரணங்களால் தோன்றும். தொல்

புலவர்
இரெ. சண்முகவடிவேல்

காப்பியர் நகைப்பு தோன்ற நான்கு காரணங்கள் கூறியுள்ளார்.

'எள்ளல் இளமை பேதமை
மடன் என்று உள்ளப்பட்ட
நகை நான்கு என்ப'

## எள்ளலால் தோன்றும் நகைப்பு

இகழ்வதன் பொருட்டும்—இளமையின் பொருட்டும்—பேதைமைப் பொருட்டும்-மடமையின் வழியும் நகைப்பு தோன்றலாம்.



படிப்பகம்

www.padippakam.com

தோன்றலாம் என்ன? தோன்றும் என்றே கூறுகிறார்.

பிறரை இகழ்வதற்காக நகைக்கலாம்; நகைப்போம். இது இயற்கை. இகழ்வதற்காக நகைக்கலாமா?

கால்முடமாகி நடக்கமுடியாத ஒருவரை இகழலாமா? கால் முடமான ஒருவர் ஒரு சங்கத்துக்குத் தொடர்ந்து பொருளாளராக இருந்துவந்தார். தலைவர், செயலர் முதலிய பிற பொறுப்புகளுக்குப் போட்டியும் தேர்வும் பலமாக இருக்க, பொருளாளர் பதவிக்கு மட்டும் அந்தக் கால் முடமான அன்பரே ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இது அச்சங்கத்தில் ஆண்டுதோறும் வாடிக்கை.

நண்பர் ஒருவர் 'ஏன் இவருக்கு மட்டும் போட்டியே இருப்பதில்லை?' என்று கேட்டபோது குறும்புக்காரர் ஒருவர் கூறியதைக் கேளுங்கள்.

''பண விஷயமில்லையா! வேறு யாரையும் போட்டால் எடுத்துக்கொண்டு ஓடிவிடுவார். அண்ணன் போனாலும் பஸ்ஸ்டாண்டு போறதுக்குள்ள புடிச்சிடலாம். பாருங்க!'' என்று ஏகடியம் பேசினார்.

இதைக் கேட்ட நண்பர்கள் யாவரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

சரி, இன்னொருவரின் ஊனம் நகைப்புக்குரிய ஒன்றா? எவ்வளவு பெரிய துன்பம் அந்த ஊனமுற்றவருக்கு ஏற்படும் என்பதை எண்ணிப் பார்த்தால் நகைக்கத் தோன்றுமா? நகைச்சுவையின் தவறான பரிமாணம் இது.

ஒருவரின் ஏழ்மையை இகழ்வதும் இத்தகையதே. வசதி படைத்த சிறுவன் ஒருவன், கிழிந்த கால் சட்டை அணிந்தவனின் கால்சட்டைக் கிழிசலில் தாளைப் போட்டுவிட்டு 'தபால் பெட்டியில் கடிதம் போடுகிறேன்'. என்கிறான். ஏழ்மையை இகழும் பெற்றோர் அல்லது சூழ்நிலை அவனுக்குக் கற்றுத் தந்த கயமை அல்லவா இது! ஆசிரியர்கள் இதனைக் கண்டித்துத் திருத்த வேண்டும்.

''சாப்பிட்டு நாலு நாளாச்சி'' என்று காய்ந்த வயிற்றைக் காட்டிப் பிச்சை கேட்பவனிடம்,

''அப்படியெல்லாம் சாப்பிடாம இருக்கப்படாதுப்பா. உடனே போய் சாப்பிடு. உடம்பு என்னத்துக்காகும்!'' என்று ஆலோசனை' கூறும் அசடரும் இப்பட்டியலில் அடங்குவர்.

இதே எள்ளலை தீமையின்பக்கம் திருப்பினால் நல்ல பயன் நல்கும் எள்ளலாகிவிடும்.

நன்கொடை வாங்கப்போய் நோட்டை நீட்டுபவரிடம் நீங்க



படிப்பகம்

www.padippakam.com

என்ன போட்டிருக்கீங்க?'என்று அவர் கேட்டால்.

'40 பக்கம் நோட்டு நான் தான் போட்டேன்' என்று கூறுவதாகக் காட்டுவது பயன் நல்கும் எள்ளளாகுப் பிறரை நன்மை செய்யச் சொல்பவர் தானும் அதைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று காட்டுகிறது. தீமையை எள்ளுவது நல்லதே.

அறிஞர் எனப் போற்றப்படும் பெர்னாட்ஷா பிறர் எல்லோருமே 'இளிச்சவாயர்' என்று எண்ணும் கெடுமதிப் போக்கை உடையவர்

ஒருவர் மட்டுமே நடக்க முடிந்த வரப்பு,எதிரெதிரே பெர்னாட்ஷாவும் ஒரு பாமரனும் வருகின்றனர்.

'முட்டாளுக்கு நான் வழிவிடுவதில்லை'

-இது பெர்னாட்ஷா

'நான் அப்படியில்லை விட்டு விடுவதுதான்.'!

இது பாமரன்.

ஆணவத்துக்குத் தரப்பட்ட சம்மட்டி அடியில்லையா இது!

ஆணவத்தை எள்ளும் அரிய நகைச் சுவை இது!

## இளமை விளைக்கும் நகைச்சுவை

தள்ளாடி விழும் குழந்தை- 'அப்பா'வைத் 'தப்பா' என்று மிழற்றும் மழலை - மண்ணைச் சோறாக்கிக் காட்டும் விளையாட்டு- இளமை விளைக்கும் இனிய நகைச்சுவைகள் இவை' ஓர் எதிர் முனையும் உண்டு.சிறு பிள்ளைத்தானே என்று 'பாரதியார் எங்கே பிறந்தார்?' என்று கேட்பதற்குப் பதிலாக 'எட்டையபுரத்தில் பிறந்தவர் யார்?' என்று கேட்டால் 'எட்டையபுரத்தில் எத்தனையோ பேர் பிறந்திருக்கிறார்கள். நீங்கள் யாரைக் கேட்கிறீர்கள்?' என்று வினா எதிர் வினாதல் போட்டு நம்மை விழிக்க வைக்கும் இளமையும் உண்டு.

## பேதமை விளைக்கும் நகைச்சுவை

பேதமையால் நகைச்சுவை எழலாம். முட்டாள் பணியாளனோடு போகும் ஒருவர் பட்டபாடே இதனை விளக்கும். நள்ளிரவு-எதிரே திருடர்கள்-இருவரும் புதர்களில் ஒளிந்தனர்-திருடரில் ஒருவன் ஓரமாகச் சிறு நீர் கழிக்க வர-காலில் தட்டுப் பட்டாள் கருப்பு நிற முட்டாள் பணியாளன்- திருடன் குனிந்து பார்த்து,

''அட கருவக்கட்டையில்ல கிடக்குது,'' என்று போக நினைத்தான். முட்டாள் பணியாளனோ,

''சும்மா போய்யா, கருவக் கட்டைதான் மடியில் ரெண்டு ரூபாயை முடிஞ்சிகிட்டுக் கிடக்குமோ?'' என்று கூறி தன்னை



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்படுத்திக் கொண்டான். திருடன் நாலு அறைக் கொடுத்துப் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு நல்ல பணமா என்று திருப்பித் திருப்பிப் பார்த்தான். அவ்வளவு தான். வந்தது கோபம் பணியாளனுக்கு.

''என்னய்யா திருப்பித் திருப்பிப் பார்க்கிறே? செல்லுமா செல்லாதான்னுதானே! அதோ புதர் மறைவில் இருக்கார் முதலாளி அவரையே கேட்டுக்கய்யா என்று தன் முதலாளியையும் காட்டிக் கொடுத்தான். பெரும் பணத்துடன் அவரும் அகப்பட்டுக் கொண்டார். முட்டாள் பணியாளனின் பேதமையை இகழ்ந்து காட்டும் நல்ல நகைச் சுவை!

மடமை விளைக்கும்
நகைச்சுவை

முட்டாளின் அறிவின்மையைப் பேதமை என்போம் விவரம் தெரிந்தும் அறிவின்றி நடப்பதை மடமை என்போம். இதை விளக்குவது போல 'கொடைமடம்' 'படைமடம்' என்ற தொடர்புகள் அமைகின்றன. மயிலுக்குப் போர்வை பயன்படாது என்று தெரிந்தும் கொடுத்த பேகன் கொடையை கொடை மடம் என்போம். வேண்டுமென்றே பகைவனிடம் போரில் தோற்பதைப் 'படைமடம்' என்று கூறுவோம்.

ரயில் பயணம், அருகில் என் நண்பர் இருந்தார். அவர் நன்கு படித்தவர் உலகியலறிவு மிக்கவர் எனினும் கிண்டல்செய்வதில் சமர்த்தர். வேர்க்க விறுவிறுக்க உள்ளே வந்தார் ஒரு பயணி, மனப்புழுக்கமும் இருந்தது அவரிடம். மனச்சுமையை இறக்க தன் வேதனைக் கதையை எங்களிடம் சொன்னார்.

''டிக்கெட் கொடுக்கிற இடத்துல கியூ நீளமா இருந்துதேன்னு நடுவரிசைக்குள் புகுந்தேன் சார்

## உதயை
## மு. வீரையன்

பறவைகள் புகலிடமாக விளங்கும் உதயமார்த்தாண்டபுரத்தில் பிறந்து நல்ல கவிதைகள் மூலம் தமிழுலகிற்கு முதலில் அறிமுகமாகிய இவர் நல்ல கட்டுரையாளரும் கூட. சிறந்த சிறுகதை ஆசிரியர்; சிறுவர் இலக்கியத்துக்கும் சொந்தக்காரர்; திரைப்பட பாடல்களிலும் தன் முத்திரையைப் பதித்தவர்; 'நீதியின்முன்' புதினம் இவருக்குப் புதிய பெருமைகளைச் சேர்த்துள்ளது. அக்கினிக் குஞ்சுகள் (கவிதை) கேள்விக் குறிகள் (சிறுகதை) பத்துப் படையல் (சிறுகதை) முதலிய படைப்புகள் மூலம் இவர் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

கடைசியில நின்ன ஒருத்தர் 'மடப்பயலே அறிவிருக்கா ஏண்டா நடுவில வந்து பூர்றே? ன்னு திட்டிட்டார் சார், ஏன்டா குறுக்கே பூந்தோம்னு வருத்தமா இருக்கு. இவ்வளவு தான் அவர் சொன்னது நண்பர் அதைப் பிடித்துக் கொண்டார் அடுத்து வரும் பயணிகளிடம் இவர் கதையை என் கிண் ல் நண்பர் கூறிக்கொண்டே வந் தார் இப்படி பத்துமுறை பத்துப் பேரிடம் இந்தக் கதையைச் சொன்னார். ஒவ்வொரு முறை யும் 'கியூ' வில் கடைசியில் நின் றவர் சொன்ன 'மடப்பயலே அறிவிருக்கா?'

என்பதில் தனி அழுத்தம் கொடுத்துக் கூறுவார் நொந்த மனத்தோடுவந்த அந்தப்பயணி இப்போது சீறும் சிங்கமாக முழங் கத் தொடங்கினார்.

''சும்மா நிறுத்தய்ய அவன் என்னை ஒரு தடவைதான் மடப்பயலேன்னு சொன்னான், நீ பத்து தடவை சொல்லிட்டியே இனிமே சொன்னேன்னு வச் சுக்க இங்கு கொலைதான் விழும் அவ்வளவுதான் நண்பர் 'கப்சிப்' அவமானப்பட்டவன் கதையை இவனையே வைத்துக் கொண்டு பல முறையும சொன்னால் அவ மானப்பட்டு வந்தவனுக்கு ஆத் திரம் வராதா என்ன? மடமை யின் விளைவுதான் இது!

நயமான நகைச்சுவைதான் எது?

கேலிக்கு ஆளாகிறவன் கூட மகிழும்படிக் கூறுவதுதான் நகைச்சுவையின் ஆற்றல், தேர்ந்தவர்கள் தாம் அப்படி பயன் படுத்த முடியும்.

உடம்பு முழுதும் கட்டுடன் வரு கிற ஒருவரிடம், ''என்னய்யா உடம்பெல்லாம் காயம்? கட்டுப் போட்டிருக்கிறே?'' என்று நண் பர் கேட்க,

''சும்மாஇருய்யா, உங்க வீட்டி லெல்லாம் புருஷன் பெண்டாட்டி சண்டை நடக்காதோ?''

சீறிப்பாய்கிறார் அவர்.

இதைக் கேட்டு நாமும் சிரிக்கி றோம். பொதுவாக நம்மைக் குறிக்கும் என்றாலும் குறிப்பாக நம்மை அல்ல என்று கருதுவ தால் வரும் நகைப்பு இது!

## மறதியை இகழுவது

என் தாயார் என்னைகடைக்கு அனுப்பிச் சிலபொருள்கள் வாங்கி வரப் பணித்தார்கள். பையை எடுத்துச்சென்று பொருள்களை வாங்கிவந்து வீட்டில் வைத் தேன்.

என் தாயார்,

''அடபோடா, தேங்காய் வாங்கிவரச் சொல்லனும்னு



படிப்பகம்

www.padippakam.com

நெனச்சிட்டே இருந்தேன் மறந்துட்டேன்''என்றார்கள்.அதற்கு நானோ,

''அடடே, நீ ஏம்மா மறந்தே? சொல்லியிருந்தா நான் மறந்துட்டு வந்திருப்பேனே! '' என்றேன். எவ்வளவு செய்திகள் இதில் உள்ளடக்கம் தெரியுமா! நீ சொன்னால் மட்டும் நான் வாங்கி வந்து விடுவேனா? நான் மறந்திருப்பேன்.

நீ சொன்னவை அனைத்தையும் நான் வாங்கி வந்து விட்டேன் என்பதும் நிச்சயமில்லை. வாங்கிவர மறந்ததற்காக அ மா திட்டவும் முடியாது. அவர்களே மறந்திருக்கிறார்கள்.

மறதி எனும் கெடுநீரார் கரமக்கலனைக் கண்டிக்கும் அருமையான நகைச்சுவை இது!

## போலி அறிவாளிகள்

விமான நிலையத்தில் இரு பைத்தியங்களின் உரையாடல் இருக்கே. ''விமானம் இவ்வளவு பெரிசா இதுக்கு எப்படி பெயிண்ட் (Paint) அடிப்பாங்க?''

-ஒரு பைத்தியம்

''அட நீஒரு பைத்தியம் ஐயா. விமானத்தை இங்க வச்சி பெயின்ட் அடிக்க மாட்டாங்க. மேலே போகும் போது சின்னதா ஆயிடுமில்லே அப்ப அடிப்பாங்க''

-மறு பைத்தியம்.

விவரம் தெரியாமலே போலித்தனமாகத் தெரிந்தது போல் பேசுவோரைக்கிண்டல் செய்து கண்டிப்பது இது. அதோடு இல்லாமல் பைத்தியங்கள் இதைப் படித்து விட்டு மறுப்பு அறிக்கை விடவும் முடியாதல்லவா! வசதியான நகைச்சுவை.

## விடாக்கண்டனும் கொடாக்கண்டனும்

'விடாக்கண்டன் கொடாக்கண்டன் தனம்' நமக்குத் தெரியும். வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம் வீட்டுக்காரர், ''நீங்கள்லாம் நம்ம வீட்டுலே சாப்பிட மாட்டீங்களே!'' என்கிறார். இது தான் கொடாக்கண்டத்தனம். ''நான் சாப்பிட மாட்டேன்னாலும் நீங்க விடமாட்டீங்களே, சாப்பிட்டுத்தானே போயாகனும்!'' விடாக்கண்ட விருந்தாளியாகிறார் அவர்.

''சாப்பிட்டாலும் நீங்க சும்மா போகமாட்டீங்களே. குழந்தை கையிலே பத்தோ இருபதோ கொடுத்திட்டுத் தானே போவீங்க.'' விடாக்கண்டரின் அடுத்த பிடி.

நமக்கென்ன தெரியும், சாப்பிட்டபிறகு விருந்தாளி குழந்தை கையில் 10 காசு அல்லது 20 காசு கொடுத்துச் சென்றாரோ என்னவோ!

பண்பாட்டைக் கெடுக்கும் மக்

www.padippakam.com

களைத் திருத்தும் நோக்கம் இதன் உள்ளீடு.

முடிவுரை

இவ்வாறும் இன்னும் பல வாறும் நகைச்சுவை நல்லது அல்லது இரண்டையும் விளைக்கும் அருமையான பிளேடு (Blade), நல்லவற்றுக்குப் பயன் பட்டால் நகைச்சுவை நகைச் சுவையாகும். இல்லையேல் அதுவே நகைச்சுவையாய் மாறித் தீங்கு விளைக்கும். ஆயி னும் நகைச்சுவை சிறந்த பயன் நல்கும் இனிப்பு மருந்து என் பதில் ஐயமே இல்லை.

# தஞ்சை பெரிய கோயில்

"பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பித்த திருக்கற்றளி ஸ்ரீ இராஜராஜேச்சுர முடையார்" என்று மாமன்னன் இராசராசன் தான் கட்டுவித்த கோயிலைப் பற்றிப் பெருமிதமாகக் குறிப்பிடுகிறான்.

216 அடி உயரமுள்ள கோயில் விமானம் காண்பார் கருத் தைக் கவரவல்லது. இந்தியாவிலேயே மிகப்பெரியதாகஅமைக்கப் பட்டுள்ள சிவலிங்கத்தைக் கருவறையில் கண்டு களிக்கலாம். அதற்கு மேலேயுள்ள திருவுண்ணாழிகையில் இராசராசன் காலத் திய வண்ண ஓவியங்கள் உள்ளன. கருவறையைச் சுற்றியுள்ள முதல் மாடத்தில் ஆடவல்லானின் தாண்டவங்கள் அழகிய சிற் பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

தனது கால்களை மடக்கி படுத்த நிலையில் தன் தலை வனையே பார்த்துக் கொண்டிருக்கும் பென்னம் பெரிய நந்தி பிற்காலத்தில் அமைக்கப்பட்டதாகும்.

சர்வதேச நினைவுச் சின்னங்களில் ஒன்றாகக் கருதிப் பாது காக்கப்படும் பெருவுடையார் கோயில் தமிழனின் கட்டடக் கலை யைப் பாருக்கு உணர்த்தி நிற்கிறது.

ஆதாரம்
இரா. நாகசாமி
'ராஜராஜன்'
நடன காசிநாதன்
'ராசராசேச்சுரம்'



படிப்பகம்

www.padippakam.com

# உறவுகள்

—சார்லஸ்

"பெரி...ய்...ய்யா..." கதறி எழுந்த மீனா நடேச உடையாரை அப்படியே கட்டிக்கொண்டாள். உடையாரின் தேகம் குலுங்கியது. தம்பி மகளின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி நிலையாய் நிற்கிறார். எச்சிலை விழுங்குவதுபோல சோகத்தை உள்ளுக்குத் தள்ள அவர் திணறுவது குரல்வளை ஏறி இறங்குவதில் தெரிகிறது.

கூடத்தின் மத்தியில் இணைக்கப்பட்டிருக்கும் இரட்டைப் பெஞ்சுகளின்மீது சின்ன உடையாரின் உடம்பு கிடத்தப்பட்டிருக்கிறது. அம்மாதான் வீட்டிலிருந்து வெள்ளைத்துணி வாய்க்கட்டு, கைகட்டெல்லாம் கட்டியது. சாந்தி மாமியாருக்குத் துணையாய் தலைமாட்டில் 'நல்ல விளக்கை' ஏற்றி வைத்தாள்.

இத்துப்போன தேகமாய் உடைந்துக் கிடக்கும் தம்பியை நீண்ட இடைவெளிக்குப் பின் உடையார் பார்க்கிறார். கண்கள் கலங்கின.

"அய்யா... எங்கள வுட்டுட்டுப் போயிட்டாங்களே அய்யா. அனாதையா வுட்டுட்டுப் போயிட்டாங்களே. இந்தக் கொடுமைய..." சரஸ்வதி தன் கொழுந்தனாரின் கால்களைக் கட்டிக்கொண்டு அலறினாள். ஒர்படியாளை ஆதரவாய் தன் தோளோடு சேர்த்து துக்கம் கொடுத்தாள் உடையாரின் பெண்டாட்டி. அவர்களின் அழுகைக் குரல் இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு பரிதாபமாய்க் கேட்டது. கூட வந்த உடையாரின் சின்ன பெண் தாவணியை இழுத்து இழுத்து விட்டுக்கொண்டு கைகளைக் கட்டி சுவரின் மூலையில் திக்கித்து நின்றாள்.

இந்தக் கன்றாவியைப் பார்க்க எனக்கு அடி வயிற்றைப் பிய்த்துக் கொண்டு போனது! 'பத்து வருடங்களாய் நீ வைத்த அடியில் நான் வைப்பது இல்லை என்று வீறாப்பு பேசிக் கொண்டிருந்தவர்கள் இவர்கள்' என்பதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

என்ன இருந்தாலும் உரியவர்கள் என்று வரும்போது அதன்



படிப்பகம்

www.padippakam.com

பலமே தனிதான் போலும். எங்கள் இரு வீட்டுக்கும் இடையில் ஒரு சுவர் தடுப்புதான். கடைத் தெருவின் நடுவில் குடியிருக்கிறோம். எனவே நாங்களாகவே கொல்லைப் பாதை வைத்துக் கொண்டோம். ஒரு வாரமாக அம்மா இங்கும் அங்குமாகத்தான் இருக்கிறாள், நேற்றிலிருந்து சாந்தியும் இங்குதான். முழுமையாய் படுக்கையில் விழுந்துவிட்ட சின்னவரைச்சுற்றி கிடக்கும் மனைவிக்கும் மகளுக்கும் ஆதரவாய் ஹார்லிக்ஸ் கரைக்க, மருந்து கொடுக்க என்று. எங்களிடமும் பெறமுடியாத ஆறுதல் இதோ இவர்களுக்கு இப்பொழுது கிடைக்கிறது.

உச்சஸ்தாயியில் போய்விட்ட சப்தத்தைக் கேட்டு கடைத்தெரு ஆம்பளைகளெல்லாம் கூடிவிட்டனர். பிணத்தையும், மரமாய் நிற்கும் உடையாரையும் பார்க்க அதிர்ந்துவிட்டனர். என் பக்கம் திரும்பினர். "இப்பதான் அரைமணியிருக்கும்" என்றேன். கொஞ்சம் தயங்கி பின் புறப்பட்டுவிட்டனர், கடை கட்டும் நேரம், எவ்வளவோ கடைசி நேரத்து வேலையிருக்கும். இனி நாளை பிணம் தூக்கும் நேரத்தில் வருவர். அப்போதுகடையடைப்பு கூட இருக்கும்.

சின்னவருக்கு இப்போது ஒன்றுமில்லாமலிருக்கலாம். இந்த ஊருக்கு முதன்முதலாக மாவுமில்லை கொண்டு வந்தவரே இவர்தான். கூட்டுக் குடும்பமாக இருந்த நேரம். எல்லா குடும்பங்களையும் போல ஓர்படியாள்களுக்குள் புகைந்து கொண்டு இருந்தது. ஒரு நாள் சின்னவர் மிஷினுக்கு பிளேடு வாங்க காசில்லை என்று கோபப்பட்டுக் கொண்டிருந்தார். பெரியவர் பெண்டாட்டி, "செருவாடு காசு சேர்த்து வைக்கிறவங்க கிட்ட கேட்கனும்." என்று அடுப்படியிலிருந்து முணுமுணுத்துக் கொண்டிருக்கிறாள். சின்னவர் பெண்டாட்டி இதை கேட்டுவிட்டாள். அவ்வளவுதான். சொத்துப் பிரிவினையாயிற்று. பெரியவர் குடும்பம் முதலியார் தெருவுக்கு போய்விட்டது.

சின்னவரின் பெண் கல்யாணத்தில் உப்பு சப்பில்லாத விஷயத்தை இரண்டு தரப்பினருமே பெரிதுபடுத்த 'இனி செத்தா வாழ்ந்தா இல்லை' என்றாகிவிட்டது. இப்போது பிளவரில் ஒட்டமில்லாததற்கு பெரியவர் வீட்டில் 'செய்வன செய்தது தான்' என்றுகூட அம்மாவிடம் சின்னவர் பெண்டாட்டி ஒரு முறை சொன்னது எனக்குத் தெரியும்,

உடையார் தோளில் கிடந்த சால்வையால் கண்களை ஒற்றிக் கொண்டார். பின் என் பக்கம்





படிப்பகம்

www.padippakam.com

தலையசைத்தார், இருவரும் வாசலுக்கு வந்தோம்.

"என்னா செஞ்சிது?"

"ஒரு மாசமாவேதான் உடம்பு சரியில்லியே"

"முந்தாநாளு காலையில கூட நான் டீ. கடைக்கு பால் கொடுத்துட்டு வந்தப்போ எதுக்க வந்தீங்களே?"

"திடீர்னு நெஞ்சு வலிக்குதுன்னுட்டாரு. "அதான் பாலகுமாரு டாக்டர்கிட்ட காமிச்சிட்டு..."

"...ம்...நீங்கதான் ஒரு வார்த்த, இது மாதரின்னு சொல்லக் கூடாதா?" கேட்டுக் கொண்டே நாற்காலியில் உட்கார்ந்து விட்டார். எனக்கு என்ன சொல்வது என்றுத் தெரியவில்லை. இவருக்கு தன் தம்பி நிலைப்பற்றி தெரியாதிருக்க வாய்ப்பே இல்லை என்றே எனக்குத் தோன்றிற்று.

"என்னமோ போங்க. உள்ளவங்களுக்கே அக்கறை இல்லேன்னா....உங்களுக்குதான் என்ன வந்துட்டு?...கடைசியா எல்லாருமா சேர்ந்து.....ஒரு வழியா போயி சேர்ந்துட்டான்"

"........."

"சரி. ஆனது ஆகட்டும். இது வரைக்கும் என்ன பண்ணியிருக்கீங்க?"

இதற்காகத்தான் காத்திருந்தது போல் தந்து கொடுத்தவர்களின் லிஸ்டைக் கொடுத்தேன். இடக் கையால் வாங்கினார். மேலிருந்து கீழாக ஒரு முறைக்கு இரு முறையாகப் பார்த்தார். பின் புருவத்தை உயர்த்தி என்னைப் பார்த்தார்.

"என் பொண்ணு பேர காணுமே"

"தஞ்சாவூர்ல இருக்குற எங்க சித்தி பேருக்கு தந்தி கொடுங்க. அவங்க போயி சொல்லிடுவாங்கன்னு மீனாதான் சொல்லிச்சி. அவங்கதான் பெரியவங்களாம்". கடைசி வாக்கியத்தை நானாக சேர்த்துக்கொண்டேன், அனுசரணையாக.

'போய் விடுவார்' என சாயங்காலம் தீர்மானம் ஆனபின் மீனா தான் இந்த லிஸ்டை சாந்தியிடம் கொடுத்தனுப்பியது.

"என்னய்யா இது. வீட்டுக்கு வந்த மருமகனுக்கு இன்னொருத்தன் மூலம் சேதி சொல்ல வச்சிருக்கீங்க. உங்க இஷ்டத்துக்கு நீங்க எது வேணுன்னாலும் செஞ்சிக்கிறதா? நாளை கார்த்தால பொணத்த போட்டுக்கிட்டு இங்க ஏதாவது தகராறுன்னா...நான் பொறுப்பு கெடையாது. இப்பவே சொல்லிட்டேன்".

'இது என்னடா வம்பு?' என்னாயிற்று. இப்போதுதான் ராசி ஆகிறார்கள் என்று நினைத்தால் மீண்டும் பிரச்சனை ஆகும் போலிருக்கிறதே. அவசரமாய்க் கேட்டேன்.



படிப்பகம்

www.padippakam.com

"தனியான்னா ஒரு தந்தி கொடுத்துட்டு வர்றேனே"

"அதோட இந்த ரெண்டு அட்ரஸையும் எழுதிக்க. எங்க வீட்டுக்காரிக்கு சொந்தம். அப்புறம் அவ முனு முனுப்பா"

'சரிதான்' என்பதுபோல தலையாட்டிக்கொண்டே அட்ரஸ் எழுதினேன்.

"நான் கொடுக்குறது மாதரி என் பேர்லதான தந்தி கொடுத்தீங்க?"

"ம்"

"சரி உள்ளாற போயி அவங்க கிட்ட கேட்டுக்கிட்டு வந்துடுங்க"

'இந்த நிலையிலா?' என யோசித்தேன். ஆனாலும் உடையார் விடவில்லை. நல்ல வேளையாக கேட்டவுடனேயே சின்னவர் பெண்டாட்டி சொல்லி விட்டாள்: "இதெல்லாம் என்கிட்ட கேட்டுக்கிட்டு. வீட்டுக்குப் பெரியவரு அவரு என்ன சொல்றாரோ அதுபடி கேட்டுக்குங்க."

தந்தி கொடுத்துவிட்டு திரும்பியபோது வாசலிலேயே அய்யாறுஇருந்தான். குத்துக்காலிட்ட கால்களுக்கிடையே முகம் புதைத்திருந்தான். நிறமற்றுப்போன வேட்டியை அவிழ்த்து போர்த்தியிருந்தான்.

"என்னா அய்யாறு?

நிமிர்ந்து பார்த்தான். கண்கள் கலங்கியிருந்தன. எனக்குத் தெரிந்ததிலிருந்து அவன் சின்னவரிடம் வேலை செய்கின்றான். அவனை யாரும் கிழவன் என நினைக்க முடியாது. அவ்வளவு வேலை செய்வான். அவ்வளவு சாப்பிடுவான். சமயத்தில் சின்னவருக்கு ஆத்மார்த்த நண்பர்.

"இப்படியே அழுதுகிட்டு இருந்தினா ஆகவேண்டிய வேலையெல்லாம் யாரு பார்க்குறது?"

"பெரியய்யா இருக்க சொன்னாங்களே".

"பாப்பாவ வீட்டுல வுட்டுட்டு வந்துடுட்டும், வீடும் தொறந்து கெடக்கு. காலையில வந்துடும்" என்றபடியே பெரியவர் வந்தார். பின்னாலேயே அவர் பெண். நல்ல சிவப்பு புடவையில் பார்த்தபோது இன்னும் எடுப்பாய்த் தெரிந்தாள். நடக்கும்போது ஒற்றை முத்து கொஞ்சியது.

எனக்கு அசதியாயிற்று. மரத்துப்போன பசி மீண்டும் கிளர்ந்தது. மத்தியானம் பேங்குக்குப் போனபோது குடித்த காப்பி எவ்வளவு நாழி தாங்கும்?

திடீரென நினைவுக்கு வர பெரியவர் கேட்டார். சிவக்குமாருக்கு என்ன பண்ணீங்க?"

"மத்தியானம் சீரியஸ்-னு தந்தி கொடுத்திச்சி. இப்பவும்



படிப்பகம்

www.padippakam.com

ஒண்ணு கொடுத்திருக்கு. பதில் தந்தி கொடுக்கச் சொல்லி யிருக்கு"

"ரொம்ப நல்லது" பாராட்டி விட்டு உடையார் நாற்காலியில் கால்களைக் குத்திட்டு அமர்ந் தார்.

பொழுது விடிந்ததிலிருந்து துக்கம் விசாரிக்க வர ஆரம்பித்து விட்டனர். வெட்டியான் அவ்வப் போது 'தப்பு' அடித்து ஞாபகப் படுத்திக் கொண்டிருந்தான். வந்த ஆம்பளைகள் நேராய் பிணத் தைப் பார்த்து விட்டு உடை யாரிடம் வந்தனர். விசாரித்தார் கள். ஆறுதல் சொன்னார்கள். மீனா அவ்வப்போது அழைத்து ஏதோ கேட்டுக் கொண்டாள். எனக்கும், சாந்திக் கும் சம்மந்தி சோறு ஆக்கும் வேலையும் சேர்ந்து கொண் டது.

கொள்ளி போட சிவக்குமார் வந்து விட்டான். அரசலாற்றங் கரையில் சின்னவரை கொண்டு சேர்த்து விட்டு பாதி பேர் கரைந்து விட்டனர். மிச்சமெல் லாம் சாப்பிட்ட கையோடு போய் விட்டனர். ஆண்கள் என் றிருந்தது மீசை மழிக்கப்பட்ட சிவக்குமார், பெரியய்யா, மீனா புருஷன். கணவனை இழந்த சரஸ்வதி சுவரில் முதுகைச் சாய்த்து ஏதோ யோசனையிலி ருந்தாள். பக்கத்தில் அவளின் தங்கை. இடது பக்கத்தில் மீனா. எதிரே பெரியவரின் பெண் டாட்டி.

கருமாதியெல்லாம் எப்படி என்னங்கிறதுக்கு கடிதாசிபோடு றோம். ஏன்னா முக்கியமா செய்ய வேண்டியவங்க எல்லாம் இப்ப இல்ல. இருட்டிக்கிட்டும் வருது. இங்க வீட்ல துணைக்கு யாரு இருக்குறதுன்னு மட்டும் முடிவு பண்ணிக்கிட்டா" என்று தொடங்கினார் பெரியவர். எல் லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

"ஒரு ரெண்டு மூணு நாளைக்கு தான். அதுக்கப்புறம் தாய், புள் ளைங்க வீட்டு அழைக்கிறதுக்கு 'அறுத்து போன' யாரையாவது ஏற்பாடு பண்ணிக்கலாம்."

"......."

"இப்டியே இருந்தீங்கன்னா என்ன அர்த்தம்? ஏன் உன் அக் காவுக்கு துணையா நீ இருக்கக் கூடாதா?" சரஸ்வதியின் அரு கில் இருந்தவள், "புள்ளைங்க எல்லாம் ஸ்கூலுக்குப் போகுது. வீடு வாசல வுட்டுட்டு...நான் அவங்ககிட்டேயும் சொல்லல."

தன் பக்கத்திலிருக்கும் தம்பி மருமகனைப் பார்த்தார்: "அங்க அம்மாவுக்கு ரொம்ப மோசமா இருக்கு மாமா நாங்க போறதுக் குள்ளேயே எதாவது ஆனாலும் சொல்றதுக்கு இல்ல. போயி பார்க்குறோம். நெலமைக்கு தக்க மீனாவ அனுப்பி வைக்கிறேன்"



படிப்பகம்

www.padippakam.com

பெரியவருக்கு யோசனை மட்டு படவில்லை. திடீரென பெண்டாட்டி மீது பாய்ந்தார், "ஆம்பளைங்க பேசுற எடத்துல உனக்கு என்னடி வேல. மாப்ளையெல்லாம் வீட்டுக்குப் போயிட்டாருல்ல. அப்புறம் நீ என்ன இங்க வரய பார்த்துக்கிட்டு இருக்க?"

கணவன் பேச்சை மீறாத அந்த பதிவிரதை விடுவிடென திரும்பிப் பார்க்காமல் ஓடினாள். தொண்டை கமறலோடு சரசுவதி மெல்ல முனகினாள்.: "போங்க. எல்லாருகே போங்க. இத்தனி நாளா தனியா கெடக்கலையா. இன்னிக்கு மட்டும் புதுசா என்ன"

உடையார் தம்பி மனைவியை ஒரு பார்வை பார்த்தார்: "இது மாதரி பேசும் போதுதான் எதிராளிக்கு கோவம் வர்றது. இந்த நிலையில இப்படியே விட்டுட்டுப் போனா ராத்திரி முழிப்பு தட்டும்போது 'பகீர்'—னு இருக்குமேன்னு சொன்னா...

இதுவரை இவர்களின் பேச்சை கவனிக்காததுபோல ரோட்டைப் பார்த்துக் கொண்டிருந்த நான் சொன்னேன். "எங்க வீட்லஉள்ளவங்கவேணுன்னா தொணைக்கு இருக்கட்டும். நீங்க அதுக்குள்ள வேற யாரையாவது ஏற்பாடு பண்ணுங்களேன்."

பெரியவர் முகத்தில் திருப்தி பரவியது. "சரி. இதுதான் நல்ல யோசனயா படுது. பக்கத்து பக்கத்து வீடு. சவுரியமாவும் போச்சி." மற்றவர்கள் பேசாமலேயே அமர்ந்திருந்தனர்.

"சிவக்குமாரு ரெண்டு நாளா இந்த தம்பி செலவுதான். கணக்கெல்லாம் குறிச்சி வச்சிக்க சொல்லியிருக்கேன். பின்னடி கணக்கு தீர்த்துடு"

சிவக்குமார் மெல்ல தலையசைத்தான் 'சரி' என்பது போல.

---

# ஒன்றே நமது உயர்வு!

எட்டய புரத்தொரு குட்டிச்சிங்கம் எட்டிப் பார்த்தது—அது
குட்டிய குட்டில் கோட்டை கொத்தளம் கோவெனக் கதறியது.
பாட்டுக் காற்றால் நாட்டில் கரியைத் தீயாய் மாற்றியது—பாதம்
பட்ட இடத்தில் புரட்சித் தீயும் பற்றிக் கொண்டது.
சுதந்திரத் தாய்க்குச் சுந்தரத் தமிழில் சுகமலர் தூவியது—அது
தூவத் தூவ வேள்வித்தீக்கு வேகம் கூடியது.

—சச்சிதானந்தம், வலிவலம்.—

www.padippakam.com

# தியாகி மணியம்மை

**— வே. துரைமாணிக்கம் —**

பச்சைப் பசேலென்று பட்டுக் கம்பளம் விரித்தால் போன்று பசுமை நிறைந்த நெடிய வயல்கள், மஞ்சளும், வாழையும், கரும்பும், நெல்லும், உற்பத்தியாகும் தஞ்சை மாவட்டத்தின் நிலப்பரப்பின் சரி பாதி 165 சைவ கோவில்களுக்கும், 33 வைணவ கோவில்களுக்கும் திருவாடுதுறை, திருப்பனந்தாள், தர்மபுரம் மடங்களுக்கும் 5 பெரிய பண்ணையார்களுக்கும் 50க்கு மேற்பட்ட நிலப்பிரபுகளுக்கும் (ஜமீன்தார்கள்) சொந்தமாக இருந்தது. இன்றளவும் மடங்களின் ஆதிக்கம் நீடிக்கிறது.

உற்பத்திச் சாதனமான நிலம் பல விதங்களில் குவித்து வைக்கப்பட்டிருந்த காரணத்தால் உற்பத்தியில் ஈடுபடக் கூடியவர்கள் நிர்த்தாட்சண்யமாக கசக்கிப் பிழியப்பட்டனர். சிறிதளவு கூட நிலமில்லாமல் விவசாயத் தொழிலை மட்டுமே நம்பி, பல ஜாதிப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். இதில் தாழ்த்தப்பட்டவர்கள் பெரும்பான்மையோராக இருந்தனர். இவர்கள் மேல்த்தட்டுப் பகுதியைச் சேர்ந்த நில உடமையாளர்களுடைய நிலத்தில் உழைத்து உணவு தேடி உடல் வளர்த்து உயிர்காத்து நடமாட வேண்டிய நிலை இருந்தது.

இவர்களுக்கு முறையான கூலி மறுக்கப்பட்டது. குத்தகை சாகுபடியாளர்கள் என்றும், குடிவேலைக்காரர்கள் என்றும் கசக்கிப் பிழிந்து சக்கையாக எறியப்பட்டனர். இவர்களுக்கு சமூக நீதி அனைத்தும் மறுக்கப்பட்டன. இவர்களுடைய குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் பரம்பரை பரம்பரையாக விவசாயத் தொழிலிலும், அதைச் சார்ந்த தொழிலில் லும்தான் ஈடுபட வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டனர். கல்வியறிவு பெற்று அறிவாளியாகக் கூடாது. இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் மேல்த் தட்டுக்காரர்களின் ஆசை நாயகிகளாக மறுப்பின்றி நடந்து கொள்ள வேண்டும், மறுத்தால் அவமானப்படுத்தப்படுவார்கள். இவர்கள் ஊர்ப்பொதுக் குளத்தைப் பயன்படுத்தக்



படிப்பகம்

www.padippakam.com

கூடாது. செருப்பு அணிந்து செல்லக் கூடாது. எஜமான னையோ,எஜமானைச் சேர்ந்த ஜாதிக்காரர்களையோ காணும் போதெல்லாம் இடுப்பு வேட்டியை சுருக்கி இடுப்போடு சுற்றிக் கொண்டு, மேல்த்துண்டை கையில் பற்றிக் கொண்டு எட்டுச் சாண் உடம்பை ஒரு சாணாக ஆக்கிக் கொண்டு கூனிக் குருகி ஒதுங்கி நின்று தன்னுடைய விசுவாசத்தைக் காட்ட வேண்டும். இப்படியெல்லாம் செய்யத் தவறினால் அதற்காகக் கொடுக்கப் படும் தண்டனை மிகக் கொடுமையானது. தொழுக் கட்டையில் மாட்டப்படுவார்கள். சவுக்கடிபடுவார்கள். சாணிப்பால் குடிக்க வைக்கப்படுவார்கள். சிறுநீர் அருந்த வைக்கப்படுவார்கள். மலத்தை அள்ள வேண்டும், கரைத்துக் குடிக்க வேண்டும். இத்தகைய மனித நேயமற்ற செயல்களுக்குக் காரணமான அமைப்பையும் அதை கட்டிக் காக்கும் கொடுமதியாளர்களின் காட்டு மிராண்டித்தனத்தையும் எதிர்த்து நின்று தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய அவசியம் அந்தப் பகுதி மக்களுக்கு இருந்தது. அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு பல நல்ல இதயங்களில் துளிர் விட்டது. காலகாலமாக வேர் விட்டு பலமான அடிதளத்தின் மீது எழுப்பப்பட்டுள்ள அந்த ஆதிக்கக் கோட்டையை தகர்த்து அடித்தட்டில் பல விதங்களில் நசுக்கப்பட்டு கிடக்கும் மக்களை விடுவிக்க வலுவான அமைப்பு தேவை என்பதை உணர்ந்து விவசாய சங்க அமைப்பை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர் பலர். 1936-ல் அகில இந்திய விவசாயிகள் சங்கம் உருவாகி இருந்த நேரம். அத்தகைய முயற்சியில் ஈடுபட்ட பலரை அன்றைய அரசும், அதிகாரவர்க்கமும் கர்ண கடூரமாக பழி வாங்கியது. சுட்டுக் கொல்லப்பட்டனர் பலர், நஞ்சு கொடுத்து சிறைச்சாலையில் கொல்லப்பட்டனர் பலர். கொலை செய்யப்பட்டனர் பலர்.

இரணியன், சிவராமன், ஆறுமுகம், களப்பால்குப்பு ஆகியோரில் துவங்கி வெண்மணியும் சேர்த்து 1982 ல் தொழிலாளர் போராட்டத்தில் பலியான ஞானசேகரன், நாகூரான், அஞ்சான்வரை அரை நூற்றாண்டுக்காலத்தில் 80 க்கு மேற்பட்டவர்களை பலிகொடுத்து தியாகத் தழும் பேறிய மண் தஞ்சை மண். ஆண்களுக்கு நிகராக பெண்களும் தியாகம் புரிந்துள்ளனர். அத்தகைய பெண்களில் இப்போது வீரமங்கை மணியம்மையைப்பற்றி பார்ப்போம்.

## தியாகி மணியம்மை

சிப்பியின் வயிற்று முத்தாக, சேற்றில் செந்தாமரையாக மலர்ந்த வீராங்கனைதான்



படிப்பகம்

www.padippakam.com

தியாகி மணியம்மை. மகனை போருக்கு அனுப்பி நெஞ்சில்வேல் பாய்ந்து வீரமரணம் எய்தியதைக் கண்டு மகிழ்ந்தவள் புறநானூற்றுத்தாய். பாட்டாளிவர்க்கப் போர்ப்படையில், வர்க்கப்போர்க் களத்தில் தளபதியாய் நின்று சமர் புரிந்த வீரத்தாய் மணியம்மை யாவரார். அவர் நாகை பகுதி அகர கொலப்பாடு கிராமத்தில் பணக்கார பிராமண குடும்பத்தில் கிருஷ்ணசாமி அய்யர், அன்னத்தம்மாள் தம்பதியருக்கு மகளாகப் பிறந்தவர். அன்றைய நாகை நகர சபைத் தலைவரான குஞ்சிதபாதம் பிள்ளையை திருமணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி வந்த அவருடைய வாழ்க்கையில் 10 ஆண்டுகள் முடிவதற்குள் தென்றல் வீசுவதற்கு பதிலாக புயல் வீச தொடங்கியது.

கணவர் இறந்து விட்டார். பின்னர் தந்தையாருடைய கிராமங்களில் ஒன்றான மணலூரில் தங்கி அங்கிருந்த 80 ஏக்கர் நிலம், வீடு அனைத்தையும் பராமறிக்கும் பொறுப்பில் அமர்த்தப் பட்டார்.

தேசிய இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அவர் 1938 ல் ஆகஸ்ட் 14ல் மணலூரில் நாகை தாலுகா கிசான் கமிட்டியை உருவாக்கினார். காங்கிரஸ் சோசலிஸ்ட்டுக் கட்சியின் கூட்டுச் செயலாளராக இருந்த தோழர் பி. சீனிவாசராவ் அவர்களுடைய தொடர்புடன் சங்கம் பலப்படுத்தப்பட்டது. பின்னர் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டார்.

பிராமண சமுதாயத்தில் கடைப்பிடித்த சில பத்தாம்பசலி பழக்கங்களை வெறுத்தார். நான்கு முழ வேட்டியும், அரைக்கை சட்டையும், துண்டும் அணிந்து கிராப்பு வெட்டிக்கொண்டு எளிமையான வாழ்வைப் பின்பற்றினார். தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுடன் சாதி வித்தியாசமின்றிப்பழகினார். தன்னுடைய வீட்டில் அழைத்து உணவு கொடுப்பது போன்ற மாற்றங்களை தனது சொந்த வாழ்க்கையில் நடத்தி எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். அந்தக்காலத்தில், நாள் முழுதும் வேலை செய்தால் 2 லிட்டர்தான் கூலி கிடைத்து வந்தது. இதை உயர்த்துவதற்கு நிலப்பிரபுக்களுடன் போராடி கூலி உயர்வு பெற்றுக்கொடுத்தார். எந்தப் பிரச்சனையாக இருந்தாலும், எதற்கும் அஞ்சாமல், தன்னந்தனியாக நின்று துணிவுடன் நிலபிரபுக்களுடன் போராடி பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பார். பல ஒப்பந்தங்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்து செயல்பட்டுள்ளார்.

1947 ல் மாவட்ட ஆட்சித் தலைவரை மணலூருக்கு வரவழைத்து பண்ணையாட்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com

1 மரக்கால் நெல்லும் ½ ரூபாயும் கிடைக்க வழி செய்யும் ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கினார்.

1953ல் விவசாயத் தொழிலாளர் பிரச்சனைபற்றி பேச வேண்டுமென்று மூலங்குடி பண்ணையார் அழைப்பு அனுப்பினார். அம்மையார் தனியாகச் சென்றார். சிறிது நேரத்தில் தோட்டத்தில் நின்று கொண்டிருந்த மான் பாய்ந்து விட்டது என்று சொல்லப்பட்டு குற்றுயிராக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிர்துறந்தார் அந்த வீராங்கனை.

1942-43 கால கட்டம் நிலப்பிரபுக்களின் கொடுமை உச்சக் கட்டத்தில் இருந்தநேரம். அச்சமயத்தில் பிராமண குடும்பத்தில் ஒரு நிலப்பிரபுவின் மகளாகப் பிறந்து, சுகபோகங்களை உதரித் தள்ளிவிட்டு பாட்டாளிவர்க்க நலன்களோடு தன்னை இணைத்துக்கொண்டு செயல்பட்ட மணியம்மையின் தியாக வரலாறு இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கட்டும். கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், தந்தையையும், தாயையும் இழந்த குழந்தைகள், பெற்ற மகனையும், மகளையும், இழந்ததாயும் தந்தையும், சொந்தத்தை இழந்த பந்துக்கள் இப்படியாக வீரகாவியங்களான பல குடும்பங்கள் இம்மாவட்டத்தில் உண்டு.

இவ்வளவு சோதனைகளையும் கடந்து தஞ்சை மாவட்டத்தில் பாட்டாளிவர்க்கம் நிமிர்ந்து நிற்கிறது.

---

# சொந்தம் என்று ஒன்றுமில்லை

ஊரெல்லாம் தொழிலாளி
உழைப்பதற்குப் பொறுப்பாளி
நாளெல்லாம் உழைத்தாலும்—அவன்
நசிவுற்ற கடனாளி!
துயர்க்கரையில் தொட்டில் கட்டி
சோக இசை தாலாட்டி
வயிற்றுக்கே ஏங்குகிறான்!—பசி
வாழ்க்கையுடன் தூங்குகிறான்!
செந்தணலில் வெந்தாலும்
செங்குருதி தந்தாலும்
சொந்தமென்று ஒன்றுமில்லை! அதைச்
சொல்லுதற்கும் யாருமில்லை!

—சித. கருணாநிதி—

படிப்பகம்

www.padippakam.com

# இலக்கியத் தலைமை மாந்தரும் இயற்கை நெறியும்

டாக்டர். சௌ. மதார் மைதீன்

படைப்பிலக்கியங்களில் - அவை எந்த வடிவமாக இருந்தாலும் தலைமை மாந்தர் இன்றியமையாத வராகக் கருதப்படுகிறார். காப்பியங்கள் புனை கதைகள் ஆகிய வெவ்வேறு சமூக உறவுகளை வெளியிடும் இருவேறு இலக்கிய வடிவங்களிலும் தலைமை மாந்தரின் இயல்பைப் படைப்பாளிகள் மாற்றவில்லை. பெருங் காப்பியத்திற்கு இலக்கணம் கூறும் போது தண்டியலங்காரம் என்னும் நூல் 'தன்நிகர்இல்லாத தலைவனை உடையதாகி'ப் பெருங்காப்பியம் இருக்க வேண்டும் என்கிறது. ஏறத்தாழ இக்கருத்தை உலக முழுவதுமே தலைமைப் பாத்திரத்திற்குரிய பண்பாகக் கொண்டாடுகிறது. தனிநபர் மனம் என்பது பலவேளைகளில் பல்வேறு வகைப்பட்ட நிலைப் பாடுகளைக் கொண்டதாகவே இருப்பதைக் காணுகின்றோம். ஆனால் இலக்கியத் தலைமை மாந்தர்கள் தனிச்சிறப்பு மிக்க மூர்த்திகளாகவே காட்டப் பெறுகின்றனர். இப்படைப்பு முறை இலக்கியங்களை அறிவியல் பார்வையோடு பார்க்கும் சமூக விஞ்ஞானிகளுக்கு ஏற்புடையதாக இருப்பதில்லை.

## புலன்கள் - அறிவு - மனம்

புலன்கள் அறிவைப் பெறுதற்கான வாயில்கள். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து தீண்டியேநாம் உலகபொருள்களை அறியமுடியும். இப்புலன்களால் பெற்ற அறிவு மனத்தைப் பதப்படுத்துகிறது. புலன்கள் மட்டும் மனத்தோடு இணைய முடியாது. இடையே அறிவு என்னும் பாலம் இன்றியமையாதது. இந்த அடிப்படை உண்மையை ஏற்றுக் கொள்ளும்போது கருவிலே திருவுடைய கதை நாயகர்களைப் படைப்பதை நம்ப முடியாமல் போவதில் வியப்பில்லை. புலன்கள் வழிப் பெற்ற அறிவால் பதப்படுத்தப்பட்ட மனம் உடையவன் அதிவியப்புடைய மாமனிதனாகத் தோன்றுவதில்லை. அவனும் இயல்பான மனிதனே. இது கதை நாயகனும் பொது மனிதனே என்று காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## தனி மனித உருவாக்கம்

தனி மனிதன் ஒவ்வொருவரும் புலன்களால் அறிவு பெறும் பொது மனிதர்களே என்பதைக் கண்டோம். ஆகவே தனிமனித உருவாக்கத்தில் புலன்கள் பேரிடம் பெறுகின்றன. இப் புலன்கள் தமக்குரிய இரையை எங்கிருந்து பெறுகின்றன? சமூகத்திலிருந்துதானே பெற முடியும். சமூகச் சங்கிலியில் தனிமனிதன் ஒரு கண்ணிதானே தவிர, இவனே சங்கிலியாக இருக்க முடியாது. சங்கிலியின் கண்ணிகள் சங்கிலி இயக்கத்திற்கு மாற்றாகச் செயல் பட முடியாது. இதைப் போலவே தானாகவே ஒரு தனிநபர் உருவாகி விட முடியாது. அவன் அக்காலச் சமூகத்தால் தான் வடிவம் பெறுகிறான். உடை, உணவு, பேச்சு, ஆரோக்கியம், ஒழுக்கம், ஆகிய பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் வளரும் குழந்தையிடம் சமூகமே திணிக்கிறது. அவனுடைய கல்வியறிவும் சமூகத்தின் இயல்புக்கு ஏற்பப் பாதிக்கப்படுகிறது. இது அவனுடைய கருத்து முறைமையிலும் தாக்குதல் கொடுக்கிறது. இவ்வாறு தனிநபர் உருவாக்கத்தில் சமூகம் பெரும் பங்கு வகிக்கிறது. உடை, உணவு, ஒழுக்கம் ஆகிய தனிநபர்ப் பண்புகளில் சமூகத்திலேயே ஒரு வகையான கதம்பக் கோட்பாடு நிலவுவது இயற்கை. இக் கதம்பக் கோட்பாடு காரணமாக தனி நபர் மனம் சிற்சில மாற்றங்களோடு கூடிய சமூகக் கண்ணியாக உருவாகிறது.

## தலைமை மாந்தர் தேவையில்லையா?

ஒவ்வொரு தனிநபரும் சமூகத்தால் உருவாக்கப் பெறுகிறான். தானே உருவாகும் தனிநபர் இல்லை. ஆகிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டால் இலக்கியங்களில் தலைமை மாந்தரை எப்படிப் படைப்பது? தலைமை மாந்தரே இல்லாமல் தான் இலக்கியங்கள் படைக்க வேண்டுமா? அப்படிப் படைத்தால் அது செய்திப் பத்திரிகை மாதிரி இருக்குமே தவிர இலக்கியமாக-இருக்க திகழ முடியுமா என்றெல்லாம் ஐயம் தோன்றுதல் இயற்கை. இலக்கியப் படைப்புக்கு மைய மாந்தர் தேவை என்பதை நாமும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இம் மைய மாந்தரைத் தலைமை மாந்தர் ஆகக் காட்டுவதையே நல்லிலக்கிய நெறியன்று என்று சுட்டிக்காட்டுகிறோம்.

அனைத்து மாந்தர்களும் சமூகத்தால் உருவாகும்போது அவர்களுக்கிடையே வேறுபாடு ஏன் தோன்றுகிறது என்பது சிலருக்குக் குழப்பமாக இருக்கலாம். சமூகம் என்பது நாடு, மாநிலம், ஊர், இனம், மதம், ஆகிய பல அம்சங்களையும் உள்ளடக்கிய பொது



படிப்பகம்

www.padippakam.com

வடிவத்தின் குறியீடாகவே நாம் கையாள்கின்றோம். இப்பல்வேறு அம்சங்களின் பாதிப்பு ஒரு தனி மனிதனிடம் ஏற்படுவதற்கும் வேறொரு தனிமனிதனிடம் ஏற்படுவதற்கும் வேறுபாடு இருக்கிறது. இதனால் தனி மனிதர்களிடம் வேறுபாடுகளுடன் கூடிய குணாம்சங்கள் தோன்றுகின்றன. இவ்வேறுபாடுகளையே இலக்கியப்படைப்பாளிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

## சமூகப் படிநிலையும் தனி மனிதனும் :

இச்சமூகப் படிநிலை என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் வேறு வேறாக அமையும். இப்படி நிலை (அந்தஸ்து) அமைத்துத் தருவதில் பொருளாதாரம் மிகவும் அடிப்படை அம்சம் ஆகும். இப்படி நிலையின் காரணமாகவே ஒருவனின் ஒழுக்கம் தீர்மானிக்கப் பெறுகின்றது. பல ஆண்டுகளாக ஒரே படிநிலையில் இருக்கும் மனித சந்ததி ஓர் இனக்குழுவாகவும் ஆகிவிட வாய்ப்பு உண்டு. இப்படி ஆன இனக்குழு அமைப்பே 'சாதி அமைப்பாக' நம்மிடம் நிலை நிறுத்தப் பெற்றுள்ளது. ஓர் அமைப்பு நிலை நிறுத்தப் பெற்ற பின்பு அதைத் தகர்ப்பது மிகவும் சிரமம். இதனால் அடிப்படையாக இருந்த காரணம் மறைத்த பின்பும், உருவான படிநிலை நின்றுபோகும். இதனால்தான் அரசன், வணிகன் முதலியவர்களைத் தலைமைப் பாத்திரங்களாகக்கொள்ள வேண்டும் என்ற மரபு தோன்றியது. அரசர்கள் குற்றம் உடையவர்கள் என்று கூறுவதற்கு ஏற்பட்ட அச்சத்தால் 'தன்னிகர் இல்லாத' தலைவர்கள் கிடைக்கப்பெற்றனர். சமூகப்படிநிலையில் - எல்லாச் சமூகங்களிலும் பெண்கள் கீழானவர்களாகவே கருதப்படுவதால், அவர்களைத் தலைமை மாந்தராகப் புனைவதற்குத் தயக்கம் ஏற்பட்டது. அரசுகளின் சிதைவு புலவர்களிடம் சிறு சிறு மாற்றங்களைத் தோற்றுவித்தது. இம்மனமாற்றக் காலத்தில்தான் குறவஞ்சி, பள்ளு போன்ற உழைக்கும் மக்களை மைய மாந்தர்களாகக் கொண்ட இலக்கிய வடிவங்கள் உருவெடுத்தன. இம்மாற்றம் நிலை நிறுத்தப்படுவதற்குள் தொழிற்புரட்சியின் ஆதிக்கம் நம்மைப் பாதித்ததால் மீண்டும் கற்பனை மாந்தர்களிடம் இலக்கியத் தலைமையைப் பறிகொடுத்தோம்.

## தலைமை மாந்தன் இயல்பாகி....

புதிய சமூக அமைப்பில் இலக்கியங்கள் தலைமை மாந்தர்களைக் கொண்டதாக இருக்க வேண்டியதில்லை. ஆனால் மைய மாந்தர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இப்பாத்திரம் உயர்ந்த படிநிலையில் இருப்பவனாக இருக்க வேண்டிய



படிப்பகம்

www.padippakam.com

தில்லை. ஆனால் சுதந்திரமான வனாக இருக்க வேண்டும். சுதந்திரம் என்பது அவசிய மானதை அறிந்திருத்தல் தானே யன்றி, விருப்பம்போலச் செயல் படுவது அல்ல. இத்தகைய தலைமைப் பண்புகளில் மிகவும் இன்றியமையாதது - அந்தத் தனி நபர் தன் முக்கியத்தை உணர்ந்த வனாக இருக்க வேண்டும் என்பதே. எல்லா நிகழ்ச்சிகளும் சூழ்நிலைகளால் தூண்டப்பெறும் போது தனி மனித நடவடிக்கை கள் எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறே அமைகின்றன. இத் தனிமனித நடவடிக்கைக்கு அவ னுடைய சமூகப் பின்னணி மிக வும் பாதிப்பைத் தருகிறது. இந்த இயற்கையான சமூக நெறிகளைக் கருத்தில் கொண்டே இலக்கியங் களில் மைய மாந்தர் படைக்கப் பட வேண்டும். இத்தகைய படைப்புகளே உயர்ந்த இலக் கியங்களாக ஆவதற்குத் தகுதி பெறும்.

*

# தண்டியும் வேதாரணியமும்

## —தென்னடார் வை. முத்து

முப்பது வாக்கில் மூலவர் காந்தியார்
உப்புப் போரா லூட்டிய உணர்வு
திக்கெட் டிலும்தீப் பற்றிய துணர்ச்சி,
தண்டியில் காந்தியார் தலைமை யேற்கவும்
மண்டிய புகழோன் தலைமை இராசாசி
சர்தார் துணையே சரித்திரம் படைத்த
மறைக்கா டுப்பு சத்தியப் போரில்
கட்டைக் கம்புகள் காக்கிக் கும்பலின்
கடும்பகை வெல்ல நடுநிசி வேளை
வியூக முடைத்து விரைந்து கிழக்கே
அலைகட லோரம் அடைந்து தெற்கே
மணியன் தீவில் மதிப்பிட முடியா
உப்பு அல்ல! ஒளிமிகு பாரத
சிற்பிகள் அள்ளிய ரத்தினக் கற்கள்!
புளியந் தடிநள் தாங்கிய தடியர்
கிலியில் அலறினர்; கீழ்மேலாயினர்.
அன்னை விலங்கு முற்றாய் நொறுங்கிட
முன்னறி விப்பாய் விலங்குடன் சிலறாம்
இந்திய நாட்டின் எழுச்சிப் போரில்
அந்நியர் நடுங்கிய அமர்க்களம்
விந்தை மண்ணாம் வேதா ரணியமே!

படிப்பகம்

www.padippakam.com

# எத்தனை வெண்மணிகள்...

—உதயை. மு. வீரையன்

ஏழை மக்களைத் தாமதம் இன்றி
வாழ அழைத்தவர்கள்
ஏங்கிக் கிடக்கும் குழந்தை வயிற்றில்
பாலை வார்த்தவர்கள்
கோழை மனிதரை முதுகில் தட்டி
கூனை நிமிர்த்தவர்கள்
கோடை இடியென முழங்கிக் கொடியினைத்
தூக்கிப் பிடித்தவர்கள்

எங்கள் கண்மணிகள்—எதிரே
எத்தனை வெண்மணிகள்!

பதுக்கல் காரரை அடித்து விரட்ட
பாய்ந்து வந்தவர்கள்
பஞ்சம் வந்தது ஏனோ என்று
காரணம் கேட்டவர்கள்
எதற்கும் துணிந்து வாழ்வைக் கொடுக்க
எழுந்து நடந்தவர்கள்
எரியும் நெருப்பில் குதிப்பதற்கும்
இணைந்து சென்றவர்கள்

எங்கள் கண்மணிகள்—எதிரே
எத்தனை வெண்மணிகள்!

தீமையை எதிர்க்க துப்பாக்கி எதிரே
நெஞ்சைத் திறந்தவர்கள்
தேசம் எனது மூச்சே என்று
செயலில் சொன்னவர்கள்
ஊமை மனிதரின் உள்ளச் சாட்சியாய்
சிறையில் கிடந்தவர்கள்
உண்மைக் கோயிலில் இரத்த அபிஷேகம்
செய்யச் சென்றவர்கள்

எங்கள் கண்மணிகள்—எதிரே
எத்தனை வெண்மணிகள்!

நன்றி: இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
தஞ்சை மாவட்டச் சிறப்பு மலர்
1985

படிப்பகம்

www.padippakam.com

# தஞ்சை சரசுவதி மகால்

நெற்களஞ்சியமாகிய தஞ்சை அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்கிறது. உலக அதிசயங்களில் எட்டாவது எனப் போற்றப் பெறும் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் நாயக்க மன்னர்கள் காலத்தில் தோன்றியதாயினும் அதைச் செழுமைப்படுத்தி ஆராய்ச்சிக் களமாக மாற்றிய பெருமை சரபோஜி மன்னனையே சாரும்.

தமிழ், வடமொழி, தெலுங்கு, மராத்தி, இந்தி போன்ற மொழிகளில் நூற்றுக்கணக்கான கிடைத்தற்கரிய ஏட்டுச் சுவடிகளும் நூல்களும் இங்கு இருக்கின்றன. துளஜா, சரபோஜி மன்னர்கள் காலத்தில் மேனாட்டு மொழி நூல்களும்சேகரித்து வைக்கப்பட்டன.

வேதாந்த சாத்திரம், வேதங்கள், தத்துவம், அரசியல், இலக்கியம், இலக்கணம், மருத்துவம் முதலிய பல துறைகளில் இங்கே ஏராளமான நூல்கள் உண்டு; சுவடிகளும் உண்டு.

நாயக்கர் கால அரண்மனையில் நந்நாயகமாக விளங்கும் இந்நூலகம் இன்று பல்வேறு நூல்களைப் பதிப்பித்தும் புதுப்பித்தும் அருந்தமிழுக்கு நற்றொண்டு ஆற்றி வருகிறது.

—ஆதாரம் : சரசுவதி மகாலும்
தஞ்சை வரலாறும்
O. A. நாராயணசாமி

161, பிரகாசம் சாலை சென்னை-108, ஜனசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் எஸ். எஸ். தியாகராஜன், ஆசிரியர் ப. மாணிக்கம்.

படிப்பகம்

www.padippakam.com

# இரைகள்...

—இரா. காமராசு

நாங்கள்
சீப்பு செய்பவர்கள்;
எங்கள் தலையிலோ—
பிறந்த ந[illegible]ல்
பரட்டை [illegible]ான
பொன்முடி!
நாங்கள் [illegible]
நரிப்பல்லும் மருந்தும் செய்து
பிறர்பிணி போக்கிடுவோம்;
எங்கள் உடம்புகளோ—
ஆதாம் ஏவாள் காலத்தையே
நினைவு படுத்துகின்றன.
நாங்கள்
மைனா, புறாக்களை
மாட்டச் செய்து
மட்டன் பிரியாணியாய்
மணக்கச் செய்திடுவோம்;
எங்கள் உணவையோ—
எச்சில் இலைகளிலேயே
தேடுகிறோம்.
நாங்கள்
கோரைகள் எடுத்து
வண்ணங்கள் தீட்டி
பாய்கள் முடைந்திடுவோம்;
எங்கள் படுக்கையறைக்கோ-
பகல் போனபின்னே
தினமும் பாதை தேடுகிறோம்.
நாங்கள்
பலரை மகிழச்செய்பவர்கள்;
எங்கள் வசந்தமோ—
பிரசவ ஆஸ்பத்திரியிலேயே
தொலைந்து போனது!
வயிறில்லாமல்
வாழ்வில்லை.
வயிறே
வாழ்வல்ல.
வயிறுகளையே
வணங்கி வந்தவர்கள்
இனி
வாழ்க்கையைத்
தேடப் போகிறோம்!

படிப்பகம்

www.padippakam.com

Regd. No. 9140 THAMARAI January 1991
W.P.P.No.TN/MS(N)54 Regd. as News Paper in Srilanka


ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்....
அது
அன் இலக்கு!
அவ த விளக்கு!

- எந்நாளும் நிலையான LI பாலிசிகள்!
அவைகள்
முழுமையான சேமிப்பு!
முறையான பாதுகாப்பு!
உங்கள்
வீட்டுக்கு மட்டுமல்ல
நாட்டுக்கும் தான்!

- உங்கள் எதிர்காலம்
இன்பமாய் அமைந்திட
எடுப்பீர் இன்றே
LIC பாலிஸிகள்!

அணுகவேண்டிய முகவரி :

# P. விஜயராமன்

(கோடி வணிகச் சாதனை முகவர் & இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவரின் மாமன்ற உறுப்பினர், திருத்துறைப்பூண்டி கிளை, தஞ்சாவூர்-கோ )

அலுவலகம் : Phone : 291

## ஜெயலெ ார்ஸ்

பொது வணிகம்

8 V, மேலசன்னதி, வே யம்-614 810

தரமான பொருள்கள்! தணிவான விலைகள்!
வரவேற்கும் கரங்கள்! வந்து நலம் பெறுங்கள்!


படிப்பகம்